விலை : 20.00 website : www.valampurii.lk
பக்கங்கள் : இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail : valampurii@sltnet.lk
valampurii@yahoo.com

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 மாசி 03 திங்கட்கிழமை (15.02.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 058

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.con
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

# அநீதிகளின் அதி உச்சத்திலேயேதான் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தினர்

## நிரந்தர தீர்வை தமிழர்களுக்கு வழங்குவது அவசியம் – ஜனாதிபதி

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் உள்ள இளைஞர்களுக்கு இடம்பெற்ற எல்லையில்லா அநீதிகளுக்கு முகம்கொடுக்க முடியாத கட்டத்திலேயே அவர்கள் ஆயுதம் ஏந்தினர்.

அவர்கள் ஆயுதப் போராட்டத்தை தொடங்கியமைக்கான காரணத்தைக் கண்டறிந்து, அம் மக்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன தெரிவித்துள்ளார்.


பொலநறுவை வெலிகந்த பிரதேசத்தில் தேசிய நீர் வழங்கல் திட்டத்தின் முதற்கட்டப் பணிகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்து 24ஆம் பக்கம் பார்க்க....



### போர்க்குற்ற விசாரணை இடம்பெறுமாயின்

# முன்னாள் போராளிகள் கைது செய்யப்படுவர்

## அமைச்சர் சம்பிக்க எச்சரிக்கை



(கொழும்பு) நாட்டில் இராணுவத்தினர் மீதான போர்க்குற்ற விசாரணை ஒன்று இடம்பெறுமாயின், புனர்வாழ்வுவளித்து விடுவிக்கப்பட்ட 12 ஆயிரம் விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்களை மீண்டும் கைது செய்து அவர்கள் மீதான போர்க் குற்றங்களையும் விசாரணை செய்யுமாறு அரசாங்கத்தை கோருவோம் என அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்களில் ஒருவரான சம்பிக்க ரணவக்க புதிய எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளார். (04ஆம் பக்கம் பார்க்க)

## பஷிலின் மற்றுமொரு மோசடி அம்பலம்



(கொழும்பு)

முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஷில் ராஜபக்ஷ 24ஆம் பக்கம் பார்க்க....

### புதிய அரசியலமைப்பு

## இன்றும் நாளையும் யாழ்.மக்கள் சந்திப்பு

(கொழும்பு)

புதிய அரசியலமைப்பு தொடரபில் யாழ்ப்பாண மக்களின் கருத்துக்களை பெறும் நடவடிக்கைகள் இன்று மற்றும் நாளைய தினங்களில் யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

இது, தொடர்பில் வடக்கு மக்களின கருத்துக்களை பெற வேண்டியது முக்கியமானது என, புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பில் மக்களின் கருத்துக் 02ஆம் பக்கம் பார்க்க....

# ஆங்கிலேயர் சிங்களவரிடம் கையளித்த தமிழர்களின் நாடு மீண்டும் வேண்டும்

### திவயின இதழுக்கு சம்பந்தன் நேர்காணல்



(கொழும்பு)

ஆங்கிலேயர்களால், சிங்களவரிடம் கையளிக்கப்பட்ட தமிழர்களின் நாடு மீண்டும் தமிழர்களுக்கே கையளிக்கப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

தென்பகுதி திவயின சிங்கள வார இதழுக்கு அளித்துள்ள நேர்காணலிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அந்நேர்காணலில் அவர் மேலும கூறுகையில், இந்தநாடு கடந்த ஒரு தசாப்த காலமாக சர்வதேச மட்டத்தில் தனிமைப் 24ஆம் பக்கம் பார்க்க....

# வடக்கின் புதிய ஆளுநராக ரெஜினோல்ட் குரே நியமனம்



(கொழும்பு)

வட மாகாணத்தின்புதிய ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் ரெஜினோல்ட் குரே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் நேற்று சத்தியப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார். 04ஆம் பக்கம் பார்க்க....

## விசாரணைப் பிரிவு கலைக்கப்படாது

(கொழும்பு)

பொலிஸ் நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவு கலைக்கப் படாது என அரசாங்கம் அறிவித் துள்ளது.


எவ்வாறான எதிர்ப்பு வெளியிடப்பட்டாலும் விசாரணைப் பிரிவின் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்படாது என அரசாங்கம் திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

அண்மையில் நடத்தப்பட்ட உயர்மட்டப் பேச்சுவார்த்தைகளின் போது இந்த விடயம் பற்றி தீர்மானிக கப்பட்டுள்ளது.

விசாரணைப்பிரிவினை கலைத்தால தற்போது 04ஆம் பக்கம் பார்க்க....

### மகிந்தவின் நிதி மோசடிகளை ஆராய

## சர்வதேச நாணய நிதியத்தின் விசேட குழு இலங்கை வருகை



(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் சட்ட ஆய்வு மற்றும் கணக்கீட்டு அதிகாரிகள் கொண்ட விசேட குழுவொன்று அடுத்த வாரமளவில் விஜயம் செய்யவுள்ளதாக தெரிவிக் கப்படுகின்றது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட 250 பில்லியன் டொலர்கள் பெறுமதியான வேலைத் திட்டங்கள் குறித்த கணக்குகளை ஆராயவே 24ஆம் பக்கம் பார்க்க....

## தனிச்சிங்கள மாவட்டமாக திருமலையை மாற்றத்திட்டம்

### சுரேஷ் பிரேமச்சந்திரன் குற்றச்சாட்டு



(திருகோணமலை)

திருகோணமலையை தனிச்சிங்கள மாவட்டமாக மாற்ற 30 ஆண்டு கால திட்டம் ஒன்றினை 2011ஆம் ஆண்டில் திட்டமிட்ட அரசு அதற்கான அமைச்சரவை அங்கீகாரத்தையும் பெற்று செயற்பட்டு வருவதாக முன்னாள் 04ஆம் பக்கம் பார்க்க....

## துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலை ஆசிரியை

திருமதி சுபத்திரா இராதாகிருஷ்ணன்

அவர்களின் பாசமிகு தாயார்

ஆறுமுகம் புவனேஸ்வரி அம்மையார்

இறையடி இணைந்த செய்தியால் துயரில்

இருக்கும் குடும்பத்தினருடன் நாமும்

துயர் பகிர்கின்றோம்.

**கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்**
**பாடசாலைச் சமூகம்** (3601)

## இன்றும் நாளையும்...

களை பெற நியமிக்கப்பட்ட குழுவின் தலைவர் சட்டத்தரணி லால் விஜேநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை வடக்கு மக்களின் கருத்துக்களை பெரும் நோக்கில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் அரசியல் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (செ-12)

WESTERN UNION MONEY TRANSFER உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும் தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளவும்

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-021222 5392 (சி-3699)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532



தவத்திரு ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் அவர்களின்
சகஜ் சமாதி தியானம்
(மிக இலகுவான ஆழ்ந்த தியானம்)
திகதி : பெப்ரவரி 16, 17, 18
நேரம் : மாலை 5 மணி
இடம் : மகேஸ்வரன் மணிமண்டபம், நல்லூர். (3603)
வாழும் கலை அமைப்பு - யாழ்ப்பாணம்
இல. 254, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 0779186343, 0771000750, 0712579504

## மரண அறிவித்தல்

### தில்லையம்பலம் சண்முகலிங்கம்

*பிறப்பு 29-11-1947 இறப்பு 12-02-2016*



சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் இல.157, ஸ்கந்தபுரம் கிளிநொச்சியை வதிவிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் சண்முகலிங்கம் 12.02.2016 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லையம்பலம்-சரஸ்வதியின் மூத்தமகனும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-சின்னம்மா அவர்களின் அன்பு மருமகனும், காலஞ் சென்ற சரஸ்வதி (கிளி) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கிருபாகரன் மற்றும் பிரபாகரன் (லண்டன்), விநோகரன்(கனடா), பிரதீபா (ஸ்கந்தபுரம்), சண்முகப்பிரியா (கிளிநொச்சி) ஆகியோரின் அன்புத் தந்தையும், தசிறூபா, ஜனகன், கோபு, யசோதா ஆகியோரின் அன்பு மாமனாரும், காவியா, நன்நிலா, இலக்கியா, இலட்ச்சியா, ஜெஸ்ரன், ஜெரூபா, பிவிசியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.157, ஸ்கந்தபுரம் கிளிநொச்சியில் இன்று (15-02-2016) திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் ஸ்கந்தபுரம் பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

ஸ்கந்தபுரம்,
கிளிநொச்சி. (C-3697)

தகவல்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## அகவை அறுபதில் பாதம் பதிக்கும் சேவை நாயகனை வாழ்த்துகிறோம்

### திரு. சந்திரசேகரம் சிதம்பரப்பிள்ளை



எழில் வளம் மிகு கிளிநொச்சி
மாநகரின் கிராம மக்களின்
தேவையறிந்து சேவை செய்த
திரு.சந்திரசேகரம் சிதம்பரப்பிள்ளை
அவர்கள் தான் சார்ந்த
இலங்கை மின்சார சபை மூலம்
கிராம மக்களின் மின் இணைப்புக்கு
பகல் இரவு என்றில்லாமல்
துவிச்சக்கரவண்டி மூலம்
பயணம் செய்து பணி செய்தமைக்காக
அவர் வாழ்வு நலம் பெறவும்
குடும்ப வாழ்வு உயர்வு எய்தவும்
எல்லாம்வல்ல
கிளிநொச்சி கந்தசாமிப் பெருமானை
வேண்டிப் பணிகின்றோம்.

அன்புடன் வாழ்த்தும்
மின் ஒளி பெற்ற கிளிநொச்சி
மாவட்ட மக்கள் (3602)

## முருகண்டி ஈஸ்வர ஆலய கும்பாபிசேகம் தொடர்பானது







**07-02-2016**

அன்று முருகண்டீஸ்வரர் ஆலயத்தில் ஆலய நிர்வாகத்தினரின் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்துக்கு கௌரவ உறுப்பினர்களாக வருகை தந்த கணேசானந்த சுவாமிகள் மகாதேவா ஆச்சிரமம், சின்மயா மிசன் சுவாமிகள் ஆனந்தகுமாரசாமி குருக்கள், சத்தியன் குருக்கள்,

எமது விசேட அழைப்பின் பேரில் வருகை தந்த ஜெகதீஸ் குருக்கள் (இலங்கை சேவாலங்கா மன்றம்), ஆனந்த குமாரக் குருக்கள் (கொழும்பு), இந்து கலாசார திணைக்கள கணக்காளர் திரு. காண்டீபன் மற்றும் கனகாம்பிகை அம்பாள் ஆலய குருக்கள் கனகாம்பிகை சிவன் ஆலய குருக்கள் அவர்களோடு வன்னியில் இருந்து வந்த ஆலய நிர்வாகத்தினரும் கலந்து கொண்டனர்.

பின்னர் ஆலயத்தில் நடந்த விசேட பூஜையின் பின் கும்பாபிசேகத்துக்கான நாள் தலைமைக் குருக்களால் எதிர்வரும் சித்திரை மாதம் 9ம் நாள் 22-04-2016 நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. ஆலய நிர்மாண பணிகளை மேற்கொள்ள பாரிய நிதி உதவி தேவைப்படுவதால் அன்பர்கள், அடியார்கள் தங்களால் இயன்ற உதவிகளை பணமாகவோ அல்லது பொருளாகவோ தந்து இவ் ஆலய பணியை நிறைவு செய்வதற்கு உதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இதுவரை காலமும் இவ்வாலய பணிக்கு உதவிகளை வழங்கிய இந்து கலாச்சார அமைச்சுக்கும் இவ்வாலயத்துக்கு நிதி வழங்கிய அடியவர்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவிப்பதோடு,

வளங்கொழிக்கும் வன்னியிலே தில்லையில் நடனமாடும் சிவன் திருமுருகண்டியில் அமர உள்ளார்.

பிள்ளையின் மணியோடு பிறைசூடி பெருமானின் மணி ஒலியும் கேட்க இருக்கின்றது. உள்ளம் உள்ளம் மகிழ்ந்து உங்களால் முடிந்த பங்களிப்பை தந்து நடக்கவுள்ள கும்பாபிசேகத்தில் கலந்து எம் பெருமானின் அருளை பெற்றுக் கொள்ளுமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம். பசரை மாநகரத்தில் அமைந்துள்ள அக்கிரி பெரு ஆற்றில் எடுத்து வரப்பட்ட லிங்க வடிவான எம் பெருமானுக்கு உரிய கல்லை வைப்பதற்கு ஆலோசனை நடந்து கொண்டிருக்கின்றது.

(C-3695)

**ஆலய அறங்காவலர் சபை**

# மகிந்தவுக்கு எதிராகவும் ஒழுக்காற்று நடவடிக்கை




ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒழுககாற்று நடவடிக்கைக்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் உள்ளாக்கப்படுவார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கை அரசாங்கத்தின் செய்தித்தாள் இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒழுங்குகளை மீறிய குற்றச்சாட்டின்பேரில் 30 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதென்று ஏற்கனவே சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு முடிவெடுத்துள்ளது.

இந்தநிலையில், உறுதிப்படுத்தக்கூடிய வகையில் மகிந்த ராஜபக்ஷ மீதான நடவடிக்கை தொடர்பான செய்தியும் வெளியாகியுள்ளதாக அந்த செய்தித்தாள் குறிப்பிட்டுள்ளது. (இ)




# இலங்கையில் அதிகாரப் பகிர்வை சர்வதேச தரப்பு கோர முடியாது!

## கம்மன்பில எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் அதிகாரப் பகிர்வினை மேற்கொள்ளு மாறு எந்தவொரு சர்வதேச தரப்பும் கோர முடியாது என பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில எம்.பி. தெரிவிததுள்ளார்.

சிங்கள வார இறுதிப் பத்திரிகையொன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்தார்.



அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

கடந்த ஆண்டில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கையைப் போன்று எந்தவொரு நாடும் இணை அனுசரணை வழங்கி தீர்மானம் நிறைவேற்றியதில்லை.


உலகில் அதிகாரப் பகிர்வு தொடர்பில் சர்வதேச பிரகடனங்கள் எதுவும் கிடையாது. ஏன் அதிகாரம் பகிரப்படவில்லை என எவராலும் இலங்கையிடம் கேள்வி எழுப்ப முடியாது.

அதிகாரப் பகிர்வு தொடர்பிலான பிரச்சினை உள்நாட்டு ரீதியானது. நோர்வே, பிரான்ஸ், ஜப்பான் போன்ற நாடுகளிடம் அதிகாரப் பகிர்வு குறித்து எவரும் கேள்வி எழுப்பியதில்லை.

குறைந்தபட்சம்அல்ஹூசைனின் தாய்நாடான ஜோர்தானில் அதிகாரம் பகிரப்படவில்லை.

இது குறித்து எவரும் இது வரையில் கேள்வி எழுப்பியதில்லை என உதய கம்மன்பில மேலும் தெரிவித்துள்ளார். (இ)

### காதலர் தினத்தில் பறக்கவிடப்பட்ட புறாக்கள்



நாட்டின் சமாதானத்தையும் காதலையும் அன்பையும் வலியுறுத்தும் முகமாக சமாதான செய்திக்குறிப்புக்களைத் தங்கிய 12 புறாக்கள் பருத்தித்துறையில் இருந்து கொழும்பு வத்தளைக்கு நேற்றைய தினம் பறக்கவிடப்பட்டன. பருத்தித்துறை சக்கோட்டை முனையில் உள்ள சென். சேவியர் விளையாட்டுக்கழக மைதானத்தில் இருந்து கொழும்பு வத்தளையில் உள்ள வீடு ஒன்றுக்கு இப்புறாக்கள் பறக்க விடப்பட்டன.

இந்நிகழ்வில் பருத்தித்துறை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஏ.எம்.ஐயர், பருத்தித்துறை பொலிஸ் நிலை பொறுப்பு அதிகாரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அதிபர் மற்றும் மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர். நேற்றுக் காலை 8.12 மணிக்கு விடபபட்ட புறாககள் ஒரு மணி நேரத்தில் கொழும்பு வத்தளையை அடைந்தன என அறிய முடிந்தது. (இ)

# வடக்கு மாகாணத்தின் புதிய ஆளுநராக ரெஜினோல்ட் குரே ஜனாதிபதி முன் சத்தியப்பிரமாணம்





வடக்கு மாகாணத்தின் புதிய ஆளுநராக ரெஜினோல்ட் குரே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் நேற்றைய தினம் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார். இந்த நியமனம் எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருவதுடன், இந்தப் பதவிப்பிரமாண நிகழ்வு ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்றைய தினம் முற்பகல் இடம்பெற்றது.

1988 ஆம் ஆண்டு மேல் மாகாணசபை உறுப்பினராகத் தனது அரசியல் பயணத்தை ஆரம்பித்த ரெஜினோல்ட் குரே அதன் பின்னர் பிரதி அமைச்சராகவும், அமைச்சராகவும் பதவிவகித்துள்ளர். மேலும் மேல் மாகாண சபையின்முதலமைச்சராகவும்அவர் பதவி வகித்துள்ளார். (இ-9)

### யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில்

# ஜனவரியில் 81 பேருக்கு எதிராக வழக்கு; ஒரு இலட்சத்து 17 ஆயிரம் ரூபா தண்டம்

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில்பொது இடங்களில்கழிவுகளைக்கொட்டியதற்கும் நோய் பரப்பும் நுளம்புகள் பெருகக்கூடிய சுற்றுச்சூழலை வைத்திருந்த குற்றத்திற்காக கடந்த ஜனவரி மாதம் மட்டும் 81பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு ஒரு இலட்சத்து 17 ஆயிரம் ரூபாய் தண்டப் பணமாக அறவிட்டுள்ளதாக யாழ்ப்பாணம்பொலிஸ்நிலைய சுற்றுச்சூழல் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

யாழ். பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் கடந்த ஜனவரி மாதம் யாழ்.பொலிஸ் நிலைய உதவி பொலிஸ் பரிசோதகர் சமன்குமார தலைமையில் விசேட நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன.

அந்தவகையில் பொது இடங்களில் கழிவுகளைக் கொட்டிய குற்றத்திற்காக 30 பேருக்கெதிராக நீதிமன்ற வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு 53 ஆயிரம் ரூபாய் தண்டமாகப் பெறப்பட்டுள்ளது.

மேலும் டெங்கு நுளம்பு மற்றும் தொற்றுநோய்கள் பரவுவதற்கு ஏதுவாக சுற்றுச்சூழலை வைத்திருந்த குற்றத்திற்காக 51 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு 63 ஆயிரத்து 500 ரூபாய் தண்டமாக அறவிடப்பட்டுள்ளது.

இந்த விசேட அதிரடி நடவடிக்கை தொடர்ச்சியாக யாழ். நகர்ப்பகுதியில் மேற்கொள்ளப்படவுள்ளதாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய சுற்றுச்சூழல் பிரிவினர் அறிவித்துள்ளனர். (இ-9)

### கடந்த மூன்று நாட்களுக்குள்

# யாழில் நுளம்பு பெருகும் சூழலைப்பேணிய 33 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல்

யாழ்.நகர்ப்பகுதியில்டெங்கு நுளம்பு பெருகுவதற்கு ஏற்ற வகையில் சுற்றுச்சூழலை வைத்திருந்த குற்றத்திற்காக கடந்த 3 நாட்களில் 33 பேருக்கு எதிராக யாழ். பொலிஸ் நிலைய சுற்றுச்சூழல் பிரிவினரால் யாழ்.நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் டெங்கு கட்டுப்பாடு விசேட செயற்றிட்டம் கடந்த 11,12,13 ஆம் திகதிகளில்நடைபெற்றது. இச்செயற்றிட்டத்தின் கீழ் பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அந்த வகையில் யாழ். நகர்ப்பகுதியில் மேற்கொண்ட விசேட விழிப்புணர்வு நடவடிக்கைகளின் போது சுற்றுப்புறச்சூழலை நுளம்பு பெருகுவதற்கு ஏதுவாக வைத்திருந்த 10 பேருக்கு எதிராக பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

அதேபோன்று கடந்த 12 ஆம் திகதி குருநகர்-2 பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையில் 10 பேருக்கு எதிராகவும் கடந்த 13ஆம் திகதி வண்ணார் பண்ணைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போது 13 பேருக்கு எதிராகவும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த விசேட நடவடிக்கையில் சுகாதார பரிசோதகர், இராணுவத்தினர், பொலிஸார் இணைந்து குழுவினராகவீடுவீடாகச்சென்றுஆலோசனைகளும் விழிப்புணர்வும் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-9)

# விசாரணைப்...

முன்னெடுக்கப்பட்டு வரும் அனைத்து விசாரணைகளையும் கைவிட வேண்டியேற்படுவதுடன், எதிர்வரும் காலங்களில் ஆரம்பிக்கப்பட உள்ள விசாரணைகளையும் மேற்கொள்ள முடியாத நிலைமை ஏற்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் புதல்வர், யோஷித ராஜபக்ஷ கைது செய்யப்பட்டதனைத் தொடர்ந்து நிதிக்குற்றவியல விசாரணைப் பிரிவினை கலைக்குமாறு கடுமையான அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வந்த நிலையிலேயே அரசாங்கம் மேற்படி அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

அத்தோடு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் விசாரணைகளை நிறுத்துவதில்லை என்ற முடிவில் உறுதியாக இருக்கும் ஜனாதிபதி எப்.சி.ஐ.டிக்குரிய அதிகாரங்களையும் விசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக பலப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

# வடக்கின் புதிய...

இந்த நியமனம் நாளை 16ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் நிலையில், இந்த சத்தியப் பிரமாணம் ஜனாதிபதி வாசஸ்தலத்தில் இடம்பெற்றுள்ளது.

ஆசிரியராக கடமையாற்றிய றெஜினோல்ட குரே, 1988ஆம் ஆண்டு மேல் மாகாண சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டு அரசியலுக்குள் பிரவேசித்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து பிரதி அமைச்சராகவும், அமைச்சராகவும் கடமையாற்றிய றெஜினோல்ட் குரே, மேல் மாகாண முதலமைச்சராகவும் செயற்பட்டுள்ளார்.

இனங்களுக்கு இடையில் ஒற்றுமையை ஏற்படுத்தும் வகையில் தான் செயற்படவுள்ளதாக வட மாகாணத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள ஆளுநர் றெஜினோல்ட் குரே தெரிவித்தார்.

மேலும் வட மாகாணத்திற்காக மத்திய அரசாங்கத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் 40 வீதம் மாத்திரமே கடந்த காலங்களில் செலவீடு செய்யப்பட்டுள்ளதாகவும், எஞ்சிய 60 வீத நிதி திறைசேரிக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

இதன்படி, இனிவரும் காலங்களில் அவ்வாறு செயற்படாமல் வட மாகாணத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படும் முழுமையான தொகையை தான் அபிவிருத்தி பணிகளுக்கு செலவிட எண்ணியுள்ளதாக வட மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே நம்பிக்கை வெளியிட்டார்.

தான் வட மாகாணத்திற்கு ஆளுநராக நியமக்கப்பட்டமையை இட்டு ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிப்பதாக அவர் குறிப்பிட்டார். (செ-12)

*(முன்னர் கிடைத்த செய்தி உள்ளே)*

# முன்னாள்...

கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கில ஊடகமொன்றுக்கு அவர் அளித்துள்ள பேட்டியிலேயே இதனை தெரிவித்துள்ளார்.

ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தலைவரும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பான அமைச்சருமான சம்பிக்க ரணவக்க மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் போர்க்குற்ற விசாரணைப் பொறிமுறையில் சர்வதேசத்தின் பங்களிப்பை நாங்கள் தீவிரமாக எதிர்க்கின்றோம்.

நாட்டில் போர்க்குற்ற விசாரணைகள் இடம்பெறும் பட்சத்தில் புனர்வாழ்வின் பின்னர் விடுவிக்கப்பட்ட 12 ஆயிரம் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களையும் மீண்டும் கைது செய்யுமாறு அரசாங்கத்தை கோருவோம்.

அரசாங்கம் அதனை செயற்படுத்த மறுத்தால் இராணுவத்தினருக்கும் பொதுமன்னிப்பு வழங்கப்பட வேண்டும்.

இதனை செய்யாவிடின் நல்லாட்சி அரசின் நல்லிணக்க முயற்சிகள் மிக மோசமாக பாதிக்கப்படும். எனினும் எனது கட்சி காணாமற்போனோர் தொடர்பான அலுவலகத்தை ஏற்படுத்துவதையும் உடல்கம ஆணைக்குழுவின் ஆலோசனைப் படி சான்றிதழ் வழங்குவதையும் ஆதரிக்கின்றது.

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக குழுக்களையும் கட்சி ஆதரிக்கின்றது. ஆனால் அதனால் பொதுமன்னிப்பை வழங்க முடியுமா என்ற கேள்வியே முக்கியமானது என தெரிவித்த சம்பிக்க ரணவக்க, வடக்கில் மத சுதந்திரம் இல்லை என்ற சர்ச்சைக்குரிய கருத்தையும் தெரிவித்துள்ளார். (செ-12)

# தனிச்சிங்கள...

நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இத்திட்டத்திற்கு வடமத்திய மாகாண அபிவிருத்தி திட்டம் என்ற பெயரில் பொலநறுவை, அநுராதபுரம், திருகோணமலை, மாத்தளை தம்புள்ளை உட்பட பல மாவட்டங்கள் உள்வாங்கபபட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்ட முன்வரைவு தொடர்பான கருத்தறிவதற்கான தமிழ் மக்கள் பேரவையின் ஆலோசனை கூட்டம் நேறறு திருகோணமலை தபால் நிலைய வீதியில் உள்ள குளக்கோட்டன் ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம்பெற்றது.

தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவரும் வைத்திய நிபுணருமான பூ.லக்ஷ்மன் தலைமையில் இக்கூட்டம் இடம் பெற்றது.

இதன்போதே, அவர் மேற்கண்டவாறு கூறினார்.அவர் மேலும் உரையாற்றுகையில்,

எதிர்வரும் 2030ஆம் ஆண்டில் திருகோணமலையின் சனத்தொகை 10 இலட்சம் என்ற நோக்கில் முன்னெடுக்கப்படும்.

இத்திட்டத்தின் மூலம் அமைக்கப்படும் புதிய தொழிற்சாலைகள், தொழில்நுட்ப நிலையங்கள் முதலியனவற்றிற்கு தெற்கில் இருந்து பெரும்பான்மையின மக்களை குடியேற்றி திருகோணமலையின் துறைமுகத்தை மையமாக வைத்து பல அபிவிருத்தி திட்டங்களையும் தொழிற்சாலைகளையும் அமைத்து தமிழர்களை அரிதாக்கும் திட்டம் அதுவாகும்.

அவ்வாறான திட்டங்களை தடுக்கக் கூடிய தீர்வுகளை நாம் முன்வைக்க வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை பாத்திரத்தை வகிக்கும் இரா.சம்பந்தனை நாடாளுமன்ற உறுப்பினராக அனுப்பிய இந்த மாவட்டத்தின் இவ்வாறான நிலையை நாம் சிந்தித்து செயற்பட வேண்டியுள்ளது என்றார். (செ-12)

## பெருந்திரளான மக்கள் முன்னிலையில்

# பேரவையின் தீர்வுத்திட்ட முன்வரைபு திருகோணமலையில் நேற்று வெளியீடு



தமிழ் மக்கள் பேரவையின் நிபுணர்குழு தயாரித்த அரசியல் தீர்வுத்திட்ட முன்வரைபை திருகோணமலையில் பொதுமக்கள் முன்னிலையில் வெளியீட்டு வைக்கும் நிகழ்வு நேற்று திருமலை தபால் நிலைய வீதியில் உள்ள குளக்கோட்டன் ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவரும் வைத்திய நிபுணருமான பூ.லக்ஷ்மன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில்பெருந்திரளானமக்கள்கலந்துகொண்டனர்.

மத குருமார்களின் ஆசியுடன் மக்கள் முன்னிலையில் பேரவையின் தீர்வுத்திட்டம் வெளியிடப்பட்டு வரைபின் விளக்கங்களும் தெளிவுபடுத்தப்பட்டது.

நிகழ்வில் உரையாற்றிய தமிழ்த் தேசியக் மக்கள் முன்னணியில் தலைவர் கஜேந்திர குமார் பொன்னம்பலம், புதிதாக உருவாக்கப் படவுள்ள அரசியலமைப்பில் தமிழர்களின் இனப்பிரச்சினை தொடர்பான தீர்வுத்திட்டம் உள்வாங்கப்பட வேண்டும்.

அத்துடன் புதிய அரசியலமைப்பு தொடர்பில் பேரவையினால் முன்வைக்கப்பட்டுள்ள தீர்வுத்திட்டம் தொடர்பில் நாம் முன்னெடுத்து செல்கின்ற மக்கள் சந்திப்புக்கள், துறைசார் நிபுணர்களுடனான கலந்துரையாடல்களிற்கு அனைவரும் ஒத்துழைப்பு தர வேண்டும் என கேட்டுக் கொண்டார். (செ)

# சுதந்திர கட்சியை சேர்ந்தவர்களுடன் என் குடும்பத்தினரும் பழிவாங்கப்படுகின்றனர்

## இடமளிக்க முடியாது என மகிந்த பேச்சு

(கொழும்பு)

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஆதரவாளர்கள் பலரை ஒழுக்காற்று நடவடிக்கை எனக் கூறி கட்சியிலிருந்து வெளியேற்ற எடுக்கப்படும் முயற்சி முட்டாள்தனமானது. உள்ளூராட்சி மன்றங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளுக்கான கூட்டத்திற்கு உள்ளூராட்சி மன்றங்களைச் சேர்ந்த உறுப்பினர்களில் 95 சதவீதத்தினர் வருகை தந்துள்ளனர்.

இவர்களுக்கு எதிராகவும் ஒழுக்காற்று நடவடிக்கை என்று கூறி, இவர்களையும் கட்சியிலிருந்து வெளியேற்றினால், இவர்கள் செல்வதற்கு வேறு ஒரு இடம்தேட வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

நீர்கொழும்பு, கொச்சிக்கடை பிரதேசத்தில் அமைந்துள்ள ரன்வெல் ஹோட்டலில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களுக்கான ஒன்றுகூடலில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். சட்டவிரோத பொலிஸ் பிரிவொன்று அமைக்கப்பட்டு எனது குடும்பத்தினரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்களும் பழிவாங்கப்படுகிறார்கள். இவ்வாறு பழிவாங்கல்கள் தொடர்வதற்கு இடமளிக்க முடியாது. அந்தப் பொலிஸ் பிரிவு கலைக்கப்படா விட்டால் தொடர்ந்து அவர்களுடன் இருக்கமுடியாது எனவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறினார். இந்தக் கூட்டத்தில் சகல உள்ளூராட்சி மன்றங்களிலும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைப் பிரதி நிதித்துவப்படுத்தும் பெரும்பாலானோர் வருகைத் தந்திருந்தனர். நாடாளுமன்ற உறுப்பினர்களான நாமல் ராஜபக்ஷ, வாசுதேவ நாணயக்கார, டி.வி.குணசேகர, பவித்ரா வன்னியாராச்சி, பிரசன்ன ரணதுங்க, ஜோன்ஸ்டன் பெர்ணாந்து, ரோஹித்த அபே குணவர்தன, தினேஸ் குணவர்தன, ஜயந்த கெடகொட, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பசில் ராஜபக்ஷ, சரத்குமார குணரத்ன, முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் செய்தி சேகரிப்பதற்கு ஊடகவியலாளர்களுக்கு அனுமதி அளிக்கப்படவில்லை. கடைசி ஒரு மணித்தியாலத்தில் மாத்திரம் கூட்டம் நடைபெற்ற இடத்துக்குச் செல்ல ஊடகவியலாளர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டிருந்தது. (செ-12)


**சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வது)**
**காணி கட்டடம் கிணற்றடி விற்பனை அறிவித்தல்**

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான யாழ்-காங்கேசன்துறை வீதியில் சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமை காரியாலயத்தின் எதிர்ப் பக்கமாகவும் சுன்னாகம் வர்த்தக வங்கிக்கு அருகாமையில் அமைந்த "பணிக்கலாவத்தையும் வாரிகலட்டியும் கிணற்றடியும்" என குறிப்பிடுகின்ற ஆதன இலக்கம் 3507 உடைய 05 பரப்பு 12.5 குளி கொண்ட காணி கட்டடம் கிணற்றடி விற்பனைக்கு உண்டு.

விற்பனை தொடர்பில் மீளளிக்க முடியாத வைப்பு ரூபா 1000/= மீளளிக்கக் கூடிய வைப்பாக ரூபா 5000/= யும் சங்கத்தில் 29.02.2016 திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னராக செலுத்தி விண்ணப்பப் பத்திரத்தினை பெற்றுக்கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்ப படிவங்கள் 29.02.2016ந் திகதிக்கு முன்னர் பொதுமுகாமையாளர் பல நோக்குச் சங்கம் சுன்னாகம் எனும் முகவரிக்கு தபால் உறையில் **"காணிக் கேள்விப்பத்திரம்"** எனக் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் மட்டுமே அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் 05.03.2016ம் திகதி காலை 10 மணிக்கு சங்க தலைமை காரியாலய மண்டபத்தில் திறக்கப்படும்.

மேலதிக விபரங்கள் தேவைப்படின் சங்க தலைமைக் காரியாலயத்தில் காரியாலய நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**பொது முகாமையாளர்**
**தொ.இல :- 0213212380**

**14.02.2016**

(C-3751)



**சம்பந்தர் மொடேர்ண் கிளினிக்**
**08, இராமையாச் செட்டியார் வீதி, யாழ்ப்பாணம்.**

**கிளை- சங்கானை மக்கள் வங்கி முன் வீதி,**
**(முன்னாள் நாகநாதன் வைத்தியசாலை சங்கானை)**

வைத்திய நிபுணர் சேவை ஆரம்ப காலம் முதல் இன்றுவரை வைத்திய நிபுணர்களின் நிபுணத்துவ வைத்திய சேவையை வட மாகாண மக்களுக்கு தொடர்ந்தும் வழங்கி வருகின்றது.

கிழமை நாட்களில் மாலை 4 மணிமுதல் 6 மணிவரையும்
சனி, ஞாயிறு, விடுமுறை நாட்களில்
மதியம் 12 மணிமுதல் 2மணி வரையும்

எல்லா நோய்களுக்குமான வைத்திய நிபுணர்களின் சேவையை சிரமமின்றி பெற்றுக் கொள்ளலாம்.

ECG , XRAY, U/SCAN, MEDICAL LABORATORY கொழும்பில் பிரபல்யமான வைத்திய ஆய்வுகூட நிலையங்களான ஆசிரி, டேடன்ஸி, நவலோக, சீமெட், மெடிகுயிக் என்பவற்றின் இரத்தம்/ சிறுநீர் பரிசோதனைகள் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்.

சங்கானையில்:-
- காலை 8 மணிமுதல் இரவு 9 மணிவரை (OPD) வெளிநோயாளர் பிரிவு
- யாழ். போதனா வைத்தியசாலையில் வைத்திய நிபுணர்களின் சேவை

இரத்தம்/ சிறுநீர் பரிசோதனைகள் நடைபெறுகின்றன.

தொடர்புகள் :- 0778730129

(3600)



திருமறைக்கலாமன்றத்தின் ஏற்பாட்டில் கலாமன்ற கலைத்தூது அழகியற் கல்லூரி மாணவிகள் வழங்கிய பொழிவும் தெளிவும் என்ற ஆடல் அளிக்கை நிகழ்வு அண்மையில் கலாமன்ற கலைத்தூது கலையரங்கத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் மெய்யியல் துளிகள் என்ற நீ.மரியசேவியர் அடிகளாரின் ஆங்கிலக் கட்டுரைத் தொகுப்பு நூலினதும் உமாபதி சிவாச்சாரியார் அருளிய வினா வெண்பா என்ற இறுவெட்டின் வெளியீடும் இடம் பெற்றது.

# வெளியில் இருந்து வரும் பணம் 2 இலட்சத்திற்கு மேற்பட்டால் புதிய நடைமுறையை கடைப்பிடிக்குமாறு அறிவுறுத்தல்

(கொழும்பு)

இரண்டு இலட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட உள்நாட்டுக்குள் வரும் பணத்தை கண்காணிப்பதற்கான ஒழுங்கு நடைமுறைகளை இலங்கை மத்தியவங்கி இறுக்கமாக கடைப்பிடிக்கவுள்ளதுடன் பணம் பெறும்மூலத்தைபணம்பெறும் வங்கிக்கு வழங்குமாறு இலங்கையிடமிருந்து கோரப்பட்டுள்ளது.

இந்தப் புதிய நடவடிக்கையாளர் நடைமுறை தொடர்பாக இலங்கை மத்திய வங்கியின் நிதி புலனாய்வுப் பிரிவு வர்த்தமானியில் பிரசுரித்துள்ளது.

இலங்கையர்கள் சுவிஸ் வங்கியில் கொண்டுள்ள இரகசியமான பல வங்கிக் கணக்குகள் தொடர்பில் கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க இந்தப் பணத்தை நாட்டுக்குள் கொண்டு வருவதற்கு எந்தக் கேள்வியும் கேட்கப்படாது என்ற கொள்கையினூடாக தீர்வு காண சந்தர்ப்பம் வழங்கியிருந்தார்.

அத்துடன்நாட்டுக்கு வெளியேயுள்ள 10 தொடக்கம் 15 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை நாட்டுக்குள் கொண்டு வருமாறு அதற்கேற்ற வட்டி வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்.

பயங்கரவாதச் செயற்பாடுகள் மற்றும் சட்டவிரோத பணப்பரிமாற்றங்களை கட்டுப்படுத்தும் நோக்குடனேயே இந்தப் புதியநடைமுறையின் நோக்கமாகவுள்ளது.

போலியானபெயர்களிலோ அல்லது அநாமதேய கணக்குகளை வங்கிகளோ அல்லது நிதிக்கம்பனிகளோ கொண்டிருப்பது சட்டவிரோத மானதாகக் கருதப்படும்.அத்துடன் நபர்களின் பெயர்களில் அல்லாமல் இலக்கங்களின் மூலம் மட்டும் அடையாளப்படுத்தப்படும் கணக்குகளை ஆரம்பிப்பதும் இதன் மூலம் தடுக்கப்படுகிறது.

குறிப்பாக அரசியல் ரீதியாக அடையாளப்படுத்தப் படுகின்ற நபர்களுடன் நிதி நிறுவனங்கள்கொடுக்கல்வாங்கல்களைச் செய்யும் போது இந்த நடைமுறைகள் கடுமையாக அமுல்படுத்தப்படும்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில்நிதிநிறுவனங்கள் அவர்களின் சொத்துக்கள் நிதி மூலங்கள் அல்லது சொத்துக்கள் அல்லது நிதியின் பயன்பாட்டு உரிமையாளர்கள் தொடர்பில் உன்னிப்பான விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதுடன் தொடர் கண்காணிப்பும் இடம்பெறும்.

மேற்படி புதிய நடைமுறைகள் 2006 ஆம் ஆண்டு நிதிப்பரிமாற்ற அறிக்கை சட்டத்திற்கு அமைவாக உருவாக்கப்பட்டுள்ளதுடன் நிதி கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுபவர்கள் மீது இது அமுல்படுத்தப்படவுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையின் கீழ் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சின் கீழ் மத்திய வங்கி உள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ


## வேலை வாய்ப்பு

வெளிக்கள உத்தியோகத்தர் பதவி
NGO துறையில் 3 வருட அனுபவம்
மோட்டார் சைக்கிள் வைத்திருப்பதுடன்
சாரதி அனுமதிப்பத்திரம்
விண்ணப்ப முடிவு: 18.02.2016
E-mail:senthu@eureka.lk
Mob:0772242394
(3587)


கரணவாய் கலட்டி பகுதியில்

# இரவு வேளைகளில் திருடர் நடமாட்டம்

(கரணவாய்)

கரணவாய் கிழக்கு கலட்டி வீதி பிரதேசத்தில் கடந்த சில நாட்களாக இரவு வேளையில் திருடர்களின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுவதாக அங்குள்ள மக்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு வேளை மேற்குறித்த பிரதேசத்தில் உள்ள குறித்த சில வீடு களின் கதவுகள் உடைக்கப்பட்டு திருட்டு முயற்சிகள் இடம்பெற்றன. ஆனால் அத்திருட்டுமுயற்சிகள் வீட்டில் உள்ளவர்கள் மற்றும் அயலவர்கள் விழிப்படைந்ததால் கைவிடப்பட்டதுடன்திரு டர்களும் தப் பியோடியு ள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய திருட்டு முயற்சி குறிப்பு வைத்தே இடம் பெற்றிருக்கலாம் என அங்குள்ள மக்கள் தெரிவித்துள்ளனர். ஏனெனில் கடந்த 2 நாட்களாக சுமார் 25வயது மதிக்கத்தக்க யுவதி ஒருவர் இப்பிரதேசத்தில் உள்ள சிலரது வீடுகளுக்கு சென்று தனக்கு இருதயத்தில் பாதிப்பு உள்ளதாகவும் அதற்கு சத்திர சிகிச்சை செய்ய பணம் தேவைப்படுவதாகவும் அதற்கு உதவி செய்யுமாறு வீடு வீடாக சென்றுள்ளார். அதற்குப் பிறகு அவ் யுவதி அப் பிரதேசத்தில் தென்படவில்லை. இதன் பின்னரே இத் திருட்டு முயற்சிகள் இடம் பெற்றது. (இ-5)


# சோபிததேரரின் மருத்துவ செலவை செலுத்த பாராளுமன்றத்தின் அனுமதி கோரல்

மறைந்த மாதுளுவாவே சோபித தேரருக்கு சிங்கப்பூரில் மேற்கொள்ளப்பட்ட அவசர மருத்துவச் சிகிச்சைகளுக்குரிய செலவாக 17.2 மில்லியன் ரூபாவைச் செலுததுவதறகு பாராளுமன்றத்தின் அனுமதியைப் பெறுவதற்காக கடந்த வியாழக்கிழமை மேற்படி செலவினம் தொடர்பான அறிக்கை பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

மேற்படிசெலவினத்தொகை வெளிவிவகார அமைச்சினால் வழங்கப்படவுள்ளது.

அத்துடன் பிரசெல்ஸ், குவைத் ஆகிய இடங்களிலுள்ள இலங்கை அரசின் பணிகளுக்கு கார்களை கொள்வனவு செய்வதற்கு 18.8 மிலலியன் ரூபாவும் ஜெனிவா மற்றும் சென்னையிலுள்ள அலுவலகங்களின் பாவனைக்கு வாகனங்களை கொள்வனவு செய்வதற்கு 9.1 மில்லியன் ரூபாவும் 2013 ஆம் ஆண்டு கடனடிப்படையில் ஹெலிகொப்டர் கொள்வனவு செய்யப்பட்டமைக்கான கொடுப்பனவுக்காக 12.2 பில்லியன் ரூபாவும், மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு குறிப்பாக கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சத்துள்ள உணவு வகைகளுக்காக மேலதிகமாக 500 மில்லியன் ரூபாவும் பாராளுமன்ற ஊழியர்களின் ஓய்வூதிய கொடுப்பனவாக 40 மில்லியன் ரூபாவுக்குமாக பாராளுமன்றத்தின் அனுமதி கோரப்பட்டுள்ளது. (3)

## கண்ணீர் காணிக்கை



(சி-3700)

**சி.சித்திரவடிவேல் (ஓய்வு நிலை கோட்ட கல்விப் பணிப்பாளர், கோப்பாய்)**

கோட்டத்தின் காவலனாய் நற்பணியாளனாய்
ஆற்றிய சேவை தனை எந்நாளும் மறவோம்
எம்மவர்க்கு உறுதுணையாய்
எந்நாளும் இருந்தீரே ஐயா
உமது ஆத்ம சாந்திக்காய் இறைவனை
பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர்கள் சங்கம்,**
**கோட்டக்கல்விப் பணிப்பாளர்,**
**பணியாளர்கள், கோப்பாய்.**

## இராசி பலன்

15.02.2016
(மாசி 03, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.28 மணிக்கு,
அட்டமி பின்னிரவு 4.28 மணிவரை
பரணி முற்பகல் 8.15 மணிவரை
சுபநேரம் 12.33-2.03 மணிவரை
இராகுகாலம் 8.03-9.33 மணிவரை
கார்த்திகை விரதம் வளவன்

| | | | |
|---|---|---|---|
| | சந் | | |
| சூரி கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் சுவாதி பகல் 1.16 இற்கு இடப-சந் | | |
| புத சுக் | | | குரு ராகு |
| | சனி | செவ் | |

**மேடம்** கொடுத்த வாக்கை காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணம் மேலோங்கும், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும், புதிய சொத்துக்கள் வாங்கும் எண்ணம் உருவாகும்.

**இடபம்** தொலைபேசி வழியில் ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம், உள்ளென்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங் கண்டு கொள்ளும் சூழ்நிலை உருவாகும்.

**மிதுனம்** அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், எடுத்த செயலை முடிக்க ஒரு முறைக்கு இருமுறை அலைய நேரிடலாம்.

**கடகம்** ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**சிம்மம்** கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், சந்தோசமான சம்பவங்கள் நடைபெறும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு, உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**கன்னி** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் ஏற்படலாம், அதிகம் செலவாகும் என நினைத்த காரியம் குறைந்த செலவில் முடிவுக்கு வரும், ஆன்றோர்களின் சந்திப்புகள் இடம் பெறலாம்.

**துலாம்** குடும்பத்தில் எதிர்பாராத வகையில் சில கருத்து முரண் பாடுகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், பணிகளில் சில இடையூறுகள் ஏற்படும், போசன சுகக்குறைவான நாள்.

**விருச்சிகம்** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், இல்லத்தில் நல்ல சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, பணத்தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**தனுசு** கடன்சுமை குறைய வழிவகை செய்வீர்கள், புகழ்மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும், செய்தொழில் மேன்மையுண்டு

**மகரம்** போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், சுப செய்திகள் வந்து சேரும் நாள், பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவதில் அக்கறை காட்டுவீர்கள்.

**கும்பம்** வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், மாதர் நட்புண்டு, முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், சுபகாரியச் செலவுகள் ஏற்படலாம்.

**மீனம்** முத்தான வாய்ப்புகள் இல்லம் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பால் சிந்தை மகிழ்வீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

# முள்ளிவாய்க்கால் நினைவுகளை மறக்க முடியாது

## முன்னாள் துணைவேந்தர் பாலசுந்தரம்பிள்ளை தெரிவிப்பு

இலங்கை வரைபடத்தில் முள்ளிவாய்க்கால் என்றும் அழியாத இடத்தைப் பிடித்துள்ளது.

எல்லோருடைய மனதிலும் முள்ளிவாய்க்கால் நினைவுகள் இருக்கும் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொ.பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

காப்புறுதி நிறுவனமான AIA குழுமத்தின் இலங்கை நிறுவனமான AIA இன்ஷூரன்ஸ் லங்கா PLC நிறுவனம் யாழ். நகரில் வாடிக்கையாளர் உறவு மற்றும் சேவைத்தர மேம்படுத்தல் என்ற தொனிப் பொருளின் கீழ் ஏற்பாடு செய்திருந்த கருத்தரங்கு யாழ். ஞானம்ஸ் ஹோட்டலில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

2009 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்நிறுவனம் வளர்ச்சிப் பாதையில் செல்வது மகிழ்ச்சியளிக்கிறது.

ஒரு நிறுவனம் ஆரம்பிக்கப்படும்போது அதில் பங்கு கொண்டு விட்டு அந்நிறுவனத்தின் வளர்ச்சியை எதிர்பார்க்கும் போது அதன் வளர்ச்சியில் அல்லது நடவடிக்கைகளில் தொய்வு ஏற்பட்டால் மனக்கவலை ஏற்படும்.

போர்க்காலத்தில் யாழ்ப்பாணத்தில் பணிபுரியும் போது பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டிருந்தோம். நான் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக இருந்த காலகட்டத்தில் ஒரு தொலைபேசி மட்டுமேயிருந்தது.

அதில்தான் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் அனைவரும் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டனர். அது மட்டுமன்றி வெளிமாவட்டங்களுக்கு மாணவர்கள் சென்று வருவதற்கான அனுமதி அட்டைகளைப்பெறுவதில் எல்லாம் பல சிரமங்களை எதிர்கொண்டோம்.

12 மணித்தியாலங்கள் கூட ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கும். வெளியில் தலைகாட்ட முடியாமல் எவ்வளவோ துன்பப்பட்டோம்.

கப்பலில் பொருட்கள் கொண்டு வரப்படும். அத்தியாவசியப் பொருட்களை பெறக்கூட அலைந்து திரியநேரிட்டது. 50 கிராம் உள்ளி கேட்டாலும் பாரியதராசில்தான் அளந்து கொடுப்பார்கள். அப்படிப்பட்ட பல இக்கட்டான சூழ்நிலை நிலவியது.

ஆனால் தற்போது பல முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தை பொறுத்தமட்டில் 6 ஆயிரம் மாணவர்கள் படித்தால் ஒவ்வொருவரிடமும் 2 சிம் அட்டைகள் நவீன தொலைபேசிகள் உள்ளன.

இவ்வாறு பாரிய முன்னேற்றங்களை குறுகிய காலத்தில் அவதானிக்க முடிந்துள்ளது எனக்கூறிச் சிரித்தார்.

யாழ்ப்பாணத்திற்கு தற்போது வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையும் அதிகரித்துள்ளது. சுற்றுலாத்துறை மிகவும் வேகமாக இங்கு வளர்ந்து வருவதை இது எடுத்துக்காட்டுகின்றது.

வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் தாங்களாகவே இங்கு ஒவ்வொரு சுற்றுலாத் தளங்களுக்கும் சென்று வருகின்றனர்.

சுற்றுலாத்தளங்கள் தொடர்பான புத்தகங்கள் அவர்களிடம் உள்ளன. அவற்றைக் கொண்டு ஒவ்வொரு சுற்றுலாத்தளங்களுக்கும் சென்று பார்வையிடுகின்றனர். யாழ்ப்பாணம் மீண்டும் மிடுக்குப் பெறுவதையே இது வெளிப்படுத்தியுள்ளது. எமக்குக்கிடைக்காதது எமது பிள்ளைகளுக்குக் கிடைக்க வேண்டும். அதுவே ஒவ்வொரு பெற்றோருடையதும் எதிர்பார்ப்பாகும்.

எமது பிள்ளைகள் நாம் அனுபவிக்காத சுதந்திரத்தையும் வளங்களையும் அனுபவிக்க வேண்டும். எமது பிள்ளைகளுக்கு கல்வி அறிவைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். கல்வியில் பின்தங்கியே நாம் உள்ளோம்.

யாழ்ப்பாணம் மட்டுமல்ல முழு இலங்கையுமே கல்வியில் பின்தங்கித்தான் உள்ளது.

இலங்கையில் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் 50 வீதமானவர்களே சித்தியடைகின்றனர். 50 வீத சித்தி இலங்கையில் கிடைக்கவில்லை. இதேவேளை இந்தியாவில் ஒரு இலட்சத்து 60 ஆயிரம் பேர் இங்குள்ள சாதாரண தரப்பரீட்சைக்கு ஒப்பான பரீட்சைக்குத் தோற்றி 92 வீதமானவர்கள் சித்தியடைந்துள்ளனர். சித்தியடையாதவர்கள் இரண்டாவதுதடவை பரீட்சைக்குத் தோற்றி அவர்களிலும் பெரும்பாலானவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

இதனால் சித்தியடைந்தோர் வீதம் அதிகரித்துள்ளது. இலங்கையில் பாடங்களின் எண்ணிக்கையும் பாடங்களில் பரீட்சைக்கான பிரிவுகளும் அதிகம் எனவும் அவர் சுட்டிக் காட்டினார். இதேவேளை யாழ்ப்பாணத்தவர்களின் பலமே கணிதம் தான். ஆனால் கணித பாடத் தால் உயர்தரம் செல்ல முடியாத நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

வெளிநாடுகளில் எமது மாணவர்களின் கணிதத் திறமையைபுகழ்கின்றனர். எனவே யாழ்ப்பாணத்தவர்களின் கணிதத் திறனை மீண்டும் வலுப்படுத்த வேண்டும்.

அதன் மூலமே எமது மாணவர்களின் கல்வியை முன்னேற்ற முடியும்.

அதேவேளை விஞ்ஞானக் கல்வி போதாமலுள்ளது. இலங்கையில் 10 ஆயிரம் தாதியர்கள் தேவைப்படுகின்றனர். 10 ஆயிரம் பேருக்கு நாடளாவிய ரீதியில் வெற்றிடம் உள்ளது. அதற்கு உயிரியல் பிரிவில் 3 பாடங்கள் சித்தியடைய வேண்டும். எனவே விஞ்ஞானக்கல்வியை விரிவாக்கம் செய்ய வேண்டியுள்ளது.

அவ்வாறு செய்தால் இலங்கையில் 2 ஆவது பெரிய நகரமாக யாழ்ப்பாணத்தை மாற்றமுடியும். இந்தியாவின் சென்னை, ஐதராபாத், பெங்களூர் போன்று யாழ்ப்பாணத்தில் மனிதவளம் உள்ளது. திறமையான மாணவர்கள் உள்ளனர். அவர்களின் திறமைகளைப் பயன்படுத்த வேண்டும்.

எங்களிடம் எல்லாம் இருக்கிறது. மாகாணசபை இருக்கிறது. முதலமைச்சர் இருக்கிறார். அமைச்சர்கள் உள்ளனர். மாகாணசபையை துடிப்பானதாக மாற்றவேண்டும். அவ்வாறு மாகாணசபை இருக்கவேண்டும்.

சின்னத்திரையில் சீரியல் பார்ப்பது போன்றுள்ளது மாகாணசபை அமர்வு என்று மாகாணசபை உறுப்பினர் கலாநிதி சர்வேஸ்வரன் கூறியுள்ளார்.

எனவே மக்கள் சிந்திக்க வேண்டும். வேலைவாய்ப்பைப் பெருக்கு; வேலை வாய்ப்பை வழங்கு; பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய் என்று மாகாண சபையை துடிப்புடன் இருக்கச் செய்ய வேண்டும். மாகாணசபையை வலுப்படுத்த வேண்டும். உன்னால் முடியும் என்று ஊக்கப்படுத்த வேண்டும்.

எம்மால் ஊக்கப்படுத்தக் கூட முடியவில்லை.

யாழ். நகரை அல்பிரட் துரையப்பா விரிவுபடுத்தினார். அவருக்குப் பிறகு எவரும் அத்தகைய முயற்சியில் ஈடுபடவில்லை. யாழ். நகரை இன்னும் மெருகூட்ட வேண்டும்.

நல்ல தலைவர்கள், பொறுப்புள்ள தலைவர்கள் வேண்டும். நல்ல முறையில் பணி செய்தால் எமது மாகாணம் முன்னேறும். எம்மிடம் நிறைய வளம் உள்ளது. உலகத்தில் மிகச்சிறந்த பிரதேசம் யாழ்ப்பாணம். என்ன பயிர்ச்செய்கை வேண்டுமென்றாலும் இங்கு செய்யமுடியும்.

கடலுணவு என்ன வேண்டும் என்றாலும் இங்கு கிடைக்கும்.

எனவே எமது பிள்ளைகளை முதலில் பாடசாலைக்கு அனுப்புங்கள். பாடசாலை பருவத்தில் ஒருவன் அடைவதை பின்னர் எக்காலத்திலும் அடைவதில்லை. பிள்ளை முதலில் பாடசாலைக்குச் செல்லவேண்டும்.

அமெரிக்கர்கள் பாடசாலைக் கல்விக்கு அதிகளவு முக்கியத்துவம் கொடுக்கின்றனர். அந்நிலை இங்கும் உருவாக வேண்டும்.

அதேவேளை யாழ்ப்பாணத்தில் உள்ள நகைக்கடைக்காரர்களிடம் நான் மன்றாட்டமாகக் கேட்கின்றேன்.

உங்கள் கடைகளுக்கு முன்பு எந்தவொரு சிறுவர்களையும் நிறுத்தி அவர்களை வரவேற்பாளர்களாகப் பயன்படுத்தாதீர்கள்.

அதேவேளை ஏனைய கடை உரிமையாளர்களிடமும் கேட்டுக்கொள்கின்றேன். 14 வயதுக்குட்பட்ட யாரையும் தொழிலுக்கு இணைக்காதீர்கள். அவர்கள் படிக்க வேண்டும். அவர்களின் கல்விக்கு உதவுங்கள்.

போர் இடம்பெற்றபோதும் 5 வருடத்தில் உலகத்தில் எங்கும் இல்லாத அளவுக்கு வசதியாக வாழக்கூடிய இடமாக யாழ்ப்பாணம் மாறியுள்ளது.

எனவே கல்விக்கு முன்னுரிமை கொடுங்கள். இந்த நிறுவனம் கல்விக்கு அதிகளவில் முன்னுரிமை கொடுத்துள்ளது. முள்ளிவாய்க்காலில் பாடசாலையைப் புனரமைத்துக் கொடுத்துள்ளது.

இலங்கை வரைபடத்தில் முள்ளிவாய்க்கால் என்றும் அழியாத இடத்தைப் பிடித்துள்ளது. எல்லோருடைய மனதிலும் முள்ளிவாய்க்கால் நினைவுகள் இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)



யாழ். புங்கன்குளம் வீதியில் அமைந்துள்ள வீடொன்றில் மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) அலுவலக திறப்பு விழா நேற்று முன்தினம் நண்பகல் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா நாடாவெட்டி அலுவலகத்தை திறந்து வைத்தார்.

## சிஎஸ்என் நிறுவன கைமாற்றல் குறித்து அரசாங்கம் விழிப்பாகத்தான் உள்ளது

### ஊடக அமைச்சர்

(கொழும்பு)

யோஷித ராஜபக்ஷவின் கார்ல்ட்டன் நெட்வேக் நிறுவனத்தின் உரிமம் மாற்றப்பட்டு புதிய முகாமை நியமிக்கப்படவுள்ளமை குறித்து ஊடக அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

பணச்சலவை சட்டத்தின் கீழ் யோஷித உள்ளிட்டவர்கள் கைது செய்யப்பட்ட நிலையிலேயே இந்த முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. புதிய கைமாற்றலுக்கு கைது செய்யப்பட்டுள்ளவர்களே பின்னால் இருந்து செயற்படுவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தநிலையில் புதிய முகாமைக்கு ஊடக நிலையத்தை மாற்றி நிதி நட்டம் தொடர்பில் எதிர்மறையான விளம்பரங்களை மேற்கொள்ள முயலலாம் என்று பிரதி ஊடக அமைச்சர் கருணாரட்ன பரணவிதாரண சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

எனினும் இதற்கு அரசாங்கம் ஆதரவளிக்காது என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, தேசிய நிகழ்வுகள் மற்றும் சர்வதேச கிரிகெட் போட்டிகளுக்கான ஒளிபரப்பு உரிமங்கள் அரச நிறுவனமான ரூபவாஹினிக்கே வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ)

## ஸ்ரீ ஞானஸ்கந்த யாகம்

(யாழ்ப்பாணம்)

இந்தியாவின் கேரளாவில் இருந்து இலங்கைக்கு வருகை தந்துள்ள ஸ்ரீ சத்குரு சரவணபவபாபாவின் ஸ்ரீ ஞானஸ்கந்த யாகம் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 7 மணியளவில் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் நடைபெறவுள்ளது.

இவ் யாகத்தில் அனைவரையும் கலந்து பயனடையுமாறு ஆலய ஆதீன கர்த்தா கேட்டுள்ளார். (இ-5)

## செல்லப்பா வீதியை புனரமைக்க கோரிக்கை

சாவகச்சேரி கெற்பேலி கிராமத்தின் மத்தியிலுள்ள செல்லப்பா வீதியானது 50 ஆண்டுகளுக்கு மேலாக திருத்தம் செய்யப்படாமல் குன்றும் குழியுமாக மணல் வீதியாக உள்ளது.

இதில் 200 மீற்றர் நீளமான பகுதி மட்டும் கடந்த ஆண்டில் கிரவல் மூலம் புனரமைப்புச் செய்யப்பட்டிருந்தது.

2 கிலோமீற்றருக்கும் அதிகமான தூரத்தைக் கொண்ட இவ்வீதியில் வெறும் 200 மீற்றர் தூரத்தை மட்டும் புனரமைப்பு செய்யாதிருப்பது பொருத்தப்பாடற்ற செயலாகும்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து கவனமெடுதது இவ்வீதியை முழுமையாக புனரமைப்புச் செய்துதர வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (செ-83)

# அதிபர் தரம் 3 போட்டிப் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகின

(நேற்றைய தொடர்ச்சி)....

2015 ஆம் ஆண்டு நடந்த அதிபர் தரம் மூன்றுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. இதில் வடமாகாணத்தைச் சேர்ந்த 420 பேர் தகைமை பெற்றுள்ளனர். அவர்களின் பெயர்விபரம் வருமாறு.

JEYAHARAN, R- VARAKY AMMAN KOVIL VEETHY, KOK UVIL WEST, KOKUVIL, JAFF NA-801774121V, VASANTHA MARAN, K- C/O. T. AMIRTHA LINGAM, PULAM ROAD, KAI THADY WEST, KAITHADY- 773310416V, SENTHILKUMA RAN, S- MANCHAVANAPA THYLANE, KOKUVIL WEST, KOKUVIL- 700380521V, LENIN KUMAR, G.-28, ST. BENADIK ROAD, NALLUR, JAFFNA- 803265461V, SUTHAKARAN, S.-MITHILKARAI, THUNNALAI WEST, KARAVEDDY- 790151 372V, SIVAKUMARAN, K.- 318/3, BARATHI NAGAR, YOGAPURAM, MALLAVI- 822 571778V, SENTHILNATHAN, T- MUTHALIYARVALAVU, IM AYANAN, UDUPIDDY- 74073 2056V, KOKULAVASAN, J.-25, COLLEGE ROAD, VADDUKKOD DAI- 722751957V, ANURA, S.J.-ARALY CENTER, VADDU KODDAI-695920083V, SUT HAKARAN, C.-MALIKAWAT TAI,CHANKANAI- 7629 42 917V, YUGES, T-1ST LANE, ANAIKODDAI ROAD, KUL APITI JUNCTION, KOKUVIL- 793264321V, KAJENDRAN, S- DUCH ROAD, KOPAY SOU TH, KOPAY- 823550162V, NILOCHKUMAR, S.S.A.R.- 10A, BARATHY LANE, KACH CHERI NALLUR ROAD, JAFF NA-791403324V, YOGALIN GAM, T- VATHIRAYAN, THAL AYADY, JAFFNA- 671741145 V, KODEESWARAN, G.-160, RA MALINGAM ROAD, THIRUNEL VELY EAST, THIRUNELVELY, JAFFNA- 727343164V, SRI KAMALANATHAN, T.- CHAN KANAI SOUTH, CHANKANAI- 710514011V, EDWIN, J- 7, ADAPPAN ROAD, JAFFNA- 672210348V, VANIMUHUN THAN, K- MURUKAN KOVILA DY, PULOLY NORTH WEST, PULOLY- 792650880V, SUVE NTHAN, -S.-NELLANDAY, SOO LAMBAY, POINT PEDRO-72 2890795V, SIVAKUMAR, S- K.K.S. ROAD, KONDAVIL WE ST, KONDAVIL- 783250942V, KENKATHARAKEERTHI, K.- ILAVALAI NORTH, ILAVALAI, JAFFNA-750530982V, THIL LAISELVAN, V.-ARALY SOUTH, VADDUKODDAI-74699117 7V, KULASEGARAN, K.-KAMPA NAI AMMAN ROAD, SULI PURAM CENTER, SULIPUR AM- 771693768V, MATHI THARAN, W- BLACK ROAD, CHANKANAI- 722780256V,

SAKTHINATHAN, S- KERNI YADY, KUPPILAN SOUTH, EARLALAI- 816761930V, SA DACHARALINGAM, A-NEER VELY CENTER, NEERVELY- 700630340V, SATHEESKU MAR, S.-KENIKARAI, SU THU MALAI NORTH, MANIPAI, JAFFNA- 723291739V, KAVIN YA, N- 88/6, POINTPEDRO ROAD,JAFFNA- 826633956V, VIJAYATHEEPAN, R-VELANAI EAST, VELANAI 2, JAFFNA- 763452875V, SRIMOKAN, T- VIDATHATPALAI, MIRUSU VIL- 788370458V, SASIKAR AN, K- 126/27, KACHCHERI, NALL UR ROAD, JAFFNA-750651 291V, THUSHYANTHAN, A.- 165, HOSPITAL ROAD,JAFF NA- 780370963V, JEYAKAVIT HA, M- THURKAPURAM, KUL AMANKAL,MALLAKAM- 80 6103624V, RAVEENDRAN, N- JOGASTHAN, VALVEDDI, VAL VEDDITHURAI- 701671589V, KAJENTHIRAN, G.-KALI KOVILA DY, KUPILAN NORTH, KUPI LAN.- 820374967V, PRABA KAR, M.-MAVADY, KARAVED DY EAST, KARAVEDDY-7135 31383V,PIRATHEEPAN, N-MA RUTHANKANDU, KARAVED DY EAST,KARAVEDDY-820 452372V, VINOTHA, V-21/3A, HINDU LADIES LANE, KANTHA RMADAM, JAFFNA.- 736 060 647V, THIRUKKUMARAN, S.- LUXUMY BAVANAM,SANNATHY ROAD, IDAIKKADU, ATCHUV ELY-791621135V, ANTON JEYARAJ, C.- 42/1, COLOM BAGAM ROAD, CHUNDIKULI, JAFFNA-772790694V, JEYA DEVAN, V.-SINN APPA ROAD, NAVALY EAST, MANIPAY- 725300638V,KA RUNAMOOR THY, M.-NEAR THE NAVALAR SCHOOL, KOPAY SOUTH, KOPAY- 811754471V, SELV ENTHIRAN, S- 21, MOUNT CARMAL ROAD, JAFFNA- 653452217V, SAN DRAKUM MARAN, N-PUTHUR WEST, PUTHUR,JAFFNA- 771784 437V, THARSANI, V- C/O. T. AMIRTHALINGAM, PULAM ROAD, KAITHADI WEST, KAITH ADY.- 815122879V, JASITHAR AN, B-HINDU COLLEGE RO AD, VALVEDDI, VELVEDDI THURAI- 811521604V, KARTHIK EYAN, G.-IRADDAYAPULAM, SANDILIPAY NORTH, SANDI LIPAY.-751871180V, JOHN COLLIN, A- 847, BEACH ROAD, PASSAIYOOR,JAFFNA-710734 593V, KENGATHARAN, K- RATHAMBA, KOPAY NORTH, KOPAY-701472659V, SATH EESGARAN, K- 20, ARASA VEETHY, NALLUR,JAFFNA- 801723667V, ANTON SELLA NAYAGAM, C- 37/3, 2ND VIDA NS LANE, CHUNDIKULI, JAF FNA-682100591V, RAVI VA

NNAN, R-SANDILIPAY WE ST, SANDILIPAY- 672410886V, KRISHNAKUMAR, N- 12, NO THARIS LANE, ARIYALAI, JAFF NA- 722922433V, THEVATH ASAN, A.R-5, 4TH CROSS LANE, JAFFNA- 742283623V, KODEES WARAN, K-THADDANKUL AM ROAD, MEESALAI NORTH, KODIKAMAM- 801693474V, GNANASEELAN, J-117, OLD PARK ROAD, CHUNDUKKULI, JAFFNA- 801823 556V, SHAN MUGATHAS, R.- KILAN, THUN NALAI SOUTH, KARAVEDDY- 762252937V, RAGUNATH, N- 11, ST. MA RY'S 2ND LANE, CO LOMBOTHURAI, JAFFNA-762 422263V, RAJHAR AN, R-5, VARAKI AMMAN KOVIL ROAD, KOKUVIL WEST, KOKUVIL- 722700481V, RAJEEVAN, J- WARD 6, VELA NAI, JAFFNA.- 801804918V, BASKARAN, K.- MARUTHANKE NY NORTH, THALAYADY-711172203V, MURALITHAR AN, K.-ANNAI ILLAM, URUM PIRAI SOUTH, URUMBIRAI, JAFFNA-781263 036V, THU RAISINGHAM, K.- 19/1, CHEMMANI ROAD, NALLUR, JAFFNA- 7161035 60V, NANDHAN, N- KALAI MAKAL ROAD, IMAYANAN EAST, UDUPPID DY- 7406212 54V, REV. SR. ARULAPPU- M.J.- HO LY FAM ILY CONVENT, 121, MAIN RO AD,JAFFNA-7658 53281V,SHANTHAKUMAR, N.W.- CHURCH LANE, THAVADY, KOKUVIL-752481644V, STA NISLAUS, L-MAIN ROAD, MA THAGAL,JAFFNA-782865 293 V, YOGALINGAM, A.- VARI VALAVU,KARAINAGAR-8116 91 836V, SURESHKUMAR, U- LATHA ILLAM, KARAVEDDY CENTER, KARAVEDDY- 803560 846V ,KIRITHARAN, P.-LIBR ARY LANE, UDUVIL EAST, CHUN NAKAM- 765210208V, NAVE ENDRAN, T-37, THIRU MAHAL ROAD, ARIYALAI, JAFFNA-741201186V, SANT HIRA KUMAR, K-THALAIYA MPATHY ROAD, NUNAVI WE ST, CHAVAKACHCHERI-7710 51812V, THANARUBAN, S- SEM PADDOLAI, IMAYANAN EAST, UDUPPIDDY-8015828 26V, SHANMUGANANTHAN, B- 53/4A, WYMAN ROAD, NAL LUR, JAFFNA-662281522V, ASO KKUMAR, M.-SCHOOL LANE, THAVADY SOUTH, KOKUVIL, JAFFNA- 7300418 61V, GANE SHARAJAH, S- PIDARY KOVILA DY, KOKUVIL WEST,KOKUVIL- 7131553 73V, THURAIRATNAM, S- 120, SIVAN TEMPLE ROAD, THIRUNEVELY, JAFFNA- 782 794817V, GUNASEELAN, I- MEESALAI NORTH, KODIKA MAM-690751550V, RAJAN, N-ANNAIAGAM, GOLD SMI

TH ROAD, SANG ATHTHANAI, CHAVAKACHCHERI- 7501 92807V, THAMIL CHELVAN, N- THIRUTHANI, KAITHADY SOUTH, KAITHADY- 77147 2923V, LINASHKUMAR, M- BRINDHAVANAM, ARTHIY ADY,POINT PEDRO-771381 979V, SHYLINI, P.-THEYELL AM, KANDIAH TEACHER RO AD, KANDARODAI, CHUNN AKAM,JAFFNA- 7962 63369V, SUBANTHINI, P- 21/1, NAN THAVIL LANE, CHAM PIAN ROAD, KOKUVIL EAST, KOKU VIL- 776881880V, KOKU LAN, R- SRI SOMASKANTHAN SCH OOL, PUTTUR- 7934339 21V, PARTHEEPAN, P-NAVATKADU, ATCHUVELY SOUTH, JAFFNA- 761004131V, ANANDASORU PAN, R- LADIE'S COLLEGE WEST LANE, UDU VIL, CHUN NAKAM- 7212823 68V, SIVASA NKAR, S- 271/6, NAVALAR LANE, ANAIPANTHY, JAFFNA- 782470582V, VASA NTHARU BAN, N- KALAICH OLAI, G.P.S. ROAD, KALVI YANKADU, JAFF NA- 8169 60690V, SIVAN THINI, V-29/1, NANTHAVIL LANE, KOKUVIL EAST, KOKU VIL- 787952119V, MAHINT HAN, J.-UYARAPA LAM, ARAI KODDY, JAFFNA-7628819 85V, SRISKANDARA SA, S- 16/ 21, SIVAN VEETHY, THIRU NEL VELY SOUTH, JAFFNA- 730551622V, MAITHILY, S- 16/ 21, SIVANVEETHY, THIRUNE LVELY SOUTH, JAFFNA-736 591855V, SIVENTHIRAN, S.- WARD 5, NAINATIVU, JAFFNA- 760782203V, VASANTHA KUMAR, V-KARANTHAKENY, URIKADU, VALVETTITURAI- 732621628V, RAJEESWAR AN, K- VADDUWATTAI, ALVAY EAST, ALVAY- 802541244V, SUTHAKARAN, K-LEELABAVA NAM, KALADDY ROAD, KARA NAVAY EAST, KARAVEDDY- 773052816V,VIJAYAKUMAR, S- C/O. P. SABARATNAM, NITHYAKALYANI FANCY HOU SE, NELLANDAI ROAD, THUM PALLAI,POINT PEDRO- 7227 53380V, AMALANANKUM AR, L- SCHOOL ROAD, ILAV ALAI,JAFFNA- 780900067V, EESWARAKUMARAA, K.-ARU KALMADAM ROAD, ANAIKOD DAI- 773573549V, JEYAKANT HAN, S-352, KASTHOORIYAR ROAD, JAFFNA- 731212538V, JEYARUBAN, N- 93, KANAKI LAWATAI, THUMPALAI, POINT PEDRO-791162882V, PRA THEEPAN, T-MURUGAN KOVILA DY, PULOLY NORTH WEST, PULOLY- 752222754V, KAVIT HA, L- HOSPITAL ROAD, ATC HUVELY SOUTH, ATCHUV ELY- 747682240V, KUMAN AN, L-SANKUVELY, MANIPAY, JAFFNA- 781673994V, LA

THEESKUMAR, S-26, SIVA PU RAM, KIRANCHI, PUNAKA RI,KILINOCHCHI- 7922628 72 V, SRITHARAN, R- PONMA NAI, THOLPURAM CENTER, SULIPURAM-801574530V, BALASUBRAMANIAM, B- SAN DILIPAI ROAD, PANDATHARI PU, JAFFNA- 792692621V, UMAPALAN, K-ALLARAI RO AD, MEESALAI EAST, MEES ALAI- 761821210V, PREMATH AS, A- PATTIMA ROAD, MATH AHAL-800213 940V, ABIRA MY, S- ABIRAMIAHAM, PANN AKAMI, SULIPURAM- 79709 2258V, SIVAPIRAGASAM, V- 687/12, MANIPAY ROAD, OD DUMADUM, JAFFNA-691 881334V, SRIKRUSHNA, S- 26/ 5, UTHAYASOORIYAN RO AD, UDUVIL, CHUNNAKAM- 791 033454V, INDRAJITH, T- KAN DIAH UPATHIYAR LANE, KANT HARODAI, CHUNNAKAM- 812463268V, VALANTI NEDI NESH, V.R.- JAFFNA CENTR AL COLLEGE, JAFFNA- 801 49 3815V, MURALI, U- KOVIL KA DAVAI, THUNNALAI CENTER, KARAVEDDY- 752171041V, UT HAYASEKAR, B.-ILAKADY ROAD, KARAVEDDY CENTER, KARA VEDDY-712 231084V, SANDRAPAVAN, K.- VILLADY, POONAKARI- 812 564846V, PIRATHAPAN, P- 76/4, ANKAL APAY, INUVIL EAST,CHUNNAK AM-802852 622V, SIVAGA ZAN, T-KACHCHAI ROAD, KODIKAMAM- 783501910V, VIJAY KUMAR, T- ATTAY, AL VAY-691844005V, KUGAN, R- KARAVEDDY CENTER, KARA VEDDY- 700101150V,EDIS ON, F.T.-1, ST. PAT TICK'S ROAD, JAFFNA-730 264321V, CHRIST AN, I.L.-22, SWARTZLANE, CHUNDUKKULI, JAFFNA-790 533518V, PARTHEE PAN, B.- ILAKADY, KOPAY NOR TH, JAFFNA- 822280056V, RAMAT HAS, N-5/4, MYLANY NORTH, CHUNNAKAM- 763243516V, RAMESH, R- C/O. V. KARTH IGESU, PIRAMANANTHODD AM, KARAVEDDY WEST, KAR AVEDDY-691701 484V, KUL ASANKAR, K-KOD IKAMAM ROAD, PULOLY SOUTH, PU LOLY, POINT PEDRO- 7683 83049V, PIRATHEE BAN, K.- 107, M.M.V. ROAD, NELLI YADY- 800111820V, RANGA NATHAN, S- SRI RAN GAM, AMPULIODAI LANE, PULOLY NORTH, POINTPE DRO-7000 92771V, SU THAKARAN, K.- MAHESAN ROAD, NAVALI NORTH, MANIPAY- 741983 036V, NAVANEETHAN,S - KU RU MPAIKADDU, PULOLY SOUTH WEST, PULOLY.- 8023207 01V, IRATHIKA, L.I.-TEACHER, IYANAR KOVILADY, KODIKAMAM- 827961 094V

(தொடரும்)

# துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட ஆயிரத்து 190 குடும்பங்களுக்கு வீடுகள் தேவை

## பிரதேச செயலர் தெரிவிப்பு

(மல்லாவி)

**துணுக்காய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 20 கிராம சேவையாளர் பிரிவுகளில் மீள்குடியேறியுள்ள 3 ஆயிரத்து 733 குடும்பங்களில் 2 ஆயிரத்து 37 குடும்பங்களுக்கு புதிய வீடுகளும் 460 குடும்பங்களுக்கு வீடுகள் திருத்தம் செய்யப்பட்டும் மொத்தம் 2 ஆயிரத்து 497 குடும்பங்களுக்கான வீட்டுத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. எனினும் இன்னும் ஆயிரத்து 190 குடும்பங்களுக்கு வீடுகள் தேவையாக உள்ளதாக துணுக்காய் பிரதேச செயலாளர் எஸ். குணபாலன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

துணுக்காய் பிரதேச செயலக பிரிவில் மீள் குடியேற்றத்தின் போது 3 ஆயிரத்து 733 குடும்பங்கள் மீள் குடியேற்றப்பட்டுள்ளன.

இவர்களில் ஆயிரத்து 190 குடும்பங்களுக்கு வீடுகள் தேவையாகவுள்ளன.

அத்துடன் 11 கிராமங்களுக்கு பொது நோக்கு மண்டபங்கள் அமைக்கப்பட வேண்டியுள்ளது.

கிராமங்களுக்குச் செல்லுகின்ற பிரதேச சபைக்குரிய 148 கிலோ மீற்றர் தூர வீதிகள் புனரமைப்பு செய்யப்பட வேண்டியுள்ளன.

குடிநீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு 14 பொது கிணறுகள் புதிதாக அமைக்கப்படவேண்டியுள்ளன.

இதேவேளை ஐந்து பொதுக்கிணறுகள் புனரமைப்பு செய்யப்பட வேண்டிய நிலையிலும் உள்ளதுடன் தனிப்பட்ட மக்களின் 260 கிணறுகளும் புனரமைப்பு செய்து கொடுக்கப்பட வேண்டியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஆயிரத்து 577 குடும்பங்களுக்கு மின்சார இணைப்பு வழங்கப்பட வேண்டியுள்ளதாகவும் அவர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார். (2-3-15)




# வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்தின் அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்

(மல்லாவி)

லண்டனைச் சேர்ந்த ஓம் சரவணபவ பபா சேவை அறக்கட்டளை நிதியத்தின் அனுசரணையுடன் யாழ்.வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் வன்னி விழிப்புலன் அற்றோர் சங்கத்தின அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு சங்க மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என யாழ்.வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினர் அறிவித்துள்ளனர் .

இந்நிகழ்விற்கு இந்தியாவின் கேரளாவில் இருந்து சிறி சற்குரு சரவணபவ பபா வருகை தந்து மாணவர்களுக்கு நல்லாசி வழங்கவுள்ளார்.

மேற்படி நிகழ்வில 60 மாணவர்களுக்கு புத்தகப்பைகள்,1 90மாணவர்களுக்கு காலணிகள் ,148மாணவர்களுக்கு நுளம்பு வலைகள் ,190 மாணவர்களுக்கு சாப்பாட்டுப் பெட்டிகள்,குடிநீர்ப்போத்தல்கள் உட்பட கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப் படவுள்ளன. (2-15)

# தனி அரசுக்காக ஆயுதமேந்தி போராடிய மக்கள் அதற்கு நிகரான தீர்வையே எதிர்பார்க்கிறார்கள்

## முன்னாள் எம்.பி. சந்திரகுமார் தெரிவிப்பு

வடக்கு, கிழக்கு மக்கள் ஒரு தனி அரசு ஒன்றை உருவாக்குவதற்காக ஆயுதமேந்தி போராடியவர்கள். அதற்காக பல தியாகங்களைச் செய்திருக்கின்றார்கள். இன்றைக்கு தீர்வு என்று சொல்லும்போது அதற்கு நிகரான தீர்வைத்தான் அவர்கள் எதிர்பார்க்கின்றார்கள் என முன்னாள் பாராளுமன்ற உறுப் பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கடந்த ஒன்பதாம் திகதி கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பில் மக்கள் கருத்தறியும் நிகழ்வில் சமூக மேம்பாட்டு அமையத்தின் சார்பில் யோசனை களை முன்வைத்தமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அரசியல் அமைப்பு மாற்றம் 2016 ஆம் ஆண்டில் கொண்டுவரப்படுமா? என்பது தொடர்பாக பொதுவாக மக்கள் மத்தியில் சந்தேகம் இருக்கிறது. இருந்தாலும் நாங்கள் இந்த விடயத்தை பாராட்டுகின்றோம்.

மக்கள் அமைப்புகள், தனிநபர்கள் எல்லோரது கருத்துக்களையும் கேட்டறியும் இந்த முயற்சியை நாங்கள் பாராட்டுகின்றோம். இது சுதந்திரத்திற்கு பின்னரான இலங்கை வரலாற்றில் முதற்தடவையாக இடம் பெறுகிறது.


கடந்த காலங்களில் அரசியலமைப்பு மாற்றங்கள் கொண்டுவரப்படும்போது அரசியலமைப்பு முறைமைகளில் துறை சார்ந்தவர்களின் கருத்துகள் மட்டுமே பெறப்பட்டு புதிய அரசியலமைப்பு மாற்றங்கள், திருத்தங்கள் கொண்டுவந்ததால் அதனுடைய தாக்கத்தை இந்த நாடு இன்று உணர்ந்துள்ளது. அதனால், பல்வேறு நெருக்கடிகளையும், யுத்தத்தையும், பாதிப்புகளையும் நாடு எதிர்கொண்டது. அந்த அனுபவங்களின வாயிலாக இப்போது மக்கள் எல்லோரையும் இந்த அரசியலமைப்பு சீர்திருத்த ஆலோசனையில் இணைத்து அவர்களது கருத்தைகளையும் உள்வாங்கி ஒரு பூரணமான தெளிவான அரசியலமைப்பு முறையை கொண்டுவருவதை நாம் வரவேற்கின்றோம்.

ஆனால், இது இலகுவான விடயம் அல்ல என்பதனையும் நாங்கள் புரிந்திருக்கின்றோம்.

வடக்கு, கிழக்கிலே குறிப்பாக, கிளிநொச்சி மாவட்டத்திலே இன்னும் இந்த மக்கள் தாம் ஒரு சுற்றிவளைப்புக்குள் இருக்கின்றோம் என்ற உணர்வில்தான் இருக்கின்றார்கள்.

சுற்றிவளைப்புக்குள் கண்காணிக்கப் படுகின்றோம், இரண்டாம்தர பிரஜையாக இருக்கின்றோம் என்ற உணர்வில்தான் இருக்கின்றார்கள். அந்தளவிற்கு மக்களின் வாழ்விடங்கள் மற்றும் நாளாந்த செயற்பாடுகளுக்கு இராணுவப் பிரசன்னம் ஒரு இடையூறாக இருக்கின்றது. இராணுவ குடியிருப்புகள் முக்கியமாக பாடசாலைகளுக்கு அருகாமையில், கோயிலுக்கருகாமையில் மற்றும் மக்களின் விளைநிலங்கள் என்பன இராணுவத்தினரின் பிடிக்குள் இருக்கின்றன. ஆகவே, இப்படியான சூழல் களை உருவாக்கிக்கொண்டு தமிழ் மக்களிடமிருந்து தேசிய நல்லிணக்கம் தொடர்பான ஒரு சமிக்ஞை கிடைக்கும் என்று எதிர்பார்க்க முடியாது என்று தெரிவித்துள்ளார். (2-3)

# ஆனந்தபுரம் அ.த.க. பாடசாலைக்கு ஒரு தொகுதி நூல்கள் அன்பளிப்பு



(குருமன்காடு)

யாழ். இந்திய துணைத்தூதரகத்தின் உதவித் தூதுவரினால் மு/ஆனந்தபுரம் அ.த.க. பாடசாலைக்கு நூல்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

முல்லை.கல்வி வலயத்தின் ஆனந்தபுரம் அ.த.க பாடசாலைக்கு யாழ். இந்திய துணைத்தூதரகத்தின் துணைத் தூதரக அதிகாரி எஸ்.தட்சணாமூர்த்தியினால் ஒரு தொகுதிப் புத்தகங்களும் இரண்டு துடுப்பாட்ட மட்டைகளும் வழங்கப்பட்டன.

இது தொடர்பில் மேலும தெரிய வருவதாவது,

கடந்த 8 ஆம் திகதியன்று ஒரு தொகுதிப் புத்தகங்கள்,இரண்டு துடுப்பாட்ட மட்டைகள் என்பன வழங்கப்பட்டுள்ளன.

இந்தியத் தூதரகத்தில் கடமையாற்றி அண் மையில் மாற்றலாகிச் செல்லும் எஸ். தட்சணாமூர்த்தி பெறுமதியான புத்தகங்களை முல்லைத்தீவு ஆனந்தபுரம் அ.த.க. பாடசாலை நூலகத்திற்கு அன்பளிப்பு செயதுள்ளார்.

குறித்த அன்பளிப்புக்களை வடக்கு மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேரடியாக சென்று வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (2-250-310-281)

# இ.போ.ச. யாழ்.சாலை நடத்துநர் மீது வவுனியாவில் முகாமையாளர் தாக்குதல்

இலங்கை போக்குவரத்துச் சபையின் வவுனியாச் சாலை முகாமையாளர் நேற்று முன்தினம் மாலை யாழ்.சாலை நடத்துநர் ஒருவர் மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளார்.

அதனையடுத்து நடத்துநரால் வவுனியா பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டினையடுத்து வவுனியா இ.போ.ச. சாலை முகாமையாளரை வவுனியா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில்,

யாழ்ப்பாணம் இ.போ.ச. சாலைப் பேருந்தின் நடத்துநர் வவுனியா-யாழ்ப்பாணம் சேவையினை மேற்கொண்டு வவுனியாவுக்கு சென்றுள்ளார்.

பிரஸ்தாப நடத்துநர் குறித்த நேரத்தில் பேருந்தினை செலுத்துவதற்கு சாரதிக்கு அனுமதிக்காது பயணிகளை ஏற்றிக் கொண்டிருந்ததாகவும் நேரக்கணிப்பாளர் வவுனியா சாலை முகாமையாளரின் கவனத்திற்கு இவ்விடயத்தை கொண்டுவந்துள்ளதையடுத்து நடத்துநருடன் முரண்பட்டுக் கொண்டிருந்த சமயம் முகாமையாளர் நடத்துநர் மீது தாக்குதல் மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதனையடுத்து நடத்துநர் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டதுடன் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டினை மேற்கொண்டார்.நேற்று முன்தினம் இரவு பொலிஸார் வவுனியா இ.போ.ச. சாலை முகாமையாளரை கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருவதுடன் பேருந்தும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. (2-3-250)

# கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடமாடும் சேவை 19 ஆம் திகதி

(சிவநகர்)

புனர்வாழ்வு அதிகார சபையின் ஏற்பாட்டில் நடமாடும் சேவையொன்று எதிர் வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 தொடக்கம் பிற்பகல் 3.30 மணிவரை கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடத்தப்படவுள்ளது.

அன்றைய தினம் மரண மற்றும் காயங்களுக்கான நட்டஈட்டிற்கு விண்ணப்பித்தவர்களின் கோவைகளில் காணப்படும் குறைபாடுகள் நிவர்த்தி செய்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவுள்ளது. உரியவர்கள் அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ள ஆவணங்களுடன் சமுகமளித்து குறைபாடுகளைப் பூரணப்படுத்துமாறும் கேட்கப்பட்டுள்ளது.

உரிய விண்ணப்பதாரர்களுக்கு கொழும்பு புனர்வாழ்வு அதிகாரசபை உதவிப்பணிப் பாளரால் கடிதங்கள் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன. (2-254)

# காசோலை வழங்கி வைப்பு

மன்னார் கல்வி வலயத்துக்கு உட்பட்ட மன்/அல் அஸ்ஹர் தேசிய பாடசாலை பௌதீக வள திருத்த வேலைக்கு வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரனின் 2015ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியில் இருந்து ஒரு இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு ஏற்கனவே கடந்த ஆண்டு இத்திட்டம் நிறைவேற்றப்பட்டது.

இந் நிலையில் அதற்கான காசோலையினை கடந்த 11ஆம் திகதி வியாழன் மன்னார் மாவட்டத்தில் உள்ள அமைச்சரின் உப அலுவலகத்தில் வைத்து பாடசாலை அதிபரிடம் அமைச்சர் கையளித்தார். (2-281)

# பள்ளிமுனை மீனவர்கள்மீது கடற்படையினர் தாக்குதல்

## தமிழ்த்தேசிய கூட்டமைப்பு கடும் கண்டனம்

மன்னார் பள்ளிமுனை கிராமத்தைச் சேர்ந்த நான்கு மீனவர்கள் மீது நேற்று முன்தினம் காலை இலங்கை கடற்படையினரால் இரணைதீவு கடற்பகுதியில் வைத்து கத்தியால் வெட்டி தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

சம்பவத்தில் இரு மீனவர்கள் காயமடைந்த நிலையில், மன்னார் வைத்திய சாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டதுடன் ஏனைய இரு மீனவர்களும் கடலில் குதித்து தப்பியுள்ளனர்.

குறித்த மீனவர்கள் இருவரும் நேற்று முன்தினம் மாலை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு முழங்காவில் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக முழங்காவில் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த இருவரும் விசாரணைகளின் பின் இன்று திங்கட்கிழமை மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இதனால் அப்பகுதி மீனவர்கள் மத்தியில் அச்ச நிலை ஏற்பட்டுள்ளது. மீனவர்கள் மீது தாக்குதல் மேற்கொண்ட கடற்படையினருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்மையாக கண்டிப்பதாக நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்ற குழுக்களின் பிரதி அவைத் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

நாட்டில் சுதந்திரம் ஏற்பட்டுள்ள போதும் வடபகுதி மீனவர்கள் இன்று வரை சுதந்திரமாக கடற்றொழில் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

நாளாந்தம் வடபகுதி மீனவர்கள் ஏதோவொரு வகையில் பாதிப்பை எதிர்கொண்டு வருவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

பள்ளிமுனை மீனவர்கள் இருவர் மீது கடற்படையினர் மேற்கொண்டுள்ள தாக்குதல் சம்பவம் வன்மையாக கண்டிக்கப்பட வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுழியோடி மீன்பிடியில் ஈடுபட்ட இரு மீனவர்களை எந்தவித காரணங்களும் இன்றி கடற்படை கைதுசெய்து முழங்காவில் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.


மீனவர்கள் கடலில் சட்டவிரோதமான செயற்பாடுகளில் ஈடுபட்டால் அவர்களை கடற்படையினர் கைதுசெய்து பொலிஸாரிடம் ஒப்படைக்க முடியும் எனக் குறிப்பிட்ட அவர்,

ஆனால், கடற்படையினர் அதிகாரத்தை கையில் எடுத்து மீனவர்களை கண்மூடித்தனமான தாக்குதல், அவர்களை வெட்டுதல் போன்ற மனித உரிமை மீறல் செயற்பாடுகளில் ஈடுபட முடியாது எனக் கூறியுள்ளார்.

மீனவர்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்ட கடற்படையினரை உடனடியாக சட்டத்தின் முன்கொண்டு வர பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என செல்வம் அடைக்கலநாதன் கோரிக்கை விடுத்துள்ளார். (2-3)




## சட்டவிரோதமாக வெட்டப்பட்ட
## சுமார் 6இலட்சம் ரூபா பெறுமதியான பாலை மரக்குற்றிகள் மீட்கப்பட்டன



(மல்லாவி)

கிளிநொச்சி முக்கொம்பன் பகுதியில் சட்டவிரோதமாக வெட்டப்பட்ட ஆறு இலட்சம் ரூபா பெறுமதியான பாலை மரக்குற்றிகள் விற்பனைக்குத் தயாராக இருந்த நிலையில் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

இதன்போது எவரும் கைது செய்யப்படவில்லையென பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி முக்கொம்பன் பகுதியில் சட்டவிரோதமாக மரங்கள் வெட்டப்படுவது தொடர்பில் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலைத் தொடர்ந்து சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டது.

நேற்று முன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது சுமார் 6 இலட்சம்ரூபாபெறுமதியானமரக்குற்றிகள்மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கோணாவில், முக்கொம்பன், அக்கராயன் குளம், ஜெயபுரம் உள்ளிட்ட பகுதிகளில் இவ்வாறு பெறுமதிமிக்க மரங்கள் தொடர்ச்சியாக வெட்டப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-3-15)

## யானை வெடிக்கும் மசியாத யானைகள் துணுக்காயில்

(திருமுறிகண்டி)

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் யானைகளின் தொல்லை அதிகமாக காணப்படுவதாக அப்பகுதி மக்கள் துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் முறையிட்டதையடுத்து முதற்கட்டமாக யானை வெடிகள் வழங்கப்பட்டன.

எனினும் இந்த வெடிகளுக்கு யானைகள் கட்டுப்படவில்லையென அம்மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

முல்லைத்தீவு துணுக்காய்ப் பிரதேச செயலாளர் பிரிவில் இரவு வேளைகளில் யானைகள் தொல்லை அதிகரித்து காணப்படுவதாகவும் தங்கள் விளை நிலங்களில் உள்ள பலன் தரும் மரங்களை அழிப்பதாகவும் தமக்கு உயிர் ஆபத்து இருப்பதாகவும் பிரதேச மக்கள் துணுக்காய் பிரதேச செயலாளருக்கு தெரியப்படுத்தியிருந்தனர்.

இதன்பயனாக துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் யானைகள் தொல்லை அதிகம் காணப்படும் புத்துவெட்டுவான், பழைய முறிகண்டி, ஐயம்குளம் கிராம மக்களிற்கு முதற்கட்டமாக யானை வெடிகள் வழங்கப்பட்டன.

எனினும் இந்த வெடிகளுக்கு யானைகள் கட்டுப்படவில்லை என தெரியப்படுத்தியுள்ளனர்.

இதனையடுத்து இடர் முகாமைத்துவ அமைச்சினால் இக்கிராமங்களுக்கு மின் வேலிகள் அமைப்பதற்கான திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளதாக துணுக்காய் பிரதேச செயலாளர் சிவபாலன் குணபாலன் தெரிவித்துள்ளார். (2-3-31)

## துணுக்காய் கல்வி வலய பாடசாலை மாணவர்களுக்கு எழுத்தாக்கப்போட்டி

(மல்லாவி)

அகில இலங்கை தமிழ்த்தினப் போட்டி 2016 ஐ முன்னிட்டு துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கிடையிலான கோட்டம், வலயம் ஆகிய மட்டங்களிலான எழுத்தாக்கப் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கோட்ட ரீதியாக நான்கு நிலையங்களில் நடைபெறுமென துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி எல். மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய ஒட்டுசுட்டான் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு மு/மாங்குளம் மகா வித்தி யாலயம், மு/ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலும் துணுக்காய் கோட்ட த்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு மு/யோகபுரம் மகா வித்தியாலயத்திலும், மாந்தை கிழக்கு கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கு மு/பாலிநகர் மகா வித்தியாலயத்திலும் போட்டிகள் நடை பெறும்.

போட்டியில் பங்கேற்கும் மாணவர்களை பொறுப்பாசிரியர்களுடன் உரிய நேரத்திற்கு முன்பாக போட்டி நடைபெறும் இடத்திற்கு அனுப்பி வைக்குமாறு பாடசாலை அதிபர்களை அவர் கேட்டுள்ளார். (2-3-15)

## டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் வவுனியாவில் நேற்று முன்னெடுப்பு



வவுனியா மாவட்டத்தில் சுகாதார பரிசோதகர்களால் பாரிய டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா பொலிஸார், நகரசபை, முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கம், வர்த்தகர் சங்கம் என்பன ஒன்றிணைந்து ஏற்பாடு செய்துள்ள டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தில் வவுனியா நகர்ப்பகுதியில் உள்ள வடிகான்கள் மற்றும் பொலித்தீன் குவிந்துள்ள இடங்கள் உட்பட, நுளம்பு பெருகக்கூடிய இடங்கள் இதன்போது அடையாளம் காணப்பட்டு துப்புரவு செய்யப்பட்டன.

மேலும், டெங்கு நோய்த்தாக்கம் நாடு முழுவதும் அதிகரித்துள்ள நிலையில், வவுனியாவில் தொடர்ச்சியாக இவ்வாறான நடவடிக்கைகள் இடம்பெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-3-250)



பெண்கள் மீதான வன்முறைக்கு எதிரான விழிப்புணர்வு நிகழ்வொன்று முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக இடம்பெற்றது. பெண்கள் மீதான வன்முறைக்கு எதிரான அமைப்பான சங்கமி சகோதரிகள் அமைப்பினர் நேற்று முற்பகல் 10 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக ஒன்றுகூடிய மக்கள்பல்வேறுபதாதைகளை ஏந்தியவாறு விழிப்புணர்வு நடவடிக்கையில் ஈடுபட்டதைப் படங்களில் காணலாம். (படங்கள்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

# அனைத்துலக சைவமாநாடு-2016

ஒரு விமர்சனப் பார்வை

நாரதர் கொடுத்த ஒற்றை மாம்பழத்தால் சிவனார் குடும்பத்தில் குழப்பம் உருவாகின்றது. "நாதா, ஒரு மாம்பழம் இருந்ததால் தானே இத்துணை பிரச்சினைகளும், இன்னொரு மாம்பழத்தினை உருவாக்கினால் என்ன?" என பார்வதி தேவியார் சிவனிடம் வினவுகிறார். பார்வதி தேவியின் அன்பான வேண்டுகோளிற்காக மாங்கனி வடிவிலே ஈரநெஞ்சு ஈசனாற் படைக்கப்பட்டதே ஈழ மணித்திருநாடு.

இதனையே திருமூலரும் "சிவபூமி" எனப் புளகாங்கிதமாக அழைத்தார். மேலும், "தென்னாடுடைய சிவனே போற்றி. என இந்தியாவிலே வாழ்ந்த நாயன்மார்களால் அழைக்கப்பட்டமை, இந்தியாவிற்குத் தெற்கே இலங்கும் இலங்கைத் தீவின் தெய்வமாம் சிவன் என்பதனையே குறித்து நிற்கின்றது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான், செல்லப்ப சுவாமிகள், கடையிற் சுவாமிகள், யோகர் சுவாமிகள் மற்றும் பல அருளாளர்களால் சைவம் போற்றி வளர்க்கப்பட்ட பிரதேசம் வட இலங்கையாகும்.

இத்தகைய மெய்சிலிர்க்கும் சைவபூமியாம் யாழ்ப்பாணத்தே சுதேசிகளுக்கு எனச் சைவப் பல்கலைக்கழகம் ஒன்று வேண்டும் என்ற சேர்.பொன் இராமநாதன் அவர்களின் கனவின் நனவு வெளிப்பாடான யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே முதலாவது அகில உலக சைவ மாநாடு நடந்தேறியுள்ளது.

"சிவ ஆகமங்களும் திருமுறைகளும் புலப்படுத்தும் சைவ பண்பாட்டுக் கூறுகளும் சமூக நல்லிணக்க சிந்தனைகளும்" எனும் தொனிப்பொருளில் இம்மாநாடு தொடர்ந்து 3 நாட்கள் நடைபெற்றன.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் இந்து நாகரிகத் துறையினர் ஏற்பாட்டில், பல்வேறு அறிஞர்கள், புத்திஜீவிகள், தஞ்சைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் க. பாஸ்கரன் மற்றும் சைவப்பெரியார்கள் எனப்பலர் கலந்துகொண்டு விழாவினைக் காத்திரமாக்கியிருந்தனர்.

முதலிலே, காலத்தின் தேவை கருதிய இம்மாநாட்டினை முதல் முதல்முதலாக ஆரம்பித்தமைக்கு விழாக்குழுவினரைப் பாராட்டியே ஆகவேண்டும். உடனடியாகப் பாரிய மாற்றம் ஒன்றையும் ஏற்படுத்தாது விடினும், இம் முதற்பொறி தொடர் மாநாடுகள், குறிப்பாக சிந்தனைகளை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்லல் போன்ற செயற்பாடுகள் மூலம் நீண்டகால நோக்கில் பாரிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கலாம்.

விஞ்ஞான தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியும் அதன் விளைவால் ஏற்பட்ட உலகமயமாதல் போட்டி நிறைந்த இயந்திரமய வாழ்க்கை அனைத்தையும் தேடிக்கொண்டு மனிதத்தைத் தொலைத்துவிட்ட நிலை என நாம் அல்லறப்பட்டுக்கொண்டு இருக்கின்ற இந்த வேளையில் இம்மாநாட்டின்தேவை அளப்பரியது.

சமயம் என்பது மக்கள் எவ்வாறு வாழ வேண்டும் என்று வழிப்படுத்துவது. சைவசமயம் என்பது சிவனை முழுமுதற்கடவுளாகக் கொண்டு எம்மையெல்லாம் செம்மையாக வாழ வழிசெய்வது. அன்பே சிவம் என்றும் மக்கள்சேவையே மகேசன்சேவை எனவும் மிகவும் இலகுவாக அனைவரும் உணர்ந்து செயற்பட வகை செய்வது.

சமயங்கள் என்பவை வாழ வழிகாட்டும், எமது வாழ்வின் இறுதி நோக்கத்தினைக் காட்டும் வரைபடங்களே.

எம்மில் பெரும்பாலானோர் வரைபடங்களையே இறுதி முடிவிடம் எனக் கருதிவிடுகிறோம்.

எமது சமயமும், எமது இறுதி இலக்கான "முக்திப்பேறு பெறுதல்" எனும் இலக்கை சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் பாதைகளால் சென்றடைய வழிகாட்டுகின்றது.

எமது சமயம், மக்களின் நன்மைக்கான மேற்படி கருத்துக்களைத், தத்துவங்களை வேதங்கள், ஆகமங்கள், உபநிடதங்கள் போன்றவற்றிலும் தமிழ்மொழியிலே திருமுறைகள் வாயிலாகவும் வெளிப்படுத்தி நிற்கின்றது.

எமது சமயத்தின் இரு கண்களாக விளங்கும் சிவ ஆகமங்களும் திருமுறைகளும் புலப்படுத்தும் கருத்துக்கள் -சிந்தனைகள் பற்றியே ஆராயப்பட்டன.



சிந்தனைகள் சொற்களாகவும், சொற்கள் செயல்களாகவும், செயல்கள் நடத்தைகளாகவும், ஒரு இனத்தின் ஒட்டுமொத்த நடத்தையும் பண்பாடாகவும் மிளிரும்.

அந்த அடிப்படையிலேயே எமது சமயத்தின் சிவ ஆகமங்களும் திருமுறைகளும் புலப்படுத்தும் சிந்தனைகளை பண்பாட்டுக் கூறுகள் சார்பாக ஆராய்ந்தனர்.

பண்பாட்டுக் கூறுகள் எனும் போது, கலைகளும் வாழ்வின் அழகியலும் பழக்கவழக்கங்கள், நடத்தைகள் மற்றும் நம்பிக்கைகளும் சமுதாயக்கட்டமைப்புமொழியும் இலக்கியமும் தத்துவங்கள்' அறவியலும் அறிவியலும் எனும் பிரிவுகளில் ஆழமாக அலசி ஆராயப்பட்டன.

அனைத்து சிந்தனைகளும் பொதுவாகச்சுட்டி நிற்பவை அன்பை, நன்றியுணர்வை, எல்லாவுயிர்களிடத்தும் இறைவனைக் காணும் தன்மையை.

இத்தகைய கருத்துகள் சாதாரண மக்கள் மத்தியில் கொண்டு செல்லப்பட்டு "மனிதம்" காக்கப்பட்டு அதனூடாக எமது பண்பாட்டு விழுமியங்களைப் பேணி அடுத்த சந்ததியினரிடம் கையளித்தல் அவசியம்.

மேலும், சமுதாய நல்லிணக்க சிந்தனைகள் பற்றியும் ஆராயப்பட்டது.

சமுதாய நல்லிணக்கம் ஏற்பட வேண்டுமாயின் நாம் சமுதாயத்தைப் பார்க்கின்ற பார்வை மாற வேண்டும். அனைத்து உயிர்களிடமும் இயற்கையிடமும் இறைவனைக் காணவேண்டும். எமது உணர்வு உயர்நிலை அடைய வேண்டும்.

நாம் சாதாரணமாக ஆழ்ந்த உறக்கநிலை உணர்வு (deep sleep consciousness), கனவு நிலை உணர்வு (dreaming consciousness) மற்றும் நனவு நிலை உணர்வுடனேயே (awakening consciousness) வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

ஆழ்ந்த உறக்க நிலையில் நாம் பெரும்பாலும் ஒன்றினையும் உணர்வதில்லை. கனவு நிலையினையும் உண்மையென்றே நினைக்கிறோம். பயப்படுகிறோம் ஆனந்தப்படுகிறோம் அழுகிறோம்,சிரிக்கி றோம். இதயத் துடிப்பு மாறுகிறது வியர்க்கிறது. ஓடுவதாகக் கனவு காண்கின்ற போது காற்தசை நரம்புகளில் கணத்தாக்கம் பாய்வது அறியப்பட்டுள்ளது.

கனவு உணர்விலிருந்து நனவு உணர்விற்கு வருகின்றபோது "அது கனவு" என்ற உணர்வு ஏற்படுகிறது.

இவ்வாறுதான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.


எமது இதயமானது நன்றியுணர்வு, அன்பு போன்ற நற்குணங்களால் நிரம்பி வழியும்போதும், ஆழ்ந்த தியானத்தின்போதும் அடுத்த உணர்வு நிலைகளான ஆத்ம உணர்வு நிலை (soul consciousness), அண்ட உணர்வு நிலை (cosmic consciousness), தெய்வீக உணர்வு நிலை (divine consciousness), நிறைவாக முக்தி என்று சொல்லப்படுகின்ற ஏகாந்த உணர்வு நிலை (unity consciousness) படிப்படியாக வந்தடையும்.

இவ்வாறு உணர்வுநிலைகள் படிப்படியாக முன்னேறுகின்ற போது, நனவு நிலையிலே கனவினை எவ்வாறு கனவென்று உணர்ந்தோமோ, அவ்வாறே இந்த வாழ்க்கையின் நிலையாமையையும் உணர்வோம். அப்பொழுது ஆணவம் வலுவிழக்கும் அனைத்திலும் எம்மை யும், எம்மிலே அனைத்தையும் காண்போம். இதுவே சமூக நல்லிணக்கம்.

எமது திருமுறைகளை அருளிச்செய்தவர்களிற்கு நடந்ததும் இதுதான். தமது தெய்வீக அனுபங்களை, அன்பை, நன்றி உணர்வை எமக்குப் பதிகங்களாக அருளிச் செய்துள்ளனர். அவற்றினை அறிந்து பயன் பெறல் எமது கடமையே.

நிறைவாக, சிவ ஆகமங்களில் திருமுறைகளில் சிதறிக் கிடக்கும் நற்சிந்தனைகளை சாதாரண மக்களும் பயன்படுத்தும் வகையில் அறியச் செய்து எமது பண் பாட்டு விழுமியங்களைக்காத்து அடுத்த தலைமுறையினரிடம் கையளிக்க வேண்டியது யாழ்ப்பாணப்பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறையினரின் வரலாற்றுக் கடமையாகும்.

Dr. S.கண்ணதாசன்
யாழ்.பல்கலைக்கழகம்



வடமராட்சி புற்றளை மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட மேல்மாடிக் கட்டடத்திறப்பு விழா அண்மையில் அதிபர் ஆ.சிவநாதன் தலைமையில் நடைபெற்ற போது... (படங்கள்: கரணவாய் செய்தியாளர்)

# ஊடகவியலாளர் சத்தியமூர்த்தியின் நினைவுகளுடன் பேசுதல் ஒன்றுகூடல்







கள்:- ஐ.சாளின்)

(யாழ்ப்பாணம்)

இறுதிப்போரின் போது இலங்கை இராணுவத்தின் செல்வீச்சு தாக்குதலில் கொல்லப்பட்ட ஊடகவியலாளர் பு.சத்தியமூர்த்தியின் நினைவுகளுடன் பேசுதல் எனும் தொனிப்பொருளிலான ஒன்றுகூடலும் நினைவு கூறல் நிகழவும் யாழ்.இந்து கல்லூரியில் நேற்றுமுன்தினம்மாலைமூன்று மணியளவில் நடைபெற்றது.

மூத்த படைப்பாளரும் எழு கலை இலக்கியப்பேரவையின் அமைப்பாளருமான இணுவையூர் சிதம்பரத் திருச்செந்திநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சத்தியமூர்த்தியின் திருவுருவப்படத்துக்கு உறவினர் வெற்றி வேல தங்கரத்தினம் மாலை அணி வித்து சுடரேற்றி நிகழ்வினைத தொடங்கி வைத்தார்.

அகவணக்கத்துடன் தொடர்ந்து நடைபெற்ற நிகழ்வில் தொடக்க உரையினை எழு கலை இலக்கியப் பேரவையின் செயலாளர் மயூரரூபன் ஆற்றினார். அவர் தனது உரையில் சத்திய மூர்த்தியின் இலக்கிய மற்றும் ஊடக வருகை தொடர்பிலும் நிகழ்வு தொடர்பிலுமான அறிமுகத்தினை வெளிப்படுத்தி உரையாற்றினார்.

நிகழ்வின் தலைவர் உரையாறும்போது, சத்தியமூர்த்தியின் பிரவேசம் தொடக்கம் இறுதியில் அவர் பிரிந்த காலம் வரையிலான 19 ஆண்டுகள் இலக்கிய மற்றும் ஊடகத் துறைகளின் செயற்பாடுகள் மற்றும் ஆளுமை தொடர்பில் உரையாற்றினார். நிகழ்வின் நினைவுரையாற்றிய வலம்புரி பத்திரிகையின் ஆசிரியர் ந.விஜயசுந்தரம், சிறுவயது முதல்யாழ்ப்பாணம் இடப்பெயர்வு வரையி லான சத்தியமூர்த்தியின் செயற்பாடுகள் தொடர்பில் உரையாற்றினார்.

நினைவுரையாற்றிய யாழ். போதனா வைத்தியசாலை யின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சத்தியமூர்த்தி, இறுதிப் போரின் போது வன்னி சந்தித்த நெருக்கடிகள், அவலங்கள் தொடர்பிலும் ஊடகங்கள் தொடர்பிலும் உரையாற்றியதுடன் ஊடகவியலாளர் சத்தியமூர்த்தியின் ஊடகச்செயற்பாடு தொடர்பிலும் உரையாற்றினார்.

அனுபவ உரைகள் வரிசையில், கவிஞர் வேலணையூர் சுரேஸ், ஊடகவியலாளர் இளங்கீரன்,எழுகலை இலக்கியப் பேரவையின் தலைவர் கை.சரவணன் ஆகியோர் உரையாற்றியிருந்தனர். மூத்த படைப்பாளர்கள், படைப்பாளர்கள், ஊடகவியலாளர்கள், இலக்கியவாதிகள் மற்றும் ஆர்வலர்கள் எனப் பலர் இந் நிகழ்வில் பங்கு கொண்டிருந்தனர். (இ-4)

# யாழ். தமிழ்ச்சங்கம் நடத்தும் வீரமாமுனிவர் நினைவு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தமிழ்ச் சங்கம் நடத்தும் வீரமாமுனிவர் நினைவு விழா எதிர்வரும 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை பற்பகல் 2.45 மணிக்கு யாழ். தூய சமபத்திரியார்கல்லூரிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். தூய சம்பத்திரி யார் கல்லூரியின அதிபரும் யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்க உபதலைவருமான அருட்பணி மஜெறோ செல்வநாயகம் அடிகளார் தலைமையில் நடைபெறவுள்ள இவ் விழாவில் வீரமாமுனிவரும் தமிழ் எழுத்துச் சீர்திருத்தமும்என்ற பொருளில் மன்னார் கலையருவி நிறுவன இயக்குநர் அருட்பணி தமிழ் நேசன் அடிகள் சிறப்புரை ஆற்றுவார்.

தமிழ் மொழியில் ஆற்றல் பெறுவதற்குப் பெரிதும் துணை செய்வது எது? என்ற பொருளில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி முதல்வர் ச.லலீசன் தலைமையில் சொல்லாடுகளம் இடம் பெறும்.

புனித பத்திரிசியார் கல்லூரி மாணவர்களைப் பேச்சாளர்களாகக் கொண்ட இச் சொல்லாடுகளத்தில் எழுத்துப் பயிற்சியே என த.ரகுராம், ந. சஞ்சீவன் ஆகியோரும் கேள்விப் பயிற்சியே என பா.டிலக்ஷன், சி.மரின் றொமன்சன் ஆகியோரும், வாசிப்புப் பயிற்சியே என ம.சேவியர், ஜெ. நிக்லஸ்ஷர்வியோ ஆகியோரும் வாதிடவுள்ளனர்.

இந்நிகழ்வு இளை யோரை வளப்படுத்தும்நோக்குடன்நடத்தப்பட்டாலும் ஆர்வலர் எவரும் நிகழ்வில் பங்கேற் றுப் பயன் பெறலாம் எனத் தமிழ்ச்சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.(இ-5)

# அன்பளிப்பு பொருட்கள் வழங்கல்

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் லண்டன் ஓம் சரவண்பகவா சேவா அறக்கட்டளை நிதியத்தினால் யாழ். விழிப்புலனற்றோர் சங்கம் மற்றும் சங்கானை கோட்டத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு அன்பளிப்புப் பொருட்களைவழங்கும் நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு வட்டுக் கோட்டை இந்து வாலிபர் சங்க மண்டபத்தில்நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் யாழ். விழிப் புலனற்றோர்சங்கத்தின் உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் பிள்ளைகள்என 200 பயனாளிகளுக்கு கற்றல் உபகரணங்கள், நுளம்பு வலைகள் என்பன வழங்கப்படவுள்ளன.

சங்கானை கோட்டக்கல்விக்குட்பட்ட 130 பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன. இதன்போது தொழிலதிபர் இ.எஸ்.பி. நாகரத்தினத்திற்கு வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் சமூக நலஜோதி என்ற சிறப்புப்பட்டமும் வழங்கப்படவுள்ளது. (இ-5)

# மச்சங்களின் அதிர்ஷ்ட பலன்கள்



**பெண்களுக்கான பலன்கள்**

**கைகளில்**

பொதுவாக பெண்களுக்கு கையில் மச்சம் எங்கு இருந்தாலும் அவர்களுக்கு அது நல்ல பலன்களையே கொடுப்பதாகும்.

பெண்களின் உள்ளங்கையில் நடுவில்மச்சம் இருந்தால் அவர்கள் அழகு மிக்கவர்களாக இருப்பார்கள்.

அழகுக்கு ஏற்ற நல்ல குணங்கள் உடையவர்களாக இருப்பார்கள். தங்களுக்குப் பொருத்தமான கணவரைப் பெறுவார்கள். அவர்களுக்கு வாய்க்கும் கணவர் நல்ல ஆரோக்கியம் உள்ளவராகவும் அவர்களுக்கு துரோகம் செய்யாதவராகவும் இருப்பார்கள். இவர்கள் சிறப்பாகவும் அழகாகவும் வீட்டை அலங்கரிப்பவளாகவும் சித்திரக் கலையில் வல்லவளாக வும் இருப்பாள். இந்த மச்சம் உடைய பெண்கள் நல்ல அழகும் குணமும் கொண்டிருப்பதோடு சிறந்த அறிவும் உடையவர்களாக இருப்பார்கள்.

உள்ளங்கையில் எங்காவது ஓர் ஓரத்தில் மச்சம் இருந்தால் அப் பெண்கள் வசதியான வாழ்க்கையை உடையவர்களாக இருப்பார்கள்.

உள்ளங்கையில் மச்சம் உடைய பெண்களில் சிலர் நல்ல வசதிகளோடு வாழ்வதோடு சங்கீதக் கலையில் தேர்ந்தவர்களாகி புகழ் பெற்ற பாடகிகளாகவும் விளங்குவார்கள்.

பெண்களின் முழங்கையில் மச்சம் இருந்தால் அவர்கள் எதற்கும் அஞ்சாத துணிவு மிக்கவர்களாக இருப்பார்கள். தங்களை சூழ்ந்துள்ளவர்கள் தவறு ஏதேனும் செய்தால் கண்டிக்கத் தயங்க மாட்டார்கள்.

பெண்களின் மணிக்கட்டில் மச்சம் இருந்தால் அவர்கள் வாழ்க்கைக்குத் தேவையான வசதிகள் எல்லாவற்றையும் பெற்று சிறப்பாக வாழ்வார்கள்.

பெண்களுக்குரிய கலைகளில் தேர்ச்சி பெற்று விளங்குவார்கள்.

**கழுத்தில்**

கழுத்தில் மச்சம் உள்ள பெண்கள் நல்ல அதிர்ஷ்டம் உள்ளவர்களாவர். அவர்கள் வாழ்க்கை மிகவும் சுகமானதாக இருக்கும். அவர்கள் எப்பொழுதும் நல்ல உடல் ஆரோக்கியத்துடன் இருப்பார்கள்.

எல்லோரிடமும் அன்பும் இரக்கமும் கொள்பவர்களாக இருப்பார்கள். எப்பொழுதும் காரியங்களை உற்சாகத்துடன் செய்வார்கள். சிறந்த அறிவுடையவர்களாக இருப்பார்கள். இவர்களுக்கு முதன் முதலில் பிறப்பது ஆண் குழந்தையாக இருக்கும்.

கழுத்தின் மேற்பாகத்தில் மச்சம் பெரிதாக இருந்தால் அந்த மச்சம் உடைய பெண்கள் வசதி படைத்த ஆண்களைத் தங்களுடைய சாகசமான பேச்சாலும் பார்வையாலும் வசீகரித்து அவர்களுடைய நட்பைப் பெறுவார்கள்.

இவர்கள் ஆண்களுடன் நெருங்கிப் பழகுவதை பிறர் கண்டித்தாலும் அதனைப் பொருட்படுத்தமாட்டார்கள்.

தங்கள் சுகத்தையே பெரிதாக நினைப்பார்கள். எதிர்ப்பயன் கருதி பிறர்க்கு உதவி செய்யும் இயல்புடையவர்களாக இருப்பார்கள்.

**தாடைகளில்**

இடது தாடையில் மச்சம் இருக்கப் பெற்ற பெண்கள் பேரழகிகளாக விளங்குவார்கள்.

அழகுக்கேற்ற குணவதியராக இருப்பார்கள். வாழ்க்கைக்குரிய வசதிகளைப் பெற்று இன்பமாக வாழ்பவர்களாவர்.

வலது தாடையில் மச்சம் இருக்கப் பெற்ற பெண்கள் மேற்கூறிய பலன்களுக்கு எதிரான பலன்களை அடைவார்கள். எப்பொழுதும் ஏழ்மை, நோய், துன்பம் உண்டாகி வருந்தும் நிலையை அடைவார்கள்.


(தொடரும்)


கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா:43<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:A/L/ வங்கியாளர்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் அசைவமும் ஏற்கப்படும்<br>தொ.இ: B/3932 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 34செவ் 1இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BSc, MSc/அரச தொழில்<br>தொ.இ: G/4485 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 24<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L USA PR<br>தொ.இ: B/3937 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 40<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/4491 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 26<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்:O/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/3938 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா:32செவ்4இல்<br>தகைமை/தொழில்:NCAT<br>தொ.இ: G/4498 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா:56<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:O/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/3952 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 39சூரிசெவ் 2 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/4488 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

# ஒளிரும் வெள்ளை ரோஜா பூந்தோட்டம்




காதலர் தினத்தினை முன்னிட்டு ஹொங்காங் நகரில் ஒளிரும் வெள்ளை ரோஜா பூந்தோட்டத்தை உருவாக்கி காதல் ஜோடிகளுக்கு சமர்ப்பித்துள்ளனர்.

காதலர் தினத்தினை முன்னிட்டு ஹொங்காங் நகரில் 25 ஆயிரம் ஒளிரும் வெள்ளை ரோஜா பூந்தோட்டத்தினை வடிவமைத்துள்ளனர்.

எதிர்வரும் 22 ஆம் திகதிவரை காட்சிப்படுத்தவுள்ள இந்த ஒளிரும் சிறப்பு பூந்தோட்டத்தை பார்வையிடவும் அதன் அருகே புகைப்படம் எடுக்கவும் உலகெங்கிலும் இருந்து காதலர்கள் குவிந்த வண்ணம் உள்ளனர்.

LED விளக்குகளால் வடிவமைத்துள்ள இந்த பூந்தோட்டத்தை வடிவமைக்க 6 மாதங்கள் ஆனதாக இதன் அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தண்ணீர் பட்டாலும் பாதிப்பு ஏற்படாத வகையில் வடிவமைத்துள்ள இந்த பூக்கள் தனித்தனியாக சிரத்தை எடுத்து வடிவமைக்கப்பட்டுள்ளதாக கூறுகின்றனர்.

இந்த ஒளிரும் சிறப்பு பூக்களை வாங்கிச் செல்ல விருப்பப்படுபவர்களுக்கு 9 பவுண்டு விலையில் வழங்க உள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

ஒவ்வொரு மூன்று சதுர மீற்றரிலும 25 இற்கும் அதிகமான ஒளிரும் ரோஜாவை நிறுவியுள்ளனர்.

காலைப்பொழுதிலும் இந்த தோட்டம் அழகு சேர்ப்பதாக பார்வையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

செல்ஃபி பிரியர்களுக்கென பிரித்தியேகமாக ஒரு பகுதியை ஒதுக்கியுள்ளனர், அதில் சிறப்பான கோணத்தில் புகைப்படங்கள் எடுக்கலாம் என அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (இ)

## நைஜீரியாவில் போகோஹராம்

# தீவிரவாதிகள் மீண்டும் வெறியாட்டம்

# கிராம மக்கள் 30 பேர் படுகொலை!

(அபுஜா)

**வடகிழக்கு நைஜீரியாவில் உள்ள இரண்டு கிராமங்களுக்குள் நேற்று முன்தினம் நள்ளிரவுவேளை ஆயுதங்களுடன் புகுந்த போகோஹராம் தீவிரவாதிகள் துப்பாக்கிகளால் சுட்டும் கழுத்தை அறுத்தும் அப்பாவி பொதுமக்கள் 30 பேரை கொன்று குவித்துள்ளனர்.**

கிறிஸ்தவர்களும் முஸ்லிம்களும் சமஅளவில் வாழ்ந்து வரும் நைஜீரியா நாட்டில் இஸ்லாமிய சட்டதிட்டங்களுக்கு உட்பட்ட ஆட்சியை கொண்டு வர வேண்டும் என்று போகோஹராம் அமைப்பை சேர்ந்த தீவிரவாதிகள் ஆயுதமேந்திய போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கிறிஸ்தவர்கள் பெரும்பான்மையாக வாழும் கிராமங்களுக்குள் கும்பலாக நுழையும் இவர்கள், அங்குள்ள மக்களை ஈவிரக்கமின்றி கொன்று குவிக்கின்றனர். இவர்களால் கடந்த ஆண்டு கடத்தப்பட்ட 200இற்கும் மேற்பட்ட மாணவிகளின் நிலை என்னவாயிற்று? என்பது தொடர்பான எவ்வித விபரமும் தெரியாத நிலை நீடித்து வருகிறது.

வடக்கு நைஜீரியாவில் உள்ள சில சிறிய நகரங்களை கைப்பற்றியுள்ள போகோஹராம் தீவிரவாதிகள், தற்போது வடகிழக்கு மாநிலங்களின் தலைநகரான மைடுகுரியை கைப்பற்றும் நோக்கத்தில் அவ்வப்போது இப்பகுதியில் அதிரடி தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், வடகிழக்கு நைஜீரியாவில் உள்ள இரண்டு கிராமங்களுக்குள் ஆயுதங்களுடன் புகுந்த போகோஹராம் தீவிரவாதிகள் துப்பாக்கிகளால் சுட்டும் கழுத்தை அறுத்தும் அப்பாவி பொதுமக்கள் 30 பேரை கொன்று குவித்துள்ளனர்.

யாக்ஷாரி கிராமத்துக்குள் புகுந்த போகோஹராம் தீவிரவாதிகள் 22 பேரின் கழுத்தை அறுத்துக் கொன்றனர். அருகாமையில் உள்ள கச்சிபா கிராமத்துக்குள் புகுந்து 8 பேரை சுட்டுக் கொன்றனர். இரு கிராமங்களிலும் மக்கள் சேமித்து வைத்திருந்த உணவுப் பொருட்களை நாசப்படுத்தி, அங்கிருந்து கால்நடைகளையும் தீவிரவாதிகள் கடத்திச் சென்றுவிட்டனர் என உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. கடந்த ஆறாண்டுகளாக நடைபெற்றுவரும் போகோஹராம் தீவிர வாதிகளின் வெறியாட்டத்துக்கு 20 ஆயிரத்துக்கும் அதிகமான அப் பாவி பொதுமக்கள் பலியாகியுள்ளனர். 25 இலட்சத்துக்கும் அதிமானோர் அகதிகளாக வெளிநாடுகளில தஞ்சமடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## வடகொரிய ஜனாதிபதியை கொல்ல வேண்டும்

### தென்கொரிய எம்.பி. சர்ச்சைப் பேச்சு


உலக மக்களை காப்பாற்றும் நோக்கத்தில் வட கொரிய ஜனாதிபதியான கிம் ஜாங்-உன்னை உடனடியாக கொல்ல உத்தரவிட வேண்டும் என தென் கொரிய ஜனாதிபதிக்கு எம்.பி ஒருவர் கோரிக்கை விடுத்துள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தென் கொரிய நாட்டை சேர்ந்த வானொலி நிகழ்ச்சி ஒன்றில் அந்நாட்டு ஆளும் கட்சியை சேர்ந்த Ha Tae-keung என்ற நாடாளுமன்ற உறுப்பினர்நேற்று முன்தினம் பங்கேற்றுள்ளார. அப்போது அவர் உலக மக்கள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்றால், வடகொரிய ஜனாதிபதியான கிம் ஜாங்-உன்னை உடனடியாக கொல்ல வேண்டும்.

இதற்கு தென்கொரிய ஜனாதிபதி உத்தரவு இடுவதுடன், அமெரிக்கா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகளின ஆதரவை பெற்று இதனை உடனடியாக நிறைவேற்ற வேண்டும். அதாவது, ஈராக் ஜனாதிபதியான சதாம் உசேனை தூக்கிலிட்டு கொன்றது போல வட கொரிய ஜனாதிபதியையும் கொல்ல வேண்டும். கிம் ஜாங்-உன் ஒரு குற்றவாளி. ஒரு குற்றவாளியை கொல்வது என்பது சர்வதேச சட்டங்களை மீறுவதாக கருதப்படாது.

எனவே உலகத்திற்கு பெரும் அச்சுறுத்தலாக விளங்கும் கிம் ஜாங்-உன்னை உடனடியாக கொல்ல தென் கொரிய ஜனாதிபதியான Park Geun-hye உத்தரவிட வேண்டும் என அவர் பரபரப்பாக பேட்டி அளித்துள்ளார்.

கடந்த டிசெம்பர் மாதம் முதல் ஐ.நா.சபையின் எதிர்ப்பை மீறி அணு ஆயுத சோதனைகளை வட கொரியா நடத்தி வருவதை தடுக்கவே Ha Tae-keung இந்த பரபரப்பான பேட்டியை அளித்துள்ளார்.



எனினும், இந்த செய்தி தொடர்பாக வட கொரியா அரசு இதுவரை எந்த பதிலும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## எயிட்ஸ் நோயாளியின் உடல் உறுப்பினை மற்றொரு நோயாளிகளுக்கு பொருத்தி சாதனை

(நியூயோர்க்)

அமெரிக்காவில் முதன் முறையாக எயிட்ஸ் நோயாளிகளுக்கு உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை நடந்தது. அமெரிக்காவில் மட்டும் 1 இலட்சத்து 22 ஆயிரம் எயிட்ஸ் நோயாளிகள் மாற்று உடல் உறுப்புகள் கிடைக்காமல் காத்து இருக்கின்றனர்.

எனவே, அக்குறையை போக்க எயிட்ஸ் நோயாளியிடம் இருந்து உறுப்பு பெற்று பாதிக்கப்பட்ட எயிட்ஸ் நோயாளிக்கு பொருத்த ஜான்ஸ் ஹேோப் கின்ஸ் பல்கலைக்கழக அறுவை சிகிச்சை நிபுணர்கள் ஆய்வு மேற்கொண்டனர்.

இதை தொடர்ந்து எயிட்ஸ் நோய் தாக்கியவருக்கு அதே நோய் தாக்கியவரிடம் இருந்து சிறுநீரகம் மற்றும் கல்லீரல் தானமாக பெற்று அறுவை சிகிச்சை மூலம் பொருத்தப்பட்டது.

அமெரிக்காவில் முதன் முறையாக இச் சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது.

இதன் மூலம் அமெரிக்காவில் ஆண்டுக்கு 500 முதல் 600எயிட்ஸ் நோயாளிகளின் வீணாகும் உடல் உறுப்புகள் சராசரியாக 1000 பேரின் உயிரை காக்கும் என தெரிவித்துள்ளனர். (இ)

# உலக சுகாதார அமைப்பு கவலை

## ஷிகாவுடன் பக்கவாதத்தை ஏற்படுத்தும் நோயும் வேகமாகப் பரவி வருவதனால்

ஷிகா வைரஸ் பரவியுள்ள நாடுகளில் முதன்முறையாக பிரேசில், கொலம்பியா, வெனிசுவெலா போன்ற நாடுகளில் மட்டும் நிரந்தர பக்கவாத நோய்க்கு காரணமான Guillain-Barre syndrome (GBS) என்ற நோய்த்தொற்றும் பரவி வருவதாக உலக சுகாதார அமைப்பு கவலை தெரிவித்துள்ளது.

டெங்கு மற்றும் சிக்கன் குனியாவுக்கு காரணமான நுளம்புகளின் வாயிலாக கடந்த ஆண்டு பிரேசில் நாட்டில் தோன்றிய ஷிகா நோயானது 26 அமெரிக்க நாடுகளிலும் ஐரோப்பிய கண்டத்தில் உள்ள சில நாடுகளிலும் படுவேகமாக பரவி வருகின்றது.

தாயின் கருவில் வளரும் குழந்தைகளின் மூளை வளர்ச்சியை இந்த நோய் பாதிப்படையச் செய்கிறது. இதனால், ஷிகா பாதிப்புடன் பிறக்கும் குழந்தைகள் சிறிய தலைகளுடன் காணப்படுகின்றன. இந்நோயானது, சிக்குன் குனியா, டெங்கு உள்ளிட்ட நோய்களை பரப்பும் 'ஏடிஸ்' நுளம்புகளால் பரவுவதாக முதலில் தெரிவிக்கப்பட்டது. ஆனால், பாலியல் உறவு மூலமாகவும ஷிகா பரவுவதாக அண்மையில் கண்டறியப்பட்டுள்ளது.

இந்நோயை குணப்படுத்தும் மருந்துகளோ, தடுப்பு மருந்துகளோ இதுவரை கண்டுபிடிக்கப்படாத நிலையில் ஏற்கனவே பிரேசில் நாட்டில் ஆயிரத்துக்கும் அதிகமான குழந்தைகள் ஷிகா நோய் பாதிப்புடன் பிறந்துள்ளன.

கர்ப்பம் தரித்த பெண்களை ஷிகா வைரஸ் தாக்கினால், பிறக்கக்கூடிய குழந்தைகள் பிறவிக்குறைபாடுகளை கொண்டிருக்கும். குறிப்பாக தலை சிறியதாக இருக்கும், மூளை பகுதியில் பாதிப்பு இருக்கும். பிரேசில் நாட்டில் மட்டும் இப்படி 4,074 குழந்தைகள் சிறிய தலைகளுடன் பிறந்துள்ளதால், அங்கு பெண்கள் கர்ப்பம் அடைய வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தெற்கு அமெரிக்காவின் கொலம்பியா பகுதியில் மட்டும் 25 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் ஸிகா வைரஸ் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளனர். இவர்களில் 3177 பேர் கர்ப்பிணிப் பெண்கள் என்பதால் அவர்களுக்கு பிறக்கும் குழந்தைகளின் எதிர்காலம் கேள்விக்குறியாக உள்ளது. இங்கு மட்டும் மேலும் 6 இலட்சம் பேர் ஷிகா பாதிப்புக்கு உள்ளாகக் கூடும் என அஞ்சப்படுகிறது.

ஆசியா கண்டத்துக்கும் வேகமாக பரவ தொடங்கியுள்ள ஷிகா வைரஸ் தொடர்பாக உலக சுகாதார நிறுவனமான "WHO" கவலை தெரிவித்துள்ளது. ஷிகா வைரஸ் கிருமிகள் மிக வீரியத்துடன் பரவி வருவதாக உலக சுகாதார நிறுவனத்தின் தலைவரான மார்கரெட் சான் குறிப்பிட்டுள்ளார்.

சுமார் 40 இலட்சம் மக்களை இந்நோய் தாக்கக் கூடும் என மதிப்பிட்டுள்ள உலக சுகாதார நிறுவனத்தின் தொற்றுநோய்த்துறை இயக்குநரான டாக்டர் மார்கோஸ் எஸ்பினல், நுளம்புகள் எங்கெல்லாம் உள்ளனவோ, அங்கெல்லாம் ஷிகா நோய் செல்லக்கூடும். அது பரவும்வரை நாம் காத்திருக்க கூடாது என எச்சரித்துள்ளார்.

அமெரிக்க நாடுகளை கடந்து ஐரோப்பா மற்றும் ஆசிய நாடுகளிலும் ஷிகா நோய் வேகமாக பரவி வருகின்றது. தெற்கு அமெரிக்க நாடுகளில் ஒன்றான வெனிசுவெலாவில் ஷிகா வைரஸ் தொற்றுக்கு மூன்றுபேர் உயிரிழந்ததாக அதிகாரபூர்வ தகவல் வெளியானது.

இதற்கிடையில், ஷிகா வைரஸ் பரவியுள்ள 34 நாடுகளில் முதன்முறையாக பிரேசில், கொலம்பியா, வெனிசுவெலா போன்ற நாடுகளில் மட்டும் நிரந்தர பக்கவாத நோய்க்கு காரணமான Guillain-Barre syndrome (GBS) என்ற நோய்த் தொற்றும் பரவி வருவதாக உலக சுகாதார அமைப்பு வெளியிட்டுள்ள வாராந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (இ)

## சூதாட்ட விடுதியில் துப்பாக்கிச் சூடு

### பலர் படுகாயம்

பிரான்ஸில் உள்ள பிரபல சூதாட்ட விடுதிக்குள் கொள்ளைக் கும்பல் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பலர் படுகாயம் அடைந்தனர்.

தெற்கு பிரான்ஸின் எக்ஸ் அன் புரோவன்ஸ் நகரில் உள்ள பாசினோ சூதாட்ட விடுதியில் நேற்றுமுன்தினம் இரவு ஏராளமான வாடிக்கையாளர்கள் இருந்தனர்.

அப்போது 4 மர்ம நபர்கள் துப்பாக்கிகளுடன் புகுந்து வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர்.

இதனால் அங்கிருந்த நபர்கள் சிதறி ஓடினார்கள். இதில் ஒருவர் மீது ஒருவர் விழுந்ததால் சிலருக்கு காயம் ஏற்பட்டது.

இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திய மர்ம நபர்கள் அங்கிருந்த பணத்தை கொள்ளையடித்து தப்பிச் சென்றனர். 15 பேர் சிறு காயங்களுடன் மீட்கப்பட்டதாக பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

130 பேர் பலியான பாரீஸ் தாக்குதலைத் தொடர்ந்து நாடு முழுவதும் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. இருப்பினும்தற்போதைய கொள்ளை சம்பவத்தில் தீவிரவாத தொடர்பு இல்லை என்று பிராந்திய பொலிஸ் தலைவர் தெரிவித்துள்ளார்.

கொள்ளைக் கும்பலை பொலிஸார் தீவிரமாகத் தேடி வருகின்றனர். தாக்குதல் நடந்த சூதாட்ட விடுதியில் கூடுதல் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது. (இ)

# போருக்காக துருக்கி நோக்கி சவுதியின் போர் விமானங்கள்



சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக தாக்குதல் நடத்துவதற்காக நேட்டோ உறுப்பினரான துருக்கிக்கு சவுதி அரேபியா போர் விமானங்களை அனுப்ப முடிவு செய்துள்ளது. இந்த தகவலை துருக்கியின் வெளியுறவுத் துறை அமைச்சர்மெவ்லத்காவு சோக்லுதெரிவித்துள்ளார்.

கடந்த சில வாரங்களாக சவுதி அரேபியா சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிரான வான்வெளி தாக்குதல்களில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இதற்கு அமெரிக்காவும் பாராட்டு தெரிவித்துள்ளது. எனினும், சிரியாவிற்குள் அமெரிக்கா தனது இராணுவத்தின் தரைப் படையை களமிறக்க மறுப்பு தெரிவித்துள்ளது. ஆனால், சவுதி அரேபியா இராணுவ தரைப்படையை துருக்கியுடன் இணைந்து களமிறக்க விருப்பம் தெரிவித்துள்ளது.

சிரியாவில் 4 மாதங்களாக ரஷ்யா நடத்தி வரும் வான்வெளி தாக்குதல்கள் ஜனாதிபதி ஆசாத்தின் படைகள் மீண்டும் கைப்பற்றப்பட்ட நகரங்களை ஐ.எஸ். தீவிரவாதிகளிடமிருந்து மீட்க பக்கபலமாக அமைந்தது. (இ)

# காற்று மாசடைவதால் ஆண்டுதோறும் இலட்சக் கணக்கானோர் உயிரிழப்பு

## இந்தியா, சீனாவில் அதிகம்

காற்று மாசுபாட்டினால் உலகம் முழுவதும் ஆண்டுதோறும் 55 இலட்சம் பேர் உயிரிழக்கின்றனர். இதில் பாதிக்கு மேற்பட்ட உயிரிழப்பு வேகமாக வளர்ந்து வரும் சீனா, இந்தியா நாடுகளில் தான் நிகழ்கிறது.

அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்றில் இந்த தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.


காற்று மாசுபாட்டினால் ஏற்படும் சிக்கல்களால், கடந்த சில வருடங்களாக, குறிப்பட்ட காலத்துக்கு முன்பாகவே மரணமடைபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருவதாக அமெரிக்காவின் தலைநகர் வோஷிங்டனில் உள்ள அறிவியல் மையம் எச்சரித்துள்ளது.

இது குறித்து கனடாவில் உள்ள பிரிட்டிஸ் கொலம்பியா பல்கலைக்கழகத்தின் மக்கள் தொகை மற்றும் பொது சுகாதாரத் துறை பேராசிரியர் மிச்செல் பிராயர் கூறுகையில், "உலக அளவில் இறப்பு விகிதம் அதிகரிப்பதற்கான காரணிகளில் 4 ஆவது முக்கிய பிரச்சினையாக காற்று மாசுபாடு உள்ளது. அதேபோல் சுற்றுச் சூழல் மாசுபடவும் முக்கிய காரணியாக உள்ளது" என்றார்.

அதேபோல், உலக அளவில் இரத்த கொதிப்பு, உணவுக் கட்டுப்பாடு மற்றும் புகைப் பிடித்தல் ஆகியவற்றிற்கு அடுத்த இடத்தில் ஆபத்தான காரணியாக காற்று மாசுபாடு உள்ளது என்று மற்றொரு அமைப்பு கூறியுள்ளது. (இ)




# நியூசிலாந்தில் கடுமையான நிலநடுக்கம் பாறைகள் கடலுக்குள் சரிந்து விழுந்தன



நியூசிலாந்தின் கிறைஸ்ட் சர்ச் நகரில் நேற்று ஏற்பட்ட கடுமையான நிலநடுக்கத்தின் விளைவாக பாறைகள் கடலுக்குள் சரிந்து விழுந்தன.

நியூசிலாந்தின் தெற்குப் பகுதி தீவு நகரான கிறைஸ்ட் சர்ச் நகரில் இருந்து கிழக்கே சுமார் 15 கிலோ மீற்றர் தூரத்தில், பூமியின் அடியில் 15 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்ட இன்றைய நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 5.7 ஆக பதிவாகியுள்ளது.

நிலநடுக்கத்தை அடுத்து சுமார் 40 முறை நில அதிர்வுகளும் ஏற்பட்டதால் மலைக்குன்றுகள் சூழ்ந்த இப்பகுதியில் இருந்து பாறைகள் உருண்டு, கடலுக்குள் சரிந்து விழுந்ததாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. உயிர்ப்பலி, பொருட்சேதம் குறித்த உடனடி தகவல்கள் ஏதும் கிடைக்கவில்லை.

கடந்த 2011 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இதேபகுதியை தாக்கிய நிலநடுக்கத்துக்கு சுமார் 200 பேர் பலியாகினர். 4000 கோடி டொலர்கள் அளவுக்கு சேதாரம் ஏற்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# வெடிகுண்டுத் தாக்குதலில் சிக்கி சிரியாவில் 16 பேர் உயிரிழப்பு

(டமாஸ்கஸ்)

சிரியாவில் அரச ஆதரவு படைக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே போர் நடைபெற்று வருகிறது. இதனிடையே சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகள் மீது அரச படைகள் மட்டுமல்லாமல், அமெரிக்கா, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகள் தாக்குதல் நடத்தி வருகின்றன.

ஐ.எஸ். தீவிரவாதிகள் மீதான தாக்குதலில் பின்னர் ரஷ்யாவும்இணைந்து கொண்டு தொடர்ந்து வான்வெளி தாக்குதலை நடத்தியது.

இந்நிலையில், நேற்று முன்தினம் ரஷ்யா நடத்திய வெடிகுண்டு தாக்குதலில் சுமார் 16 பேர் கொல்லப்பட்டதாக துருக்கி தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிரியாவில் நடைபெற்று வரும் போரினை முடிவுக்கு கொண்டு வருவதற்கு வல்லரசு நாடுகள் ஒப்புதல் அளித்த சில மணி நேரங்களில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக துருக்கி வெளியுறவு அமைச்சர் மெவ்லட் காவுசோக்லு கூறினார்.

மேலும், "நேற்று முன்தினம் இரவு நாங்கள் ஒப்பந்தம் போட்ட பிறகும், ரஷ்யா தன்னுடைய தாக்குதலை தொடர்ந்துள்ளது. 16 அப்பாவி மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். பாடசாலைகள், வைத்தியசாலைகள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது" என்று தெரிவித்தார். (இ)

# ராணுவத்தில் உளவாளியை உருவாக்க முயன்ற ஐ.எஸ்.

இந்திய இராணுவத்தில் உளவாளியை ஏற்படுத்துமாறு ஐ.எஸ் அமைப்பின் தலைவர் மேஜர் இக்பால் தன்னிடம் கூறியதாக மும்பை தாக்குதல் குற்றவாளி டேவிட் ஹேட்லி வாக்குமூலம் அளிததுள்ளார்.

மும்பைத் தாக்குதல் குற்றவாளி டேவிட் ஹேட்லி, அமெரிக்க சிறையில் இருந்தவாறு, தொடர்ந்து 5 நாட்களாக "வீடியோ கான்பரன்சிங்" மூலமாக வாக்குமூலம் அளித்து வருகிறார். லஷ்கர்-இ-தொய்பா அமைப்பைச் சேர்ந்த தீவிரவாதி டேவிட் ஹேட்லி நேற்று முன்தினம் அளித்த வாக்குமூலத்தில்,

இந்திய இராணுவத்தின் தென்பகுதி தலைமையகமான புனேவுக்குச் சென்று பார்வையிடுமாறு கூறினார்.

மேலும், இந்திய இராணுவத்தில் இருந்து கொண்டு நமக்குத் தகவல்களை அளிக்கும்வகையில்ஒரு உளவாளியை உருவாக்குமாறும்ஐ.எஸ் அமைப்பின் தலைவர் மேஜர் இக்பால் வலியுறுத்தினார்.

அதேபோல், பாபா அணு சக்தி ஆராய்ச்சி மையத்தில் இருக்கும் யாரையாவது உளவாளியாக மாற்றி, அங்கிருந்து முக்கியத் தகவல்களை பெறுவதற்கு ஏற்பாடு செய்யுமாறும் இக்பால் வலியுறுத்தினார்.

மும்பையில் உள்ள சித்தி விநாயகர் கோயில் மற்றும் சிவசேனா பவனில் தான் ஆய்வுசெய்ததாகவும், ஆனால், லஷ்கர் - இ - தொய்பா அமைப்பினரை, அங்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரமாக இருப்பதால் தாக்குதல் நடத்த வேண்டாம் என்று கூறிவிட்டதாகவும் ஹேட்லி கூறியுள்ளார்.

அத்தோடு, லஷ்கர்-இ-தொய்பா அமைப்பின் தளபதி ஹபீஸ் சயீத்தையும், செயல் தளபதி ஸாகிர் ரஹ்மானையும் சந்தித்ததை ஹேட்லி ஒப்புக் கொண்டுள்ளார்.(இ)

## அம்பாள் முன்பள்ளிக்கு மின்சார வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை

(கெற்பேலி)

கெற்பேலி கிராமத்தில் உள்ள அம்பாள் முன்பள்ளிக்கு நீண்ட காலமாக மின்சார வசதி ஏற்படுத்தி கொடுக்கவில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறித்த முன்பள்ளியின் வருடந்தோறும் 25 இற்கும் மேற்பட்ட சிறார்கள் இணைந்து கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் இம்முன்பள்ளியின் அடிப்படை வசதிகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில் காணப்படுகின்றது.

நீண்டகாலமாக இம்முன்பள்ளிக்கு மின்சார வசதிகள் எந்தவொரு அதிகாரிகளாலும் செய்து கொடுக்கப்படவில்லை.

இக்கிராமத்தில் உள்ள மக்கள் வறுமையான சூழலில் வாழ்வதால் இம்முன்பள்ளியின் தேவைகளை பெற்றோர்கள் சார்பில் நிறைவேற்ற முடியவில்லை.

இது தொடர்பாக முன்பள்ளி நிர்வாகத்தினரால் பலமுறை தெரியப்படுத்தப்பட்டும் இதுவரை நிறைவேற்றப்படாத நிலையில் காணப்படுகின்றது. எனவே பின்தங்கிய நிலையில் காணப்படும் கெற்பேலிக் கிராமத்தில் உள்ள அம்பாள் முன்பள்ளிக்கு மின்சார இணைப்புகள் ஏற்படுத்தக் கோரி முன்பள்ளிக் சிறார்களின் பெற்றோர்கள், முன்பள்ளி நிர்வாகத்தினர் கோரிக்கையை முன்வைத்துள்ளனர். (இ-5-83)

## மாதாந்த ஒன்றுகூடல் நிகழ்வு

தேசிய தேசோதய சபையின் மாதாந்த ஒன்றுகூடல் நிகழ்வு எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். மாவட்ட சர்வோதய தலைமைக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட தேசோதய சபையின் தலைவர் கலாநிதி நா.தனேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இவ் ஒன்றுகூடலுக்கு, யாழ். மாவட்ட அமைப்பாளர் யுகேந்திரன் கலந்துகொள்ளவுள்ளார். (இ-5)

## வீரகுமார திஸாநாயக்க எம்.பியின் இணைப்புச் செயலாளருக்குக் காயம்

### துப்பாக்கி தோட்டா பாய்ந்தது

நாடாளுமன்ற உறுப்பினர் வீரகுமார திஸாநாயக்கவின் இணைப்புச் செயலாளர் துப்பாக்கி வெடித்து காயமடைந்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் வீரகுமார திஸாநாயக்கவின் மெய்ப் பாதுகாவலர்களில் ஒருவரது துப்பாக்கியே இவ்வாறு வெடித்துள்ளது.

அநுராதபுரம் பீரிமன் மாவத்தையில் அமைந்துள்ள காரியாலயத்தில் வைத்து துப்பாக்கியை எடுத்து பார்த்து அதனை அங்கும் இங்கும் அசைத்துக் கொண்டிருந்த போது தவறுதலாக துப்பாக்கி வெடித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் வீரகுமாரவின் இணைப்புச் செயலாளராக 49 வயதான பி.எம். அமரசிங்க என்பவரே சம்பவத்தில் காயமடைந்துள்ளார்.

அமரசிங்கவிற்கு, கைகள் மற்றும் கால்களில் காயம் ஏற்பட்டுள்ளதாகவும் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்ற உறுப்பினர் வீரகுமார திஸாநாயக்க, விமல் வீரவன்ஷ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியின் உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனாமடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 50 | 70 | 70 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 60 | 50 | 50 | 60 | 60 | 60 |
| பச்சைமிளகாய் | 200 | 150 | 200 | 200 | 200 | 200 |
| தக்காளி | 60 | 50 | 50 | 50 | 60 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 35 | 40 | 40 | 40 |
| கோவா | 60 | 80 | 60 | 80 | 80 | 80 |
| கரட் | 200 | 200 | 200 | 240 | 300 | 200 |
| பூசணி | 80 | 80 | 70 | 100 | 80 | 60 |
| புடோல் | 60 | 50 | 30 | 60 | 60 | 70 |
| வாழைக்காய் | 60 | 60 | 45 | 40 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 80 | 80-100 | 100 | 70 |
| பெரிய வெங்காயம் | 60 | 80 | 50 | 60 | 60 | 60 |
| பாகற்காய் | 120 | 100 | 80 | 80 | 150 | 80 |
| வெண்டிக்காய் | 140 | 100 | 70 | 80-100 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 80 | 60 | 50 | 80 | 80 | 70 |
| பயற்றங்காய் | 150 | 120 | 90 | 100 | 120 | 140 |
| லீக்ஸ் | 80 | 100 | 80 | 100 | 120 | 100 |
| பீற்றூட் | 60 | 100 | 70 | 80 | 100 | 80 |
| கறிமிளகாய் | 250 | 200 | 180 | 240 | 240 | 200 |
| முருங்கைக்காய் | 1000 | 400 | 450 | 700 | 800 | 800 |
| போஞ்சி | 80 | 100 | 60 | 60 | 120 | 80 |
| கத்தரித்தம்புள்ள | 60 | 50 | 50 | — | 80 | 60 |
| கீரை - 1பிடி | 30 | 10 | 15 | 30 | 30 | 20 |
| தேசிக்காய் | 60 | 60 | 50 | 70 | 40 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30-50 | 30-45 | 50 | 35-45 | 40 |
| இராசவள்ளி | 140 | 180 | 100 | 160 | 120 | 120 |
| வெங்காயப்பூ | 60 | 50 | 50 | 80 | 100 | 60 |
| முள்ளங்கி | 30 | 40 | 30 | 40 | 60 | 30 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 20 | 30 | 20 | 30 |
| வல்லாரை | 10 | 10 | 10 | 10 | 20 | 20 |
| ஈரப்பலா | 50 | 50 | — | — | 100 | — |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## இலங்கைத் தமிழர்களுக்காக எம்.ஜி.ஆர் உண்ணாவிரதம் 105

**அமிர்தலிங்கம்**

இலங்கைத் தமிழர் தலைவர் அமிர்தலிங்கம், அவர் மனைவி மங்கையர்க்கரசி, சந்திரஹாசன் ஆகியோர் வந்து, எம்.ஜி.ஆருக்கு மாலை அணிவித்தனர்.

இலங்கைத் தமிழர்களுக்காக உண்ணாவிரதம் இருக்கும் தங்களுக்கு இலங்கைத் தமிழ் மக்கள் சார்பில் நன்றி கூறுகிறேன் என்று எம்.ஜி. ஆரிடம் அமிர்தலிங்கம் கூறினார்.

**நிதி**

மாலை 3.30 மணி அளவில் எம்.ஜி.ஆரிடம் ஒரு உண்டியலை நீட்டி நிதி போடும்படி ஜேப்பியார் கேட்டுக் கொண்டார். உடனே எம்.ஜி.ஆர். உண்டியலை வாங்கி அருகில் இருந்த அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரனிடம் கொடுத்தார்.

பிறகு தன் சட்டைப் பைக்குள் கையை விட்டு, 100 ரூபாய் நோட்டு கத்தையை எடுத்தார். ஒவ்வொரு 100 ரூபாயாக அமைச்சர் ராமச்சந்திரனிடம் கொடுக்க அதை அமைச்சர் மடித்து உண்டியலுக்குள் போட்டார்.



இப்படியே ஒரு நோட்டுக் கத்தை முழுவதையும் உண்டியலில் போட்டார்.

இதைத் தொடர்ந்து இலங்கைத் தமிழருக்கு உதவ நிதி குவிந்தது.

**பழரசம்**

6 மணி ஆன பிறகு மேடைக்குப் பழரசம் கொண்டு வரப்பட்டது. எம்.ஜி.ஆர். அதை மேடையில் இருந்த அனைவருக்கும் முதலில் கொடுக்கச்செய்தார்.

அனைவருக்கும் கொடுத்த பிறகு எம்.ஜி.ஆருக்கு அவர் மனைவி ஜனாகி அம்மாள் ஒரு பிளாஸ்டிக் தம்ளரில் பால் கொடுத்தார்.

அதை வாங்கி எம்.ஜி.ஆர் குடித்து உண்ணாவிரதத்தை முடித்துக்கொண்டார்.

உண்ணாவிரத நிகழ்ச்சி முடிந்ததும் தலைமைச் செயலாளர் டி.வி.அந்தோணி, அண்ணா சதுக்கத்தில் நிருபவர்களிடம் கூறியதாவது:-

**1 1/2 லட்சம் பேர்**

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காகத் தமிழ்நாடு முழுவதும் 2 ஆயிரத்து 714 இடங்களில் 1 இலட்சத்து 44 ஆயிரத்து 482 பேர் பொது இடங்களில் அமர்ந்து உண்ணா விரதம் இருந்தார்கள். அவரவர் வீடுகளிலும் நிலையங்களிலும் உண்ணா விரதம் இருந்தவர்கள் எண்ணிக்கை பல லட்சங்களுக்கு மேல் இருக்கும்.

**கடை அடைப்பு**

இந்த உண்ணாவிரதத்தையும் முழு அடைப்பையும் ஒட்டித் தமிழ்நாடு முழுவதும் எல்லா கடைகளும் நிறுவனங்களும் மூடப்பட்டு இருந்தன. அசம்பாவிதங்கள் எதுவும் நடைபெறவில்லை. மொத்தத்தில் மிக அமைதியாக நடைபெற்றது.

சென்னையில் அண்ணா சமாதிக்கு முன்னால் உண்ணா விரதம் இருந்த முதலமைச்சர் எம்.ஜி.ஆரைப் பார்ப்பதற்கும் இலங்கைத் தமிழர்கள் துயரில் பங்குகொள்வதற்கும் காலை 6 மணியில் இருந்து மாலை 6 மணி வரை வரிசையாக வந்து போனவர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 10 லட்சம்.

**12 மணி நேரம்**

முதலமைச்சர் எம்.ஜி.ஆர். காலை 6 மணிக்கு அங்கு உட்காந்தவர் மாலை 6 மணி வரை 12 மணி நேரம் அந்த இடத்தை விட்டு எழுந்திருக்கவே இல்லை.

கொஞ்சம் கூட களைப்பு இல்லாமல் ஒவ்வொரு நிமிடமும் தன் கைகளை உயர்த்தி 2 விரல்களையும் விரித்துக் காட்டி வாழ்த்து தெரிவித்தார். இடையில் இரண்டு மடக்கு தண்ணீர் மட்டும் குடித்தார். வேறு எதுவும் சாப்பிடவில்லை.

இவ்வாறு தலைமைச் செயலாளர் டி.வி.அந்தோணி தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ் போராளிகளுக்கு இடையே மோதல் ஏற்பட்டது. இதில் தமிழீழ விடுதலை இயக்க தலைவர் சிறிசபாரத்தினத்தை விடுதலைப்புலி தளபதி கிட்டு சுட்டுக்கொன்றார்.

போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி இலங்கையில் தமிழர்களைச் சிங்கள இராணுவ கொன்று குவித்ததால், பூட்டான் தலைநகர் திம்புவில் நடைபெற்ற சமரசப் பேச்சு முறிந்தது. இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்பதிலும் மீண்டும் சமரசப் பேச்சு தொடர வேண்டும் என்பதிலும் பிரதமர் ராஜீவ் காந்தி மிகுந்த ஆர்வம் காட்டினார்.

**கண்காணிப்புக்குழு**

இலங்கையில் போர் நிறுத்தம் சரிவர கடைப்பிடிக்கப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க ஒரு குழுவை இலங்கை அரசு அமைக்க வேண்டும் என்று பிரதமர் ராஜீவ் காந்தியும் அவருடைய தூதரும் வெளிநாட்டு இலாகா செயலாளருமான பண்டாரியும் முயற்சி மேற்கொண்டனர். இதை ஏற்று போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவை இலங்கை அரசு அமைத்தது.



இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்தித்துவிட்டு தமிழீழம் திரும்பியபோது இந்திய இராணுவத்தினருடன் தமிழீழத் தேசியத் தலைவர்

(தொடரும்)

# பொன்சேகாவின் கட்டுப்பாட்டில் குற்றப்புலனாய்வு திணைக்களம்?



ஐக்கிய தேசிய கட்சியின் தேசிய பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினராக பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா நாடாளுமன்றத்திற்குள் பிரவேசித்துள்ளார்.

பல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு தேசிய அரசாங்கத்தில் பொறுப்பான பதவி வழங்குவது தொடர்பில் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் குற்ற விசாரணை திணைக்களத்தை தனக்கு கீழ் நியமிக்குமாறு பொன்சேகா, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரியுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சி தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எனினும் இது தொடர்பில் பிரதமர் தனது விருப்பத்தை வெளிப்படுத்தவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

பொன்சேகாவுக்கு சட்டம் மற்றும்ஒழுங்கு அமைச்சர்பதவி வழங்கப்படவுள்ளதாக கடந்த வாரங்களில் ஊடகங்களில் செய்தி வெளியாகின. எனினும் பிரதமர் இராணுவ நலன புரி அமைச்சர் பதவி வழங்குவதற்கே எதிர்பார்த்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதன் ஊடாக இராணுவ சேவை அதிகார சபை, சிவில் பாதுகாப்பு சேவை, தேசிய மாணவர் படை, இளைஞர் படையணி ஆகிய நிறுவனங்களை அவரின் கீழ் நியமிப்பதற்கும் அதன் ஊடாக பாதுகாப்பு பிரிவு உறுப்பினர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களின் நம்பிக்கையை அரசாங்கத்தின் பக்கம் திருப்பி கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

அதற்கு மேலதிகமாக தீர்மானிக்கப்பட்டுள்ள தெற்கு அபிவிருத்தி அமைச்சர் பதவி பொன்சேகாவுக்கு வழங்கி ராஜபக்ஷக்களுக்கு தெற்கில் உள்ள வலுவான வாக்குகளை தடுப்பதற்காக அவரை பயன்படுத்தி கொள்ள தீர்மானித்துள்ளனர்.

அவரின் பிறந்த ஊரான அம்பலாங்கொட என்பதனால் வேறு பிரதேசங்கள் மற்றும் குடும்ப பின்னணி காரணமாகவும் அதற்கு பொன்சேகா மிகவும் பொருத்தமானவர் என்பதனால் சர்வதேச ரீதியில் இதற்கு ஆதரவு வழங்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சி தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ)

# நெருக்கடியை எதிர்நோக்கும் கல்வியமைச்சு

(கொழும்பு)

மலசலகூட வசதிகளை ஏற்படுத்திக் கொள்வதற்காக அமைச்சரவையின் அனுமதியின்றி ஆயிரத்து 200 பாடசாலைகளுக்கு கடந்த வருடம் தலா 20 லட்சம் ரூபா வழங்கியமை தொடர்பில் கல்வியமைச்சு பெரும் நெருக்கடியை எதிர்நோக்கி வருவதாக கூறப்படுகிறது.

அமைச்சரவையின் அனுமதியின்றி பணத்தை வழங்கியமை மற்றும் அதனை பெற்றுக்கொண்டமை சம்பந்தமாக கணக்காய்வாளர் திணைக்களம் கல்வியமைச்சிடம் விபரங்களை கேட்டுள்ளது.

கணக்காய்வாளர் திணைக்களத்தின் கோரிக்கைக்கு நீண்ட குறிப்பை எழுதியுள்ள கல்வியமைச்சின் செயலாளர் டபிள்யூ.எம். பந்துசேன, அதனை சகல மேலதிக செயலாளர்களுக்கும் அனுப்பியுள்ளார்.

மாகாண சபைக்குரிய பாடசாலைகளும் இந்த திட்டத்திற்குள் வருவதால், பணத்தை வழங்குவது தொடர்பில் அமைச்சரவையில் அனுமதியை பெறுவது கட்டாயமாகும்.

இது குறித்து கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசத்திற்கு தெளிவுபடுத்தப்படாதது பெரும் சிக்கலான நிலைமையை ஏற்படுத்தியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மலசலகூடவசதிகளை மேம்படுத்துவதற்காக பாடசாலைகளுக்கு நிதியளிக்கும் வேலைத்திட்டம் கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டது.

நிர்மாணிக்கப்படும் மலசலகூட கட்டமைப்பு திட்டத்தை அமைச்சு உருவாக்கி அதனை பாடசாலைகளுக்கு வழங்கியது. (இ)

# இரவுநேரங்களிலும் தபாலகங்களை திறக்க நடவடிக்கை




(கொழும்பு)

வீதி சட்டதிட்டங்களை மீறும் வாகன சாரதிகளுக்காக பொலிஸாரினால் வழங்கப்படும் தண்டப்பணத்தினை செலுத்துவதற்காக நாடு பூராகவும் பிரதான நகரங்களில் உள்ள தபால் காரியாலங்களை இரவு 8 மணிவரைக்கும் திறந்து வைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை இந்த தபாலகங்களை திறந்து வைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது சிறந்த விடயம் தான். ஆனால் சிறந்த மேற்பார்வை இல்லாமல் இந்தத் திட்டத்தை தபால் திணைக்களம் முன்னெடுத்தால் மேலும் பல தரக்குறைவான நியமனங்கள் இடம்பெறுவதை தடுக்க முடியாதென்று ஒருங்கிணைந்த தபால் தொழிற்சங்கத்தின் ஏற்பாட்டாளர் சிந்தக பண்டார தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த திட்டத்தை செயற்படுத்தினால் இரவு நேர சேவையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு மேலதிக கொடுப்பனவை செலுத்த வேண்டும்.

அதுமட்டுமின்றி மின்சார கட்டணத்திற்கான கூடுதல் பணம் செலவழிக்க நேரிடும். அதேபோல் இதற்கான பாதுகாப்பை பலப்படுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எனவே இந்தத் திட்டத்தை , உரிய முறையில் கண்காணிப்பதற்காக சிறந்த மேற்பார்வையுடன் கொணடு நடத்த வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு என சிந்தக பண்டார தெரிவித்துள்ளார். (இ)

# நீதியமைச்சரிடம் ரூ.250 மில்லியன் நட்டஈடு கோரும் தனுன திலகரத்ன

(கொழும்பு)

தன்னை இழிவுபடுத்தும் வகையில் கருத்து வெளியிட்ட அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவிடம் 250 மில்லியன் ரூபாய் நட்ட ஈடு கோரியிருப்பதாக ஹைகோப் வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள தனுன திலகரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

தனது வங்கிக் கணக்கில் 800 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான நிதி இருப்பதாகவும், அவை ஊழல் செய்து பெறப்பட்டவை என்றும் அமைச்சர் கூறியமை தன்னுடைய பெயரை இழிவுபடுத்தும் வகையில் உள்ளதாக தனுக தெரிவித்துள்ளார்.

இதனாலேயே தாம் அவருக்கு நட்டஈடு கோரி சட்ட ரீதியாக கடிதம் அனுப்பியுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். (இ)

## இன்று ஒரு தகவல்

### மறுப்பது எப்படி?

மற்றவர்களுக்கு உதவி செய்து வாழ்வதை வாழ்வில் குறிக்கோள்களுள் ஒன்றாகக் கொண்டு வாழ வேண்டியதுதான்;இல்லையென்று மறுக்கவில்லை. அதற்காக நம் நேரம் நம் உடைமைகள் அனைத்தையும் நாம் மற்றவர்களுக்கு தியாகம் செய்ய வேண்டும் என்கிற கட்டாயம் ஏதும் இல்லை.

உதவி மனப்பான்மை உள்ளவன் என்று தெரிந்து விட்டால்,அவன் தலையில் மிளகாய் அரைக்கும் பொல்லாத உலகம் இது.அத்தகையவனை இளித்த வாயனாக்கி வேடிக்கை பார்க்கவும் ஆரம்பித்து விடும்.சில சமயங்களில் நம்மால் செய்ய இயலாத உதவிக்கான விண்ணப்பங்கள் நமக்கு வந்து சேரும். நேரமும் சுற்றுப்புறமும் அதைத் தடை செய்யும்.அது ஆபத்தான உதவியாக இருக்கும்.

மேலும், எங்களின் பெருந்தன்மைக்கும் பொறுமையின் எல்லைக்கும் சோதனையை ஏற்படுத்தக் கூடிய உதவியாகவும் இருக்கலாம்.

மற்றவர் சம்பந்தப்பட்ட- ஆனால்,அவரது விருப்பத்துக்கு நேர்மாறான உதவியாக இருக்கலாம்.

இத்தகைய சந்தர்ப்பங்களில் நீங்கள் அவ்வுதவிகளை மறுக்க நேரிடலாம். அப்போது,இதமாக பண்போடு மறுக்க வேண்டும்.

பொறுமை இழந்தோ கோபமாகவோ மறுக்காதீர்கள். நடக்காது,முடியாது, கிடையாது, வேறு ஆளைப் பார் மாட்டேன் என்பன போன்ற வார்த்தைகளை நேரடியாகப் பயன்படுத்தாதீர்கள்.

மன்னிக்க வேண்டும்,வருந்துகிறேன் என்னால் உதவ முடியாத சூழ்நிலை என்பன போன்றன இதமான வார்த்தைகளைச் சொல்லுங்கள். அதாவது மாவு ஒன்றுதான் பண்டம் தான் வேறு.

தெரியாதவர்களாக இருந்தால் இந்த அளவோடு நிறுத்திக் கொள்ளுங்கள். நண்பர்களாகவோ, உறவினர்களாகவோ இருந்தால் உங்களால் ஏன் உதவ முடியவில்லை என்பதற்கான காரணத்தை அவர் மனம் ஏற்றுக்கொள்ளும் படி பண்போடு விளக்குங்கள்.

இன்னும் தெளிவாகக் கூற வேண்டுமானால், நமக்கு மனமிருந்தும் மார்க்கமில்லை என்பதை மற்றவர் உணரும் வகையில் நடந்து கொள்ள வேண்டும். நீங்கள் தவறாக எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால் நான் ஒரு யோசனை சொல்கிறேன் என்பதான ஒரு பீடிகையைப் போட்டு விட்டு அவர் பயனடையும் வகையில் மாற்று வழிகள் எவையேனும் இருப்பின் அவற்றைச் சொல்லலாம்.

உதவி செய்யும் எண்ணம் அரை குறையாக இருந்தால் அவர்களது குறையைக் கேளுங்கள். அத்தகைய எண்ணம் அறவே இல்லையென்றால் அவர்களைப் பேசவிடாதீர்கள். காரணம் அனைத்தையும் கிண்டிக் கிளறிக் கேட்டு விட்டு அதற்குப் பிறகு மறுப்பது பண்பல்ல .

ஒட்டுமொத்தமாகச் சொல்ல வேண்டுமானால் உதவி மறுக்கப்பட்டதன் மூலமாக அவர் வருத்தப்படலாமே தவிர உதவி மறுக்கப்பட்ட பாணியில் அவருக்கு வருத்தம் ஏற்படக்கூடாது.

இத்தகைய செயல்தான் நாம் நம்மிடம் உதவி கேட்டு, வருபவர்களுக்குச் செய்யக் கூடிய தலையாய உதவியாக இருக்கும்.

லேனா தமிழ்வாணன்

# உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் மீளவும் களமிறங்கும் அன்னப்பட்சி

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மீளவும் அன்னப்பட்சி சின்னத்தில் ஐக்கிய தேசிய முன்னணியினர் களமிறங்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டதனைப் போன்று ஆளும் கட்சிகள் கூட்டாக இணைந்து அன்னப் பட்சி சின்னத்தில் போட்டியிட வேண்டுமென யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த யோசனை குறித்து தேசிய அரசாங்கம் தீவிரவமாக கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கூட்டு எதிர்க்கட்சி தனித்து போட்டியிட்டால் அதன் ஊடாக கிடைக்கும் நன்மைகளை கருத்திற் கொண்டு ஆளும் கட்சி ஓர் கூட்டணி அமைத்து போட்டியிடத் திட்டமிட்டுள்ளது.ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட அனைத்து கட்சிகளும்உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கு ஆயத்தமாகி வருகினறமை குறிப்பிடத்தக்கது.

ஆளும் கட்சிகள் கூட்டாக இணைந்து போட்டியிட்டால் அனைத்து தொகுதிகளிலும் வெற்றியீட்டக் கூடிய சாத்தியம் கிடைக்கும் என ஐக்கிய தேசிய முன்னணி தரப்புக்கள் தெரிவித்துள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் தனித்தனியாக போட்டியிட்டு ஏற்படக்கூடிய முரண்பாட்டு நிலைமைகளை தவிர்க்கும் வகையில் ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் அனைத்து கட்சிகளும் கூட்டாக இணைந்து தேர்தலில் போட்டியிட உத்தேசிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ)





# விடாக்கண்டன்!

மேட்டுக்குப்பம் என்னும ஊரில் சுதன் என்பவன் இருந்தான். அவனும், அவன் மனைவியும் பிறரை ஏமாற்றுவதில் வல்ல வர்கள்.

“நாள்தோறும் பத்துப் பேருக்கு அன்னதானம் அளிக் கிறேன். உங்களால் இயன்ற உதவி செய்யுங்கள்,” என்று பலரிடம் வேண்டு வான் சுதன்.

அதை உண்மை என்று நம்பி சிலர் அவனுக்கு உதவி செய்தனர். ஆனால், அவன் யாருக்கும் ஒரு பிடி சோறும் போட மாட்டான்.



அன்னதானம் அளிப்பதை அறிந்து அவன் வீட்டிற்கு யாராவது வந்தால், அவர்களிடம் “ஐயா! சற்று முன்தான் பத்துப் பேர் வயிறார சாப்பிட டுச் சென்றனர். நாளை வாருங்கள். வயிறார சாப்பிட லாம்,” என்று இனிமையாகப் பேசி அனுப்பி வைப்பான்.

திரும்பவும் அவர்கள் வந்தாலும் அதே பதிலைத் தான் சொல்வான். யாருக்கும் எதையும் ஈயாத கொடாக் கண்டனாக இருந்தான் சுதன்.

பக்கத்து ஊரில் மகேன் என்பவன் இருந்தான். விடாக் கண்டனாகிய அவன் யாரை யும் ஏமாற்றி விடுவான். கொடாக் கண்டனான சுத னைப் பற்றி கேள்விப்பட் டான் மகேன்.

சுதன் வீட்டில் விருந்து சாப்பிடுவது என்று முடிவு செய்தான்.

நண்பகல் நேரம், சுதன் வீட்டிற்கு வந தான் மகேன்.

“ஐயா! உங்கள் அன்னதானத்தைப் பற்றி பலரும் புகழ்ந்து பேசுகின்றனர். அதைக் கேள்விப்பட்டு பக்கத்து ஊரிலருந்து வருகி றேன்,” என்றான்.

“நீங்கள் கேள்விப் பட்டது உண்மைதான். நாள்தோறும் பத்து பேருக்கு தலை வாழை இலையில் பதினாறு வகைக் கறிகளுடன் விருந்து பரிமாறுகி றேன். சற்று முன்தான் அவர்கள் மகிழ்ச்சியாக சாப்பிட்டுச் சென்றனர்.

“பக்கத்து ஊரிலருந்து வருகிறீர்கள். உங்களை ஏமாற்ற எனக்கு விருப்பம் இல்லை. நாளை வாருங் கள். இங்கே விருந்து சாப் பிட்டு விட்டு மகிழ்ச்சியாக செல்லலாம்” என்று இனிமை யாகப் பேசினான் சுதன்.

“நாளை வருகிறேன்,” என்று புறப்பட்டான் மகேன்.

“வீட்டிற்குள் வந்த சுதனி டம், யார் வந்தது?” என்று கேட்டாள் மனைவி.

“நம்மிடம் ஏமாற வெளி யூரிலருந்து வந்திருக்கி றான். “நாளை வா!” என்று அவனை அனுப்பி விட்டேன். அவன் எத்தனை நாள் வந் தாலும் இதே பதில்தான்,” என்று சொல்லிச் சிரித்தான் சுதன்.

மறுநாள் விடியற்காலை நான்கு மணிக்கே சுதன் வீட்டுக் கதவை தட்டினான் மகேன்.

தூக்கக்கலக்கத்துடன் எழுந்த சுதன், “இந்த நேரத் தல் யார் கதவைத் தட்டுவது?” என்று எரிச்சலுடன் கதவைத் திறந்தான். (தொடரும்)




- கி.மு 399 - மெய்யியலாளர் சாக்கிரட்டீஸ் மரண தண்டனைக்குள்ளாக்கப்பட்டார்.
- 590 - பாரசீகத்தின் மன்னனாக இரண்டாம் கொஸ் ராவு முடிசூடினான்.
- 1637 - புனித உரோம் பேரரசின் மன்னனாக மூன் றாம் பேர்டினண்ட் முடிசூடினான்.
- 1898 - ஐக்கிய அமெரிக்காவின் கடற்படைக் கப்பல் USS Maine கியூபாவில் அவானா துறைமுகத்தில் வெடித்து மூழ்கியதில் 260 பேருக்கு மேல் கொல்லப்பட்டனர். இந்நிகழ் வையடுத்து அமெரிக்கா ஸ்பெயின் மீது போரை அறிவித்தது.
- 1920 - யாழ்ப்பாணத்தில் முதற் தடவையாக அரிசி பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்பட்டது.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: சிங்கப்பூர் ஜப் பானிடம் வீழ்ந்தது. கிட்டத்தட்ட 80,000 இந்திய, ஐக்கிய இராச்சியம் மற்றும் ஆஸ்திரேலியப் படையினர் போர்க் கைதி களாகப் பிடிபட்டனர்.
- 1946 - ENIAC என்ற முதல் தலைமுறைக் கணினி அறிமுகமானது.
- 1950 - சோவியத் ஒன்றியம், மக்கள் சீனக் குடி யரசு ஆகியன பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கைச் சாத்திட்டன.
- 1989 - ஒன்பது ஆண்டுகால ஆக்கிரமிப்புக்குப் பின் ஆப்கானிஸ்தானிலிருந்து அனைத்து சோவியத் படைகளும் வெளியேறியதாக அறிவிக் கப்பட்டது.
- 1994 - ரஷ்யா தார்த்தஸ்தானை ஒரு உட்குடியர சாக இணைத்துக் கொண்டது. தார்த்தஸ்தா னின் விடுதலைக்கான போர் ஆரம்பமானது.
- 1999 - குர்டிஸ்தான் தீவிரவாதத் தலைவர் அப்து ல்லா ஒக்கலன் துருக்கிய இரகசியப் படை களினால் கென்யாவில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.
- 2005 - யூடியூப் சேவை ஐக்கிய அமெரிக்காவில் ஆரமபிக்கப்பட்டது.

### பிறப்புகள்

- 1564 - கலீலியோ கலிலி, இத்தாலிய வானியலா ளர், இயற்பியலாளர் (இ. 1642)
- 1861 - ஆல்பிரட் நார்த் வொய்ட்ஹெட், பிரித்தானி யக் கணிதவியலாளர் (இ. 1947)
- 1861 - சார்ல்ஸ் கில்லோம், நோபல் பரிசு பெற்ற பிரெஞ்சு இயற்பியலாளர், (இ. 1938)
- 1873 - ஹான்ஸ் இயூலர்-செல்ப்பின், நோபல் பரிசு பெற்ற வேதியியலாளர் (இ. 1964)
- 1922 - டி. பி. விஜயதுங்கா, இலங்கையின் முன் னாள் ஜனாதிபதி
- 1956 - டெஸ்மண்ட் ஹெய்ன்ஸ், மேற்கிந்தியத் தீவுகள கிரிக்கெட் அணியின் முன்னாள் துடுப்பாளர்.

### இறப்புகள்

- 1973 - அழகு சுப்பிரமணியம், ஆங்கில எழுத் தாளர், இலங்கையர். (பி. 1915)
- 1988 - ரிச்சார்ட் பெயின்மான், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க இயற்பியலாளர், (பி. 1918)
- 1999 - ஹென்றி கென்டால், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க இயற்பியலாளர், (பி. 1926)



### சாக்கிரட்டீஸ்

சாக்கிரட்டீஸ் ஏதென்சைச் சேர் ந்த ஒரு மெய்யியலாளர் (தத்துவ ஞானி) ஆவார். இவர் மேற்கத் திய தத்துவ மரபின் முக்கியமான சின்னமாகத் திகழ்பவர்களுள் ஒருவர்.

இவருடைய சீடர் பிளேட்டோ வும் புகழ்பெற்ற தத்துவஞானி ஆவார். கிரேக்க நாட்டின் தத்துவஞானி என்றும், உலகத்தின் முதல் தத்துவ ஞானி என்றும் இவர் போற்றப்படுகிறார். மதவாதி களை நோககி “கடவுள் என்பவர் யார்?” எனக் கேள்வி கேட்ட முதல் பகுத் தறிவாளர், இவர்தான். சிறுவனாக இருந்தபோதே இவர் கேள்விகள் கேட்கும் வழக்கத்தைக் கொண்டி ருந்தார். எதைப் பற்றியும் கேள்வி கேட்டு, அது பற்றிய உண்மையை அறிந்துகொள்வதே இவரின் வழக்கமாகும். நீதி, நியாயம், ஆத்மா, கடவுள், சமூகம், அரசு, சம்பிரதாயம் என எல்லாவற்றையும் ஆய்வு க்கு உட்படுத்தினார் சாக்ரடீஸ். இவரின் இந்தக் கேள்வி கேட்கும் முறை ஏதென்ஸ் நகர இளைஞர்களைக் கவர்ந்தது. அவரின் கேள்வி கேட்கும் பழக்கம் இளைஞர்களிடமும் தொற்றிக்கொண்டது. கிரேக்க சமூகத்தில் கால காலமாக கடைப்பிடித்து வந்த மூடக் கொள்கைகளையெல்லாம் இவரை சிந்திக்க வைத்ததல்லாமல், மெல்ல இளைஞர்களையும் மாற்ற ஆரம்பித்திருந்தது. இது ஏதெ ன்ஸ் அரசுக்கு தெரியவந்தது.

சாக்ரடீஸ் இருக்குமிடங்களில் எப்போது இளைஞர்கள் கூட்டம் சூழ்ந்திருப்பது சிலருக்கு எரிச்சலைத் தந்தது. சாக்ரடீஸ் தினம் தோறும் இளைஞர்களிடம் உரையாடியது கிரேக்க ஆட்சியாளர் களை கோபப்படுத்தியது. அவர் மீது கடும் குற்றச்சாட்டுகள் எழுந்தன. இளைஞர்களைத் தூண்டி விடுவதாகவும், மத எதிர்ப்பை எழுப்பி விடுவதாகவும், தனக்குப் பெருமை சேர்ப்பதற்காக சாக்ரடீஸ் தவறான வழிகளில் இளைஞர்களை ஈடுபடுத்துவதற்காகவும், அதன் வழியாக ஏதென்ஸ் அரசுக்கு ஆபத்தை விளைவிப்பதாகவும் சாக்ரடீஸ் மீது அனிடஸும், லைகோனும், மெலிட்டஸும் குற்றம் சுமத்தி வழக்குத் தொடுதத னர். இதன்போது நீதிமன்றத்தில் தர்ப்பு கூறும் தருணம் வந்தது . மரணம், மன்னிப்பு என்ற இரண்டு பெட்டிகள் வைக்கப்பட்டன. நீதிக் குழுவின் உறுப்பினர்கள் 501 பேர் வாக்குப் பதிவு செய்யத் தொடங்குகின்றனர். 220 பேர் சாக்ரடீஸை மன்னித்து விடுமாறும் 281 பேர் மரண தண்டனை அளிக்கவும் வாக்களித்தனர். நீதிபதிகள் சாக்ரடீஸ் குற்றவாளி தான் என்று தீர்ப்புக்கூறி அவருக்கு விஷம் கொடுத்துக் கொல்ல வேண்டும் என்று கி.மு. 339 ஆம் ஆண்டு பெப்ரவரி 15 ஆம் திகதி நீதிபதிகள் உத்தரவிட்டனர.

# வேலையில்லாப் பட்டதாரிகளை ஆசிரியர் சேவையில் இணைப்பதற்கு நடவடிக்கை

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

**வேலையில்லாப் பட்டதாரிகளை ஆசிரிய சேவையில இணைத்து நாட்டின் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**



மின்னேரிய தேசிய பாடசாலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். நாட்டில் சமநிலையான அபிவிருத்தியை ஏற்படுத்து வதே அரசாங்கத்தின் நோக்க மாகும்.

இதேவேளை, நாட்டின் அபிவிருத்தியை பற்றி சிந்திக்கும் போது தனிப் பட்டவர்களின் தேவைகளுக்கு முக்கி யத்துவம் கொடுக்க கூடாது எனவும் இதன்போது ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (இ)

# அடிப்படை வாதத்தை போதிக்கும் கொழும்பு முஸ்லிம் பாடசாலை

## ஆங்கில ஊடகம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

கொழும்பில் உள்ள முன்னணி தனியார் பெண்கள் முஸ்லிம் சர்வதேச பாடசாலை ஒன்று அங்கு கல்வி கற்று வரும் பிள்ளைகளுக்கு அடிப்படைவாதத்தை போதித்து வருவதாக ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கொழும்பின் மைய பகுதியில் அமைந்துள்ள இந்த பாடசாலை முஸ்லிம் மாணவிகளுக்கு பல தசாப்தங்களாக இஸ்லாமிய கல்வியை வழங்கி வருகிறது.

இலங்கையில் 90 ஆம் ஆண்டுகளில் இருந்து முஸ்லிம் அடிப்படைவாத அமைப்புகள் படிப்படியாக அதிகரித்து வந்துள்ளதாக கூறப்படுகிறது.

எனினும் கடந்த 7 ஆண்டுகளில் இந்த நிலைமை வேகமாக அதிகரித்துள்ளதாக சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சியின் கூற்றுப்படி கறுப்பு முகமூடி அல்லது பர்க்கா என்பன தீவிரவாதத்தின் அடையாளங்களாக பார்க்கப்படுகிறது.

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பில் இணைந்து போரிடுவதற்காக இலங்கையில் இருந்து 36 முஸ்லிம்கள் சென்றுள்ளதாக பாதுகாப்புச் செயலாளர் இந்த வருட ஆரம்பத்தில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் கூறியிருந்தார்.

இலங்கையில் முஸ்லிம்கள் அமைதியாகவும் சுதந்திரமாகவும் தேசிய கலாசாரத்துடன் வாழ்ந்து வருகின்றனர்.

அவர்கள் உலக பயங்கரவாதத்துடன் தொடர்புகளை கொண்டிருப்பதாக இதுவரை குற்றம் சுமத்தப்படவில்லை என ஒரு இஸ்லாமியர் தெரிவித்துள்ளார்.


இலங்கையில் உள்ள முஸ்லிம்களில் பெரும்பாலானோர் சவுதி அரேபியாவின் அடிப்படைவாத கொள்கைகளை நிராகரிக்கின்றனர்.

முகத்தை மூடுவதையும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பில் இணைந்து போரிட சென்றவர்களையும் இலங்கையில் உள்ள பெரும்பாலான முஸ்லிம்கள் முற்றாக நிராகரித்துள்ளதாக அந்த ஆங்கில ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது. (இ)


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 633

Search for people, places and things | Nagendram Home


ராகுலன்




சேரன்



மதுரைவீரன்




அன்ரனி பகீர்தன்




சாருயன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# மாசி மாத இராசி பலன்கள்

## 13.02.2016~13.03.2016



**குரு பார்வையால் குழப்பங்கள் தீரும்! துணிவும் தன்னம்பிக்கையும் கொண்டு இனிய வாழ்வை வரவழைத்துக் கொள்ளும் மேட இராசி நேயர்களே!**

மாசி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்திலேயே குருவின் பார்வை உங்கள் ராசியில் பதிகின்றது. அஷ்டமத்துச் சனியால் உங்களுக்கு அதிக மனக் குழப்பம் ஏற்பட்டாலும், அவற்றிலிருந்து விடுதலை பெற வைப்பது குருவின் பார்வை பலம்தான்.

மேட ராசியைப் பொறுத்த வரை 9, 12 ஆகிய இடங்களுக்கு குரு அதிபதியாவார். பனிரெண்டாமிடத்திற்கு அதிபதி பலமிழப்பது நன்மைதான். விரயத்திற்கேற்ற வரவு வந்து சேரும். எனவே எந்தக் காரியம் செய்ய வேண்டுமென்று நீங்கள் நினைத்தாலும், உடனே செய்யப் போதுமான பொருளாதார நிலை இல்லையே என்று கவலைப் பட வேண்டாம். காரியத்தைத் தொடங்கிவிட்டால் பலருடைய ஒத்துழைப்பும் தானாகவே வந்து சேர குருவின் பார்வை வழிவகுத்துக் கொடுக்கும்.

அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் மட்டும் இதுவரை இருந்தது. ஆனால் இம்மாதத்தின் மையப் பகுதியில் அதோடு செவ்வாயும் சேரப்போகின்றது. இந்தச் செவ்வாய்- சனி சேர்க்கை காலத்தில் சஞ்சலங்களும், விரயங்களும், ஆரோக்கியத் தொல்லைகளும் அதிகரிக்கலாம். பொறுமையாகச் செயல்பட வேண்டிய நேரமிது. முன்கோபம் அதிகரிக்கும்.

இருப்பினும் அங்காரகனுக்கும், சனி பகவானுக்கும் சிறப்பு வழிபாடுகளை செய்வதன் மூலம் தங்கு தடைகள் அகலும். தனலாபம் தக்க சமயத்தில் வந்துசேரும். மங்கல நிகழ்ச்சிகள் குறிப்பிட்டபடி நடைபெறும். மாற்றுக் கருத்துடையோரின் எண்ணிக்கை குறையும்.

**சுக்ரனின் சஞ்சாரம்!**

மாதத் தொடக்க நாளிலேயே மகரத்திற்கு சுக்ரன் சஞ்சரிக்கப் போகின்றார். 2, 7இற்கு அதிபதி ஒன்பதில் சஞ்சரிக்கும் பொழுது தொழில் வளம் சிறப்பாக இருக்கும். தொகை எதிர்பார்த்த இடத்திலிருந்து வந்து சேரும். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். குடும்பத்தில் நீண்ட நாட்களாக எதிர்பார்த்துக் காத்திருந்த சுபநிகழ்ச்சிகள் நடைபெற்று மகிழ்ச்சியைக் கொடுக்கும். மார்ச் 8 ஆம் திகதி கும்பத்தில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகின்றார். அங்குள்ள புத்திர ஸ்தானாதிபதி சூரியனோடு இணைவதால் பிள்ளைகளால் பெருமை சேரும். உத்தியோக முயற்சிகளில் அனுகூலம் உண்டாகும். அதனால் உதிரி வருமானங்களும் கிடைக்கும்.

**பொருள் வரவு தரும் புதனின் பெயர்ச்சி!**

பிப்ரவரி 25 ஆம் திகதி கும்பத்தில் புதன் சஞ்சரிக்கப் போகின்றார். 3, 6 இற்கு அதிபதி 11 இல் சஞ்சரிக்கும் பொழுது உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். மேலதிகாரிகளின் அனுகூலத்தோடு சில சலுகைகள் பெறும் நிலை உண்டு. பகைவர்கள் பணிந்து செல்வர். உடன்பிறப்புகள் உங்கள் பக்கம் சாய்வர். மார்ச் 12 ஆம் திகதி மீனத்தில் புதன் சஞ்சரிக்கப் போகின்றார். அங்கு புதன் நீச்சம் பெறுவதால் சிலருக்கு திடீர் இடமாறுதல்கள் வந்து சேரும். சொத்துக்களை




விற்று கடனை அடைக்கும் சூழ்நிலையும் உருவாகலாம். பாகப்பிரிவினையிலிருந்த பிரச்சினைகள் படிப்படியாக மாறும்.

**செவ்வாய்- சனி சேர்க்கைக் காலம்!**

பெப்ரவரி 26 ஆம் திகதி விருச்சிகத்தில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகின்றார். அங்குள்ள சனி பகவானோடு இணைவதால் கவனத்தோடு செயற்பட வேண்டிய நேரமிது. விலை உயர்ந்த பொருட்கள், வீடு, தோட்டம் போன்றவை வாங்க உகந்த நேரமிது. ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவதன் மூலம் உற்சாகத்தோடு பணிபுரிய இயலும. இம்மாதம் முருகப்பெருமான் வழிபாடு முன்னேற்றத்தை வழங்கும். சிவராத்திரியன்று சிவன் வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

கூடுதல் கவனமுடன் செயற்பட வேண்டிய மாதமாகும். குருவின் பார்வை இருப்பதால் கவலைப்படத் தேவையில்லை. உறவினர் பகை உருவாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது. பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும்.

மாதத்தின் முதல் பாதியில் வரவு திருப்திகரமாக இருக்கும். பிற்பாதியில் சுபவிரயங்கள் அதிகரிக்கும். வீடு, இடம் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

குழந்தைகளின் எதிர்கால நலன்கருதி தீட்டிய திட்டத்திற்கு செலவிடுவீர்கள். கணவன்-மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. தாய் வழி ஆதரவு உண்டு. சிவன் வழிபாடு சிறப்புகளை வழங்கும்.

# குருபார்வையால் குழப்பங்கள் தீரும்!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



**தொழில் மாற்றச் சிந்தனை மேலோங்கும் நேரம்! தேடி வந்தவர்களுக்கு, சிந்தனை திறத்தால் ஆலோசனை வழங்கும் இடப இராசி நேயர்களே!**

மாசிமாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, அர்த்தாஷ்டம குருவின் ஆதிக்கம் அடியெடுத்து வைக்கும் நேரமாக அமைகின்றது. ஆனாலும் நீங்கள செய்த பாக்கியம் குரு வலுவிழந்திருப்பதுதான். உங்கள் ராசி நாதன் சுக்ரனுக்கு குரு பகவான் பகை கிரகமாக விளங்குபவர். அப்படிப்பட்ட குரு பகவான் பலமிழப்பது யோகம்தான்.

சாதகாதிபதி வலுவடைந்தாலும், பாதகாதிபதி வலு இழந்தாலும் பலன் தரும். அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது குருவின் வக்ர இயக்கத்தால் குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். கொடுக்கல், வாங்கல்கள் ஒழுங்காகும். தொழிலில் கூடுதல் இலாபம் கிடைக்கும். கடுமையாக முயற்சித்தும் இது வரை நடைபெறாத காரியங்கள் இப்பொழுது துரிதமாக முடிவடையும். வீடு வாங்குவதில் இருந்த வில்லங்கங்கள் அகலும். நாடு மாற்றங்கள் நல்லபடியாக நடைபெறும்.

சனியின் பார்வை உங்கள் ராசியைச் சார்ந்திருப்பதால் அலைச்சலும், ஆதாயக்குறைவும் ஏற்படத்தான் செய்யும். அதுமட்டுமல்லாமல் ஆரோக்கியத் தொல்லைகளும் அடிக்கடி தலைகாட்டும். நோய்க்கான அறிகுறி தோன்றும் பொழுதே மருத்துவ ஆலோசனைகளைப் பெறுவது நல்லது. அதே நேரத்தில் 'மந்தன்' எனப்படும் 'சனி பகவான்' உங்கள் ராசியைப் பொறுத்தவரை நல்ல பலன்களை அள்ளி வழங்குபவர் என்பதால் சனிக்கிழமை தோறும் சனி கவசம் பாடி வழிபடுவது நல்லது. அவருக்கு கருப்பு வஸ்திரம் அணிவித்தால் இருப்பு உயரும். பொறுப்புகள் அதிகரித்து பொருளாதார நிலை உயரும். வெறுப்போடு விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேருவர். குறிப்பிட்ட நேரத்திலேயே குறிப்பிட்ட காரியங்களைச் செய்து முடிப்பீர்கள்.

**மகரம் மற்றும் கும்பத்தில் சுக்ரனின் சஞ்சாரம்!**

மாதத்தின் தொடக்க நாளில் மகரத்தில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகின்றார். 9 இல் சஞ்சரிக்கும் சுக்ரன் ஒளிமயமான எதிர்காலத்திற்கு வித்திடுவார். பொன், பொருட்கள் சேரும். புகழ் கூடும். முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். நண்பர்கள் ஆதரவுக்கரம் நீட்டுவர். அடுத்து மார்ச் 8 ஆம் திகதியன்று கும்பத்தில் சுக்ரன் சஞ்சரிக்கும் பொழுது தொழிலில் பழைய கூட்டாளிகள் விலகுவர். புதிய கூட்டாளிகள் சேருவார்கள். பெண் வழிப் பிரச்சினைகள் அகலும். பிரிந்தவர்கள் ஒன்று சேருவர். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் மாறும். சேமிப்பு உயரும்.

**புதிய திருப்பம் தரும் புதனின் பெயர்ச்சி!**

பிப்ரவரி 25ஆம் திகதி கும்பத்தில் புதன் சஞ்சரிக்கப் போகின்றார். தன பஞ்சமாதிபதி வலுவடையும் இந்த நேரம் பணப்புழக்கம் அதிகரிக்கும்.

நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். ஆடை- ஆபரண சேர்க்கை உண்டு. ஆதாயம் தரும் விதத்தில் அனைத்துக் காரியங்களும் கைகூடும். அதே நேரம் மார்ச் 12 ஆம் திகதி மீனத்தில் புதன் நீச்சம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. பிள்ளைகளாலும், பெற்றோர்களாலும் விரயம ஏற்படலாம்.

தனாதிபதி நீச்சம் பெறுவதால் சில சமயத்தில் தட்டுப்பாடுகள் ஏற்படலாம். என்னதான் திட்டம் போட்டாலும் அது திசைமாறிச் செல்லும். கட்டத்தில் உள்ள கிரகங்கள் பலமிழந்திருக்கும் பொழுது முயற்சிகளில் வெற்றி கிடைப்பது அரிது.




எனவே திசாபுத்திக்கேற்ற தெய்வ வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

**செவ்வாயின் சப்தமஸ்தான சஞ்சாரம்!**

பிப்ரவரி 26 ஆம் திகதி விருச்சிக ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகின்றார். அங்குள் சனியோடு சேருவது அவ்வளவு நல்லதல்ல. உடன்பிறப்புகளும், உடன் இருப்பவர்களும் எதிரியாகலாம். கடன் சுமை அதிகரிக்கும். வீட்டில் உள்ளவர்களோடும், வெளியில் உள்ளவர்களோடும் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. சொத்துக்கள் வாங்கினால் அதில் வில்லங்கம் பார்த்து வாங்குவது நல்லது. குடும்பச்சுமை கூடும். தொழில் மாற்றச் சிந்தனை மேலோங்கும். இம்மாதம் பிரதோஷ வழிபாடு பெருமை சேர்க்கும். சிவராத்திரியன்று சிவனை வழிபடுவதன் மூலம் செல்வ நிலை உயரும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

மாதத் தொடக்கத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். தபால் மூலம் நல்ல தகவல் வந்து சேரும். வக்ர குருவின் இயக்கத்தால் நகை நட்டு வாங்குவது முதல், நாடு மாற்றங்களும், வீடு மாற்றங்களும் விரும்பியபடியே வந்து அமையும்.

தொகை வருவதில் எந்த தடையும் ஏற்படாது. பிள்ளைகளால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். பொதுநலத்தில் இருப்பவர்களுக்குப் புதிய பொறுப்புகள் வந்து சேரும்.

சனி- செவ்வாய் இரண்டின் பார்வையும் ஒருசேர உங்கள் ராசியில் பதிவதால் நரம்பு, எலும்பு சம்பந்தப்பட்ட பாதிப்புகள் ஏற்பட்டு அகலும். நல்ல வாய்ப்புகள் கைகூடிவர அம்பிகை வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

# தொழில் மாற்றச்சிந்தனை மேலோங்கும் மாதம்!

(தொடரும்)

# புதிய தலைமை படைப்போம்

புதிய திட்டங்களும், புதுமையான விடயங்களை அறிந்து செயல்படுத்துதலும் ஒவ்வொரு நிறுவனத்திற்கும் இன்றைய காலகட்டத்தில் மிகவும் அவசியமான ஒன்று.

நிறுவன தலைமைப் பொறுப்பில் உள்ளவர்கள் இதனை உணர்ந்தே செயல்பட வேண்டும். சிக்கல்களை ஆராய்வது மற்றும் புதிய திட்டங்களையும், யோசனைகளையும் வெளிப்படுத்துவது போன்ற செயல்களில் தனது குழுவினரை ஊக்கப்படுத்தும் பொறுப்பு தலைமைப் பொறுப்பில் உள்ளவர்களுக்கு முக்கியம்.

இருப்பதை வைத்துக் கொண்டு திருப்தியடைய வேண்டும் என்ற கூற்றெல்லாம், இன்றைய போட்டி மிகுந்த சூழ்நிலைக்கு சரிப்பட்டு வருமா என்பதை கொஞ்சம் எண்ணிப்பார்க்க வேண்டும். தற்போதைய செயல்பாடுகளையே இன்னும் கொஞ்சம் வேகமாக செயல்படுத்தினால் போதும், பெரிதாக ஒன்றும் அலட்டிக்கொள்ள தேவையில்லை என்று நினைப்பவர்கள், வாழ முடியுமே தவிர வெற்றிகரமாக வாழ முடியுமா? என்று கேள்வியெழுப்புகிறார் "தி இன்னோவேடிவ் லீடர்" என்னும் இந்த புத்தகத்தின் ஆசிரியர். ஏனென்றால் நமது போட்டியாளர்களும் இதே மனநிலையில் இருப்பார்கள் என்பதைச் சொல்ல முடியாது. அவர்கள் நம்மை முந்திச் செல்வதற்கான வாய்ப்புகளே அதிகம்.

**சரியான நோக்கம் வேண்டும்**

ஒரு இடத்திற்குச் செல்ல வேண்டியிருந்தால் செல்லவேண்டிய இடத்தை முதலில் தெளிவாக வரையறை செய்துகொள்ள வேணடும் அல்லவா?. அதுபோலவே வெற்றியடைய வேண்டுமென்றால் அதற்கான இலக்கினை சரியாக வரையறை செய்துக்கொள்ள வேண்டும். இலக்கு இல்லாத பயணம் ஒருபோதும் வெற்றியை பெற்றுத்தரப் போவதில்லை. இலக்கும், இலக்கிற்கான வழியும் தெரியாத வரை, தலைமை பொறுப்பில் உள்ளவரால் அவரது குழுவினரிடமிருந்து புதுமையான செயல்பாடுகளை எதிர்பார்க்க முடியாது. நிறுவனத்தின் இலக்கினை குழுவினரிடத்தில் சரியாக கொண்டு சேர்ப்பது மேலாளரின் பணியே. இலக்கை அடைவதன் நோக்கத்தையும், இலக்கின் மீதான மதிப்பையும் அவர்களிடம் விளக்கி குழுவினரிடையே நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும்.

வெறுமனே வரையப்பட்ட ஒரு ஓவியம் விரைவில் அதன் அழகினை இழந்துவிடுகின்றது. தொடர்ச்சியாக மெருகேற்றி வலுப்படுத்தும்போது மட்டுமே அதனை பொலிவுடன் வைத்திருக்க முடிகின்றது அல்லவா! அதுபோலவே, சிறந்த தலைவர்கள் தங்கள் குழுவினருடன் தேவையான நேரத்தை செலவிட்டு, நிறுவனத்தின் நோக்கம், இலக்கு, அதற்கான செயல்திட்டம் மற்றும் சவால்கள் போன்றவற்றை தெளிவாக எடுத்துரைக்கின்றனர். மேலும், நிறுவன வெற்றிக்கு பணியாளர்களின் பங்களிப்பு எவ்வளவு முக்கியமானது என்பதையும் விளக்குகின்றனர். இதன்மூலமே குழுவினரிடமிருந்து வெற்றிக்கான புதிய செயல்பாடுகளை பெறமுடிகின்றது.


**பயத்தை வெல்ல வேண்டும்**

இயற்கையாகவே மாற்றத்தின் மீது நமக்கு ஒருவித அச்சம் இருக்கத்தான் செய்கின்றது. புதிதாக வரக்கூடிய மற்றும் பரிச்சையமில்லாத விடயம் என்பதே நமது பயத்திற்கு காரணம். இந்த பயம், மாற்றத்தை ஏற்றுக்கொள்ள நம்மை சிறிது தயக்கத்திற்கு உட்படுத்துகின்றது என்பதே உண்மை. புதுமையை விரும்பும் தலைவ ருக்கு மாற்றத்தின் மீதான பயத்தை வெலவது முக்கியமான நோக்கமாக இருக்க வேண்டும் என்கிறார் ஆசிரியர். மாற்றத்தின் மூலம் நிறுவனத்திற்கு கிடைக்கப்போகும் பயன்கள் பற்றி தனது குழுவினரிடையே விவாதிப்பது அவசியமான ஒன்று.

"தற்போதைய நமது செயல்பாடு நன்றாகவே உள்ளது, இதை இன்னும் சிறப்பாக செய்யவேண்டும்". "புதிய மாற்றங்களில் ஆபத்துகளும் இருக்கவே செய்யும், ஆனால் நாம் மாற்றங்களுக்கு உட்படாமல் இருந்துவிட்டால் அதைவிட அதிக ஆபத்துகளை எதிர்காலத்தில் சந்திக்க வேண்டிவரும்". இதுபோன்ற நம்பிக்கை வரிகளை நமது குழுவினர் மற்றும் நிறுவன பணியாளர்களின் மனதில் பதியவிட வேண்டும். மேலும், நிறுவனத்தின் முந்தைய வெற்றிகரமான செயல்பாடுகள் மற்றும் போட்டியாளர்களின் திறன் போன்றவற்றை பற்றியும் தெளிவான புரிதலை ஏற்படுத்த வேண்டும். மாற்றத்தின் மீதான பயத்தை வெல்ல இவை துணையாக இருக்கும் என்பதே ஆசிரியரின் வாதம்.

**தடைகளை நீக்க வேண்டும்**

புதுமைகளுக்கு எதிராக மிகப்பெரும் நிறுவனங்களுக்குள் இருக்கும் பல்வேறு தடைகளில் மிக முக்கியமானது மோசமான உட்புற தகவல் தொடர்பும் அரசியலுமே. பணியாளர்களுக்கிடையோ அல்லது நிறுவனத்தின் வெவ்வேறு குழுக் களிடையோ சரியான உறவும் புரிதலும் இல்லாத நிலையில், புதிய எண்ணங்களும் அதன் மூலம் ஏற்படும் மாற்றமும் சிரமமான ஒன்றே என்கிறார் ஆசிரியர். திறம்பட செயல்படும் சிறு குழுக்கள் ஒன்றுக்கொன்று பரஸ்பரம் இணையாத நிலையில், அவற்றை ஒருங்கிணைக்க வேண்டிய மிக முக்கிய பொறுப்பு உயர்மட்ட




தலைவர்களுடயதே.

புகழ்பெற்ற நிறுவனமான நோக்கியாவில் அறிவிக்கப்படாத விதி ஒன்று உள்ளது. அதாவது நிறுவன பணியாளர்கள் எவரும் அவர்களுடைய தனிப்பட்ட அலுவலக இடத்தில் தங்களது மதிய உணவை எடுத்துக்கொள்ளக் கூடாது மற்றும் உணவிற்காக நிறுவனத்திற்கு வெளியேயும் செல்லக்கூடாது என்பதே அது. நிறுவனத்தின் பொது இடத்தில் தங்களது மதிய உணவை எடுத்துக் கொள்ள பணியாளர்கள் ஊக்கப்படுத்தப்படுகிறார்கள். மேலும், மானிய விலையில் உணவுப்பொருட்களும் தரப்படுகின்றது. அங்கு வெவ்வேறு துறைகள் மற்றும் குழுக்களிடையே அறிவிக்கப்படாத ஒரு சந்திப்பு ஏற்படுத்தப்படுகின்றது. இது பரஸ்பரம் கருத்துப் பரிமாற்றம் மற்றும் புரிதல் ஏற்பட காரணமாக அமைகின் றது.

பொதுவாகவே ஒரு நிறுவனம் பெரிதாக வளர வளர, சுமுகமான உட்புற தகவல் தொடர்பு கொஞ்சம் கடினமே. பணியாளர்கள் பலரும் பங்கேற்கும் வகையில் நிகழ்ச்சிகளை நடத்துவது இதற்கு நல்ல பலனை தரும் என்பதே ஆசிரியரின் கூற்று. கருத்தரங்கம், குழு விளையாட்டு, விநாடி வினா போன்றவற்றை நடத்தி பணியாளர்களிடையே நல்ல புரிதலை ஏற்படுத்தலாம்.

**தேவையான நேரம் வேண்டும்**

புதுமைகள் படைப்பதிலும், புதிய எண்ணங்கள் மற்றும் திட்டங்களை உருவாக்குவதிலும் உள்ள பொதுவான சிக்கல் நேர பற்றாக்குறை. இருக்கும் நேரமெல்லாம் தினசரி அலுவல்களுக்கே சரியாக இருக்கும் நிலையில், புதிய சிந்தனைகளுக்கான நேரம் கிடைப்பது அரிதானதே. தேவையான நேரம் மற்றும் வசதிகளை பணியாளர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கும் போது மட்டுமே அவர்களிடமிருந்து புதிய விடயங்களை எதிர்பார்க்க முடியும். இதுவும் மேலாளர்களின் மிக முக்கிய பொறுப்பே. நிறுவன விதி களுக்கு ஏற்ப இவ்வசதியை ஏற் படுத்த வேண்டியது பல நல்ல புதிய யோசனைகளுக்கு வழிவ குக்கும் என்கிறார் ஆசிரியர்.

இதுபோன்ற விடயங்களுக்காக கூகுள் போன்ற நிறுவனங்கள் தங்கள் பணியாளர்களுக்கு குறிப்பிட்ட நாட்களையும் அதற்கான வசதிகளையும் ஏற்படுத்தித் தருகின்றன. 3எம் நிறுவனம் பல ஆண்டுகளாக அதன் பொறியாளர்களையும் விஞ்ஞானிகளையும் அவர்களது அலுவலக பணி நேரத்தை பதினைந்து சதவீத அளவிற்கு அவர்களின் விருப்பத்திற்கேற்ப பயன்படுத்த அனுமதிக்கின்றது. இதில் கணிசமான அளவிற்கு வெற்றியையும் பெற்றுள்ளன.


**புதிய வழிகள் வேண்டும்**

நிறைய தொழில் நிறுவனங்களின் வணிக புதுமைகள் பெரும்பாலும் வாடிக்கையாளர்களை புதிய வழிகளில் அணுகுவதிலேயே தொடங்குகின்றது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் கிராமப்புற அமெரிக்கர்கள் தங்களுக்கு தேவையான பொருட்களை அருகிலுள்ள சிறிய நகரங்களில் உள்ள கடைகளில் வாங்கி வந்தனர். தேவையான நேரத்தில் தேவைப்படும் பொருட்கள் கிடைக்காமலும், அதிக விலையினால் அவதிப்பட்டனர். இதற்காக ரயில்வே நிறு வன முகவரான ரிச்சர்ட் சியர்ஸ் என்ற இளைஞர் புதிய அணுகு முறையினை உருவாக்க விரும்பினார். கடிகாரத் தயாரிபபாளரான அல்வாஹ் ரோய்பக் என்பவருடன் இணைந்து அஞ்சல் வழியில் பொருட்களை வழங்கும் முறையை ஆரம்பித்தார். ரயில்வே மற்றும் அஞ்சல் துறையை இதற்காக உபயோகப்படுத்தினார். நாளடைவில் உலகின் மிகப்பெரும் சில்லறை விற்பனையாளராக உருவெடுத்தார்.

பெண் முகவர்களைக் கொண்டு நேரிடையாக வீட்டிற்கே சென்று பெண்களுக்கான ஒப்பனைப் பொருட்களை விற்பனை செய்தது அவான் நிறுவனம். மல்டி லெவல் மார்க்கெட்டிங் முறையில் பெரும் வெற்றிபெற்ற ஆம்வே நிறுவனம் இன்று நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் தனது வணிகத்தைத் நடத்திக்கொண்டுள்ளது. புதிய பொருட்களையும், சேவைகளையும் உருவாக்கும் முனைப்பு அவற்றை வாடிக்கையாளர்களிடம் புதிய வழிகளில் கொண்டுசேர்ப்பதிலும் இருக்க வேண்டியது அவசியம்.

தொழிலில் புதுமை படைக்க விரும்பும் தலைவருக்கு மாற்றத்திற்கான பார்வையும், அதற்கான செயல்பாட்டிற்கு ஏற்ற சூழலை உருவாக்கும் திறனும் வேண்டும். நூலாசிரியரின் கூற்றுப்படி புதிய எண்ணங்களை மாற்றத்திற்கான கருவியாக்கி அதன்மூலம் புதியதோர் தலைமை படைப்போம்.

# அமெரிக்காவில் வங்கிச் சேமிப்புக்கு கட்டணம்?



ஒவ்வொரு நாட்டுக்கும் ஒவ்வொரு பிரச்சினை. பணவீக்கத்தைக் குறைக்க வேண்டும் என்பதற்காக இங்கு மத்திய வங்கி போராடுகிறது. ஆனால் அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளில் பணவீக்கத்தை உருவாக்க போராடுகிறார்கள். பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த வட்டி விகிதத்தை எவ்வளவு வேண்டுமானாலும் அதிகரிக்கலாம். 5 சதவீதம், 10 சதவீதம், ஒரு மடங்கு என உயர்த்திக்கொண்டே போகலாம். ஆனால் பணவீக்கத்தை உருவாக்க எந்த அளவுக்கு வட்டியைக் குறைக்க முடியும். பூஜ்ஜியத்துக்கு கொண்டு வரலாம். ஆனால் அதற்கு கீழே?

முடியும் என்று கூறியிருக்கிறது ஜப்பானின் மத்திய வங்கி. கடந்த வாரம் வட்டி விகிதத்தை -0.1 சதவீதமாக குறைத்திருக்கிறது. அதாவது வங்கியில் டெபாசிட் செய்யும் தொகைக்கு முதலீட்டாளர்கள் பணம் செலுத்த வேண்டியிருக்கும். அதனால் வங்கியில் பணம் இல்லாமல் மக்கள் கையில் பணம் இருக்கும். அவர்கள் செலவு செய்வதன் மூலம் பணவீக்கத்தை உருவாக்க முடியும் என்று ஜப்பான் நம்புகிறது. இதுவரை பல வகையான ஊக்க நடவடிக்கைகளை கொண்டு வந்த ஜப்பான் அதிரடியாக வட்டி விகிதத்தையும் பூஜ்ஜியத்துக்கும் கீழே குறைத்தது. கடந்த இருபது வருடங்களாக பொருளாதார மந்த நிலையால் ஜப்பான் போராடுகிறது.

ஆனால் ஜப்பானின் இந்த முடிவை ஆதரிக்கும் முதலீட்டாளர்களும் இருக்கின்றனர். அதேபோல இதுபோன்ற ஆலோசனைகளை ஜப்பானுக்கு யார் சொல்லித் தருகின்றனர் என்று விமர்சனம் செய்பவர்களும் உள்ளனர்.

**அமெரிக்காவில்?**

இந்த நிலைமையில் அமெரிக்காவிலும் இதேபோல வங்கி சேமிப்புக்கு கட்டணம் வசூலிக்கும் எதிர்மறை வட்டி விகிதம் நிர்ணயம் செய்யப்படலாம் என்ற ஊகங்களும் எழுந்துள்ளன. .

எதிர்மறை வட்டி விகிதத்தை அமெரிக்க மத்திய வங்கி (பெடரல்) பரிசீலனை செய்யும் என்று பேங்க் ஒப் அமெரிக்காவின் உயரதிகாரி ஒருவர் கருத்து தெரிவித்திருக்கிறார். ஐரோப்பா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளில் எதிர்மறை வட்டி விகிதம் இருக்கிறது.




## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6,404.64 | 6,283.00 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,338.97 | 3,264.94⇩ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 1,725.410 |

***உயர்வடைந்த பங்குகள்(ரூ)*** கூஜே(52.80), ஸ்ராண்டட் கப்பிரல்(88.00), லங்கா செரமிக்(124.00), லங்கீம் சிலோன்(84.90), பிறவுண்ஸ் கப்பிரல்(1.20).

***சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):*** நேசன் லங்கா(1.40), புளூ டைமன்ஸ்(0.30), லக்கி லங்கா(3.00), சிலாவ் பினான்ஸ்(20.50), அகலவத்த(18.00).

**மேலதிக தகவல்கள்: www.cse.lk**

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 142.00 | 146.01 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 206.13 | 213.42 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 158.02 | 164.29 |
| சுவிஸ் பிராங் | 141.92 | 147.86 |
| கனேடிய டொலர் | 102.66 | 106.84 |
| அவுஸ்திரேலிய டொலர் | 101.10 | 105.86 |
| சிங்கப்பூர் டொலர் | 100.98 | 104.85 |
| ஜப்பான் யென் | 1.20 | 1.25 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.12 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 39.18 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# தமிழ் சினிமா வரலாறு

## 100 ஏவி.எம். தயாரித்த குழந்தைகள் படத்துக்கு தங்கப்பதக்கம்!

....அவருடைய முதல் கதையே "ரத்த பாசம்" தான். அப்போது அவருக்கு வயது 20-க்கு குறைவு.

"ரத்த பாச"த்தை இந்தியில் பாய்-பாய் என்ற பெயரில் ஏவி.எம். தயாரித்தார்.

நிஜ வாழ்க்கையில் அண்ணன்-தம்பியான அசேக்குமாரும், கிஷோர் குமாரும் படத்திலும் அண்ணன் தம்பியாக நடித்தார்கள்.

அஞ்சலிதேவி நடித்த கதாநாயகி வேடத்தில், நிம்மி நடித்தார். "பாய் பாய்" பெரிய வெற்றி பெற்றது.

**சோரி-சோரி**

பிறகு மும்பையைச் சேர்ந்த பட அதிபர் ஒருவருடன் கூட்டுச் சேர்ந்து, ராஜ்கபூர்-நர்கீஸ் ஆகியோரை நடிக்க வைத்து "சோரி-சோரி" என்ற இந்திப் படத்தை ஏவி.எம். தயாரித்தார்.

சங்கர்-ஜெய்கிஷன் பிரமாதமாக இசையமைத்திருந்தார்.

"சோரி-சோரி" படத்தில் பாடல்கள் அருமையாக அமைந்தன. சங்கர் ஜெய்கிஷன் இதற்கு முன் பல இந்திப் படங்களுக்கு இசை அமைத்திருந்தாலும், சிறந்த இசை அமைப்புக்கான "பிலிம்பேர்" விருதை இந்தப் படத்தின் மூலம் தான் பெற்றார்கள்.

சிறந்த சினிமா படங்களுக்கும், நடிகர், நடிகைகளுக்கும் மத்திய அரசு ஆண்டு தோறும் பரிசு வழங்கி வருகின்றது.

இந்தப் பரிசு வழங்கும் திட்டம், 1953 ஆம் ஆண்டில் அமுலுக்கு வந்தது. குழந்தைகளுக்கான சிறந்த படம் எடுப்பவர்களுக்கு நேருவின் பெயரால் தங்கப் பதக்கம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

ஆனால், குழந்தைகளுக்கான படம் எடுக்க யாரும் முன்வரவில்லை.

இந்தக் குறையைப் போக்க நினைத்த ஏவி.எம், 1957 ஆம் ஆண்டு குழந்தைகளுக்கான ஒரு படத்தை இந்தியில் எடுத்தார். படத்தின் பெயர் "ஹம் பஞ்சி ஏக்டால்கே" (நாம் ஒருமரத்துப் பறவைகள்)

பிற்காலத்தில் நட்சத்திரங்களாக ஜொலித்த ஜகதீப், டெய்சி இராணி ஆகியோர் இதில் குழந்தைகளாக நடித்தனர்.

இந்தப்படத்துக்கு, சிறந்த குழந்தைகள் படத்துக்கான தங்கப் பதக்கம் கிடைத்தது.

டெல்லியில் நடந்த விழாவில், அன்றைய ஜனாதிபதி டாக்டர் ராஜேந்தர் பிரசாத் இந்தப் பரிசினை வழங்கினார். மெய்யப்ப செட்டியார் டெல்லி சென்று, பரிசைப் பெற்றுக் கொண்டார்.

**நேரு விருந்து**

குழந்தைகளுக்கான சிறந்த படத்தை தயாரித்து, முதன் முதலாக தங்கப்பதக்கம் பெற்ற ஏவி.எம்.மை நேரு பாராட்டினார். ஏவி.எம்



ஏவி.எம்.முக்கும், குழந்தை நட்சத்திரங்களுக்கும் நேருவின் விருந்து.

மற்றும் அந்தப்படத்தில் நடித்த குழந்தைகளை நேரு தன் வீட்டிற்கு அழைத்து, காலை சிற்றூண்டி அளித்து மகிழ்வித்தார்.

இந்த விருந்தில், இந்திராகாந்தியின் கணவர் பெரோஸ்காந்தி நேருவின் தங்கை விஜயலட்சுமி பண்டிட் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

**குலதெய்வம்**

ஏவி.எம். தமிழில் தயாரித்த குலதெய்வம் சிறந்த குடும்பப் படமாக அமைந்து பெரிய வெற்றி பெற்றது. இதற்கு கதை-வசனம் எழுதியவர் முரசொலிமாறன். அவர் வசனம் எழுதிய முதல் படம் இது.

முக்கிய குணச்சித்திர வேடத்தில் எஸ்.வி.சகஸ்ர நாமமும், அவர் மனைவியாகக பண்டரிபாயும் நடித்தார்கள்.

(தொடரும்)

# நௌரு எதிர்கொண்டுள்ள புகலிடக்கோரிக்கையாளர்கள்!

...எனககு எவவத சிறப்புக் கவனிப்புக்களும் தேவையில்லை. நான் பாதுகாப்பாகவும் சுதந்திரமாகவும் வாழ வேண்டும். இதுவே எனது விருப்பம். நான் மீண்டும் அந்த இடத்திற்குத் திருப்பி அனுப்பப்படுவேனோ என்கின்ற அச்சமின்றி வாழ வேண்டும். நான் மீண்டும் பாதுகாப்பான உணர்வுடன் வாழ வேண்டும்' என துர்க்கா கூறுகிறார்.




அதேவேளை, பொது மக்களின் அனுதாபங்களைப் பெற்றுக் கொள்வதற்காக புகலிடக் கோரிக்கையாளர்கள் தம் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுவதாக பொய்யான குற்றச் சாட்டுக்களை முன் வைப்பது வழமையாகும் என நௌரு பொலிஸ் ஆணையாளர் கோறே கலேப் தெரிவித்தார்.

'புகலிடக் கோரிக்கையாளர்கள் தாம் தாக்கப்படுவதாக பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார்கள். இவர்களது கதைகளில் எவ்வித உண்மையும் இல்லை. இவர்கள் தாக்கப்பட்டதற்கான எவ்வித சான்றுகளும் ஆதாரங்களும் காணப் படவில்லை' என ஆணையாளர் குறிப்பிட்டார்.

ஆனால் இவ்வாறான சம்பவங்கள் தொடர்பாக பொலிஸார் எவ்வளவு தூரம் விசாரணை செய்கின்றனர் என்பது கேள்விக்குறியே. இவ்வாறான தாக்குதல் மற்றும் சித்திரவதைச் சம்பவங்கள் தொடர்பாக தடுப்பு மையத்தின் நிர்வாகிகள் அண்மைய ஆண்டுகளில் 50 வழக்குகளைப் பதிவு செய்த போதிலும், ஐந்து வழக்குகள் மட்டுமே வெற்றிகரமாக வாதிடப் பட்டுள்ளன. ஏனையவர்கள் தமக்கெதிரான சாட்சியங்களை முன் வைக்கத் தவறியுள்ளனர்.

நௌரு பொலிஸார் அரசியல் மயமாக்கப் பட்டுள்ளதாக நௌருவின் முன்னாள் வதிவிட நீதிவான் பீற்றர் லோ கடந்த ஆண்டு சுட்டிக் காட்டியிருந்தார். தடுப்பு முகாம்களில் மேற் கொள்ளப்படும் சித்திரவதைகள் மற்றும் பாலியல் மீறல் குற்றச்சாட்டுக்கள் மிகத் தீவிரமாக வசாரணைகக உடபடுத தப்படுவதாக குடிவரவு அமைச்சர் பீற்றர் டுற்றன் தெரிவித்துள்ளார்.

'சித்திரவதைகள் தொடர்பாக முன்வைக் கப்படும் குற்றச்சாட்டுக்கள் மிகத் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றன. இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் மிகச் சரியாக விசாரணை செய்யப்படுகிறதா என்பதில் நாம் அதிக சிரத்தை எடுத்துள்ளோம். அவுஸ்திரேலியர்களாகிய நாம் சிறுவர்கள் உட்பட எமது நாட்டில் தஞ்சம் புகுந்துள்ளோர் ஏனைய புகலிடக் கோரிக்கையாளர்களால் அல்லது ஏனையவர்களால் சித்திரவதைகளுக்கும் மீறல்களுக்கும் உட் படுத்தப்படுவதை வெறுமனே பார்த்துக் கொண்டிருக்க மாட்டோம். ஆகவே இவர்களுக்கு எதிராக நாங்கள் நடவடிக்கை எடுப்பதற்கான முயற்சிகளை மேற் கொளவோம' என அவுஸ்திரேலியக் குடிவரவு அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

படகுகள் மூலம் அவுஸ்திரேலியாவை வந்தடைந்த எந்தவொரு புகலிடக் கோரிக்கையாளர்களும் அவுஸ்திரேலியாவில் தொடர்ந்தும் குடியேற்றப்பட மாட்டார்கள் என்பது அரசாங்கத்தின் கோட்பாடாக உள்ளதாகவும் இவ்வாறானதொரு கோட்பாடே பாதுகாப்பற்ற கடற்பயணங்களை மக்கள் தொடர்ந்தும் மேற்கொள்வதைத் தடுத்துள்ளதாகவும் இவ்வாறான ஆபத்தான பயணங்களில் மக்களின் உயிர்கள் காவுகொள்ளப் படுவதைத் தடுப்பதாகவும் டுற்றர் தெரிவித்தார்.

(முற்றும்)

வழிமூலம் - **The Guardian**
ஆங்கிலத்தில்- **Ben Doherty**
நித்தியபாரதி

ஒரு கண்ணுக்கு வெண்ணையும்
மறு கண்ணுக்கு சுண்ணாம்பும் –
தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www:valampurii:lk

## குற்றவாளியைக் காப்பாற்றுவது பாதிக்கப்பட்டவருக்கு அநீதி இழைப்பதாகும்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை மின்சாரக் கதிரையில் இருந்து காப்பாற்றினேன் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார். இத்தகைய கருத்து முன்னரும் கூறப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் இக்கூற்றுத் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்த விதமான கருத்துரைப்பும் செய்யாமல் மௌனமாக இருக்கிறது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை மின்சாரக் கதிரையில் இருந்து காப்பாற்றினேன் என்பதற்குள்,

மகிந்த ராஜபக்ஷ ஒரு பெரும் குற்றவாளி என்றும் அவர் மீது சர்வதேச விசாரணை நடத்தப்பட்டிருக்குமாக இருந்தால், நிச்சயம் அவருக்கு மின்சாரக் கதிரையில் வைத்து தண்டனை வழங்கப்பட்டிருக்கும் என்பதும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கருத்து.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை மின்சாரக் கதிரையில் இருந்து காப்பாற்றியுள்ளோம் என்பதை இந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவும் ஏற்கெனவே கூறியுள்ளார்.

ஜெனிவாவில் நடந்த மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் இலங்கையில் நடந்த போர்க் குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணைகள் தேவை என்ற வலியுறுத்தல்கள் இருந்தபோதிலும் அமெரிக்காவும் இலங்கை அரசும் தமக்குள் பேசிக் கொண்டு சர்வதேச விசாரணை என்பதை மழுங்கடித்து,

வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்கிய விசாரணை என்றவாறான ஒரு புதிய தீர்மானம் கொண்டு வரப்பட்டது. இதன்போதெல்லாம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எதுவும் பேசாமல் மௌனம் காத்தது.

ஏற்கெனவே இலங்கை அரசும் கூட்டமைப்பும் உடன்பட்டுக் கொண்டதன் அடிப்படையிலேயே கூட்டமைப்பின் மௌனம் அமைந்திருந்தது என்பதும் தெரிந்ததே.

சர்வதேச விசாரணை நடந்திருக்குமாக இருந்தால் இலங்கையில் நடந்தது தமிழின அழிப்பு என்பது உறுதியாக்கப்பட்டு இருப்பதுடன் அதனைச் செய்தவர்களுக்கு மின்சார நாற்காலியில் வைத்து தண்டனையும் வழங்கப்பட்டிருக்கும்.

இருந்தும் அவை எதுவும் நடக்காமல் இருப்பதற்கு தமிழ் அரசியல் தலைமையும் தேவையான உதவியைப் புரிந்தது.

அவ்வாறு உதவி புரியவில்லை என்றால் மின்சார நாற்காலியில்இருந்து மகிந்த ராஜபக்ஷவை காப்பாற்றியுள்ளோம் என்று வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர கூறியபோது,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அந்தோ! நல்லாட்சியிலும் தமிழர்களுக்கு அநியாயம் நடந்து விட்டது. தமிழ் இனத்தை அழித்தவரை மைத்திரியின் அரசு காப்பாற்றியுள்ளது.

தமிழ் மக்களின் வாக்குகளால் ஜனாதிபதித் தேர்தலில் வென்றவர் இங்ஙனம் செய்தது நீதியோ! என்று உரக்கக் கத்தியிருக்க வேண்டும். இருந்தும் கூட்டமைப்பு எதுவும் பேசவில்லை.

இப்போதும் ஜனாதிபதி மைத்திரி சொல்கிறார், மின்சாரக் கதிரையில் இருந்து மகிந்த ராஜபக்ஷவை காப்பாற்றினேன் என்று.

இனியாவது, எங்கள் அரசியல் தலைவர்கள் ஜனாதிபதி மைத்திரியை பார்த்து, ஐயா! மகிந்த ராஜபக்ஷவை காப்பாற்றிய நீங்கள் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு எதைத் தரவும் பின்னடிக்கிறீர்கள். தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய மறுதலிக்கிறீர்கள். ஒரு போர்க்குற்றவாளியைக் காப்பாற்றிய நீங்கள் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி வழங்க மறுப்பது ஏன்?

ஓ! அவர் சிங்களவர், நாங்கள் தமிழர், அதனால் அவரைக் காப்பாற்றினீர்கள் எங்களைக் காப்பாற்ற மறுக்கிறீர்கள். இப்படிக் கூறுவதற்கு எங்களால் ஏன் முடியவில்லை? அட! இப்படிச் சொன்னால் அவர்களும் பதிலுக்கு சொல்லுவார்கள்.

அவர்கள் சொல்வது தமிழ் அரசியல் தலைமையையும் தமிழ் மக்களையும் வலுவாக அந்நியப்படுத்தி விடும். அதனால்தான் ஜனாதிபதி மைத்திரியின் கருத்துக் குறித்து எங்கள் மௌனம் தொடர்கிறது. அவ்வளவுதான்.

## பொலிஸ் அதிகாரிகள் நால்வருக்கு இடமாற்றம்

உடனடியாக அமுலுக்கு வரும்வகையில் உயர்பொலிஸ் அதிகாரிகள் நால்வருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

சேவையின் தேவை நிமித்தம் நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

இதன்படி வவுனியா தலைமையகத்தின் பொலிஸ் பரிசோதகராக இருந்த எஸ்.எம்.சீ.டி.கே.அபேரத்ன எல்பிடிய தலைமையக பொலிஸ் பரிசோதகராக இடமாற்றப்பட்டுள்ளார்.

மேலும், வவுனியா தலைமையகத்தின் பொலிஸ் பரிசோதகராக டப்ளியூ.ஏ. சோமரத்னவும், கல்கிஸ்ஸ தலைமையகத்தின் பொலிஸ் பரிசோதகராக பீ.ஏ.ஆர்.புஸ்பகுமாரவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், சீ.டப்ளியூ. இத்தமல்கொட கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளார். (செ-12)

## வாகன விபத்தில் குடும்பஸ்தர் காயம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளும் ஆட்டோவும் விபத்துக்குள்ளானதில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்று பிற்பகல் 12.30 மணியளவில் காரைநகர் தன்னை விடத்தளைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இவ் விபத்தில் காரை நகரைச் சேர்ந்த பாலு பரமேஸ்வரன் (வயது 34) என்ற குடும்பஸ்தர் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (செ-12,30)

## பல்கலை.மாணவர்கள் சென்ற பேருந்து நேற்று விபத்து!

### 28 பேர் காயம்

(கொழும்பு)

பண்டாரவளை - ஹப்புத்தலை பகுதியில் பொலத்தென்ன ரயில் குறுக்கு வீதிக்கு அருகாமையில், பல்கலைக்கழக மாணவர்களை ஏற்றிச்சென்ற பேருந்து ஒன்று கண்டெயினர் ரக வாகனம் ஒன்றுடன் மோதி விபத்துக் குள்ளாகி உள்ளது.

குறித்த விபத்து நேற்றுக் காலை வேளையில் நடந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சப்ரகமுவ பல்கலைக் கழக மாணவர்கள் சென்ற பேருந்தே இவ்வாறு பாரிய விபத்துக்குள்ளாகி உள்ளது. அதில் பயணித்த 25 மாணவிகள் உட்பட 28 பேர் காயமடைந்துள்ளனர்.

குறித்த விபத்தில் காயமடைந்தவர்கள் பண்டாரவளை மற்றும் தியத்தலாவ ஆகிய வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்தில் இருவரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளதாக வைத்திய சாலை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ)

## ஹெரோயின், கஞ்சா 21 கிலோ மீட்பு

அம்பலாங்கொட மாதம்பகம பிரதேசத்தில் 20.87 கிலோ கிராம் ஹெரோயின் மற்றும் 1.1 கிலோ கிராம் கஞ்சா போதைப் பொருள்களுடன் ஒருவர்கைது செய்யப்பட்டுள்ளதாக அம்பலாங்கொட பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர் நேற்று முற்பகல் 10.35 அளவில் அம்பலாங்கொட நகரில் வைத்து வைத்து கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர் 44 வயதான வலவ்வத்தை, குளிகொட பிரதேசத்தை சேர்ந்தவர் எனவும் இவர் இன்றைய தினம் பலப்பிட்டிய நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-12)

## சடலத்தைப் பொறுப்பேற்கவும்

(கரணவாய்)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்த பெண்ணின் சடலம் உரிமை கோரப்படாத நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில்வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 12ஆம்திகதி காலையில் நெல்லியடி, கொடிகாமம் வீதியில் உள்ள சமுர்த்தி வங்கி அருகாமையில் மயங்கிய நிலையில் வீழ்ந்து கிடந்த சுமார் 55 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர் வீதியில் சென்றவர்களது உதவியுடன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். எனினும் சிகிச்சை பலனின்றி அன்றைய தினமே அப் பெண் உயிரிழந்தார். உயிரிழந்த அப்பெண்ணின் சடலத்தினை எவரும் வைத்திய சாலை சென்று உரிமை கோரவில்லை.

இதனையடுத்து சடலம் யாழ்.போதனா வைத்திய சாலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இது தொடர்பாக பருத்தித்துறைபொலிஸ்நிலையத்திற்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே சடலத்தை உரித்துடையவர்கள் பொறுப் பேற்றுக் கொள்ளுமாறும் இது தொடர்பாக தகவல் தெரிந்தவர்கள் 021 226 3227 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறுபருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-5-60)

## வீதியில் நடந்து சென்ற சிறுவனை மோதித்தள்ளிய உழவுயந்திரம்

### கால் முறிந்த நிலையில் கிளி.வைத்தியசாலையில்

(திருமுருகண்டி)

வீதியில் நடந்து சென்றுகொண்டிருந்த சிறுவனை உழவு இயந்திரம் மோதித்தள்ளியதில் கால் முறிந்த நிலையில் பிரஸ்தாப சிறுவன் கிளிநொச்சிமாவட்டபொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் கிளிநொச்சி சாந்தபுரம் வீதியில் இடம்பெற்றது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது

பிரஸ்தாப சிறுவன் குறித்த வீதியால் நடந்துசென்றுகொண்டிருந்த போது உழவு இயந்திரம் மோதித்தள்ளியது.

இதன் போது சிறுவன் கால் முறிவடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றான்.

இச் சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (2-3-31)

## மின்சாரம் தடைப்படும்

(யாழ்ப்பாணம்)

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை வடமாகாணத்திலுள்ள சில பிரதேசங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும்.

அந்தவகையில் 16.02.2016 செவ்வாய் யாழ்.பிரதேசத்தில் இணுவில் கந்தசாமி கோவில் பிரதேசம் ஆகிய இடத்திலும் வவுனியா பிரதேசத்தில் சாம்பல் தோட்டம் கிராமம், தீவீரகம (பெரிய உளுகதளம்) ஆகிய பிரதேசங்களிலும். மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும். (இ-9)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### பொருளும் நிகழ்ச்சியும்



நீங்கள் எழுதுவதற்காகப் பேனாவைக் கையில் வைத்திருக்கின்றீர்கள். அதையே நம் சிந்தனைக்கு எடுத்துக் கொள்வோம். பேனாவைப் பார்த்து இது பொருளா அல்லது நிகழ்ச்சியா என்ற வினா எழுப்புங்கள். கையினால் தொட்டு உணர முடிவதாலும் கண்ணால் பார்த்து உணர முடிவதாலும் பேனா ஒரு பொருள்தான் என்று கருத நேரும்.

மேலே செல்வோம். அந்தப் பேனாவை எரியும் நெருப்பிலிட்டால் என்ன ஆகும். எரிந்து சாம்பலாகிப் போகும். பேனா என்ற வடிவம் இப்போது அதற்கு இல்லை. பேனா எங்கே? அழிந்து விட்டது. இவ்வாறு அழிவது பொருளாகுமா? பேனா என்னவாயிற்று? ஆராய்வோம். நெருப்பிலிட்டவுடன் அதில் இணைந்திருந்த பலதரப்பட்ட அணுக்கள் வெப்பத்தால் கிளர்ச்சியூட்டப் பெற்று இயக்க விரைவு பெற்று ஒன்றை விட்டு ஒன்று பிரிந்து போயிற்று. அதனால் அணுக்கள் கூட்டால் அமைந்த பேனா என்ற வடிவம் மறைந்து போயிற்று. எது பேனாவாகக் காட்சியளித்தது? அணுக்கள். பேனா பொருளன்று. அணுக்கள் கூடிய ஒரு நிதழ்ச்சி தான் என்பது விளங்கக் கண்டோம். பேனா மட்டுமென்ன? நாம் காணும் இப்பேரியக்க மண்டல நிகழ்ச்சிகள், தோற்றங்கள், அத்தனையும் அணுக்களின் கூட்டு இயக்கம் தானே? ஒரு கூட்டுத் தோற்றமாக நாம் காணும் எப்பொருளிலும் ஒவ்வொரு அணுவும் தனித்தனியாகத் தான் இயங்கிக்கொண்டிருக்கிறன. அவற்றின் இடையில் உள்ள இடைவெளியைக் காணும் திறமை புலனறிவுக்கு இல்லை.

அதனால் ஒரே கொத்தாக ஒரு தோற்றம் காட்சியாகின்றது. இவ்வாறு இந்த அடிப்படையில் ஆராய்ந்தால் பிரபஞ்சத் தோற்றங்கள் அத்தனையும் நிகழ்ச்சிகளே என்ற முடிவுக்கு வருகிறோம். அடுத்து ஒரு வினா. எல்லாத் தோற்றங்கட்கும் அடிப்படைத் துகளான அப்பரமாணு பொருளா? நிகழ்ச்சியா? இதனையும் ஆராய்வோம். அப்பரமாணுவின் இயக்கத்தைக் கழித்து யார் அல்லது எது இயங்குகின்றது என்று உணர்ந்து கொள்ளலாமல்லவா? அது தானே பொருளாக இருக்க முடியும்? பரமாணுவின் இயக்கத்தைக் கழித்துப் பார்த்தால் என்ன மிஞ்சும்? ஒன்றுமேயில்லை. வெட்டவெளி தான் மீதி. அகன்று நின்று பூரணமாக இருக்கும் வெட்டவெளி என்ற பொருள் தான் நுண்ணிய இயக்கத்தில், கண்ட நிலையில் பரமாணுவாக இருக்கின்றது. இப்போது பொருள்நிலை விளங்குகிறதல்லவா? வெட்ட வெளி என்ற ஒரு நிலையே பொருள் நிலையாகும். அதன் இயக்க நிகழ்ச்சியே பரமாணுவாகும். மற்ற தோற்றங்கள் யாவும் பரமாணுவாகும். மற்ற தோற்றங்கள் யாவும் பரமாணுக்களின் கூட்டு அல்லது தொடர் நிகழ்ச்சியாகும்.

# விக்ரம்,ராஜன்,கங்கு வெற்றிக்கிண்ணம் யாழ். பல்கலை முதலாவது வெற்றி

விக்ரம், ராஜன், கங்கு வெற்றிக் கிண்ணத்திற்காக கொக்குவில் வளர் மதி விளையாட்டுக் கழகம் வருடா வருடம் நடத்தி வரும் 30 பந்து பரி மாற்றங்களை கொண்ட துடுப்பாட்ட சுற்றுப்போட்டியின் 2 ஆவது தகுதி காண் போட்டி கடந்த 4 ஆம் திகதி கொக்குவில் இந்துக் கல்லூரி மைதா னத்தில் நடைபெற்றது. இப் போட்டி யில் யாழ்.பல்கலைக்கழக அணி, ஹாட்லியைற்ஸ் அணியை 5 இலக்கு களால் வெற்றி பெற்று தனது முதலா வது வெற்றியை பதிவு செய்துள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஹாட் லியைற்ஸ் அணி 26 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 86 ஓட் டங்களை பெற்றது. தீபன் -13 செயோன்-23 ஓட்ங்களை பெற்றனர்.

பந்து வீச்சில் யாழ். பல்கலைக் கழக அணியை சார்ந்த அஜந்தன்-02, தரணிதரன் -01 டிக்ஸன் -01, குருகுலசூரியா-02, அருண்ராஜ் -03, இலக்குகளை கைப்பற்றினர்.

87 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு களமிளங்கிய யாழ். பல்கலைக்கழக அணி 15.1 ஓவர்களில் 5 இலக்குகளை இழந்து 90 ஓட்டங்களை பெற்றது. தரகா-16, யோகேஸ்வரன்-21, குருகுலசூரியா ஆட்டமிழக்காமல் 17, சற்குணேஸ் வரன்-18 ஓட்டங்களை பெற்றனர். பந்து வீச்சில் ஹாட்லி யைற்ஸ் அணியை சார்ந்த சாகித்தியன்-02, நிஸாந்தன்-02, புருசோத்மன்-02 இலக்குகளை கைப்பற்றினர். இப் போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் நடத்தும் தர வரிசை பட்டியலுக்கு யாழ். பல்க லைக்கழக அணி 5 .40 புள்ளிகளை யும் ஹாட்லியைற்ஸ் அணி 136 புள்ளிகளையும் பெற்றுக் கொண் டனர். (கு)



விதுசன் அதிரடி



# பிளே ஓவ் சுற்றுக்கு கார்மேல் போய்ஸ் தகுதி


ஏபி விளையாட்டுக்கழகம் நடத்தி வரும் அணிக்கு 11 பேர் பங்கு பற் றும் 8 பந்துபரிமாற்றம் கொண்ட கிரிக்கெட் போட்டியில் முதல் இரு போட்டிகளிலும் முறையே காந்தி நியூஸ்டார். உடுவில் சலஞ்சர் அணி களை வெற்றி கொண்டு இறுதி போட் டியில் பொற்பதி அணியுடன் மோதி யது. இதில் முதலில் துடுப்படுத்தா டிய கார்மேல் போய்ஸ் அணி 97 ஓட்டங்களை பெற்றது.

இதில் விதுசன் 80 ஓட்டங்களை பெற்றார். பதிலுக்கு துடுப்பெடுத்து ஆடிய பொற்பதி அணி சகல இலக் குகளையும் இழந்து 40 ஓட்டங் களை மட்டுமே பெற்றது. அலன் போடர் 2 இலக்குக ளையும் துசாந் 2 இல்க்குகளையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனான விதுசன் தெரிவு செய்யப்பட்டார். (கு)

# இமையாணன் மத்திய வி.க நடத்தும் கிரிக்கெட் சுற்றுப்போட்டி

## காலிறுதியில் கரவெட்டி ஞானம்ஸ்





இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகம் நடத் தும் அணிக்கும் 11 பேர் 8 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியில்நேற்று முன் தினம் நடந்த தொண்டை மானாறு விளையாட்டு கழ கம் மற்றும் நெற்கொழு கழு குகள் வி.கழகம் ஆகிய இரு அணிகளுடனான போட்டியில் வெற்றி பெற்று கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக்கழகம் காலிறுதி போட் டிக்கு முன்னேறியுள்ளது.

தொண்டைமானாறு விளையாட் டுக்கழகத்துடனான போட்டியில் முத லில் துடுப்பெடுத்தாடிய ஞானம்ஸ் விளையாட்டுக்கழகம் 8 ஓவர்களில் 8 விக்கெட் இழப்பிற்கும் 111 ஓட்டங் களை பெற்றுக்கொண்டது.

துடுப்பாட்டத்தில் ரஜிபன் நான்கு 6 ஓட்டங்களுடன் 28 ஓட்டத்தினை யும் சுகந்தன் 23 ஓட்டத்தினையும் நரேன் 22 ஓட்டத்தினையும் பெற் றுக் கொண்டனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய தொண்டைமானாறு விளையாட் டுக்கழகம் 8 ஓவர்களில் 4 விக்கெட் இழப்பிற்கு 40 ஓட்டங்களை மாத் திரமே பெற்றுக் கொண்டது. இத னால் ஞானம்ஸ் விளையாட்டுக்கழ கம் 71 ஓட்டங்களால் வெற்றி பெற் றது. போட்டியின் ஆட்டநாயகனாக ஞானம்ஸ் விளையாட்டுக்கழகத்தின் ரஜிபன் தெரிவானார். நடைபெற்ற மற் றைய போட்டியில் ஞானம்ஸ் விளை யாட்டுக்கழகமும் நெற்கொழுகழுகுகள் விளை யாட்டுக்கழகமும் மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நெற் கொழு கழுகுகள் விளையாட்டுகழ கம் 8 ஓவர்களில் 6 விக்கெட் இழப் பிற்கு 81 ஓட்டத்தினை பெற்றுக் கொண்டது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஞான ம்ஸ் விளையாட்டுக்கழகம் 6.2 ஓவ ரில் 3 விக்கெட் இழப்பிற்கு வெற்றி இலக்கை அடைந்தது. துடுப்பாட் டத்தில் பிரகாஷ் ஆட்டமிழக்காது 40 ஓட்டத்தினை பெற்று ஆட்டநாயகனாக தெரிவானார். (கு)


## இன்றைய போட்டிகள்

கரவெட்டி பிரதேச செயலகத்தின் 2016 ஆண்டுக்கான விளையாட்டு விழாவின் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று திங்கட்கிழமை இமையாணன் மத்தி விளையாட்டு க்கழ மைதானத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டி யில் கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து இமையாணன் மத்தி விளையாட்டுக்கழகமும் மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் நியூட்டன் விளையாட் டுக்கழகத்தை எதிர்த்து அண்ணா சிலையடி விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளது. மனோகரா விளையாட் டுக்கழக மைதானத்தில்பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டி யில் இமையாணன் இளைஞர் விளை யாட்டுக்கழகத்தை எதிர்த்து மைக்கல் விளையாட்டுக்கழகமும் மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ள போட் டியில் கொலின்ஸ் விளையாட்டுக்கழ கத்தை எதிர்த்து கலைமதி விளை யா ட்டுக்கழகமும் மோதவுள்ளது. (கு)

## தேசிய ரீதியிலான காற்பந்தாட்டம்

# புனித கென்றியரசர் கல்லூரி அரையிறுதிக்குத் தெரிவு





Kotmale Chox இன் நாடாள விய ரீதியாக நடைபெற்ற பாட சாலை 19 வயது பிரிவு அணிகளிற் கிடையேயான காற்பந்தாட்ட சுற் றுப்போட்டியின் கால்இறுதி ஆட்டத் திற்கு தெரிவு செய்யப்பட்ட புனித கென்றியரசர் கல்லூரி அணியினர் கடந்த வெள்ளிக்கிழமை கண்டி Dha rmaraja college உடன் மோதினர். ஆரம்பம் முதலே தமது அதிரடி ஆட்டம் மூலம் போட்டியை தமது கட் டுப்பாட்டிலேயே வைத்திருந்த கென் றியரசர் இறுதியில் 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையி றுதிக்குத் தகுதி பெற்றனர். கென்றிய ரசர் சார்பாக தனேஸ், அந்தோனிராஜ், அனோஜன், ரமேஷ் ஆகியோர் தலா ஒரு கோல் போட்டனர். எதிர்வரும் 16 ஆம் திகதி Holy cross college அணியை எதிர்கொள் கின்றார்கள். (கு)

# மாவட்ட ரீதியிலான துடுப்பாட்டம் இறுதிப்போட்டியில் வல்வை அணி



பருத்தித்துறை வாரியேர்ஸ் மற் றும் புலோலியூர் இளந்தளிர் விளை யாட்டுக்கழகம் இணைந்து நடத்தும் யாழ். மாவட்ட ரீதியிலான துடுப்பாட்ட சுற்றுப்போட்டியில் வல்வை அணி இறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றது.

தமது முதல் போட்டியில் 33 ஓட் டங்களால் மாதனை வி.கழகத்தை யும் காலிறுதிப் போட்டியில் ஒரு இலக் கினால் இளந்தளிர் விளையாட்டுக் கழகத்தையும் அரையிறுதிப்போட்டி யில் 8 ஓட்டங்களால் வதிரி ஸ்ரீமுரு கன் விளையாட்டுக் கழகத்தையும் வீழ்த்தியமை குறிப்பிடத்தக்கது. (கு)

## இளைஞர் உலகக் கிண்ண கிரிக்கெட்

# முதன்முறையாக சம்பியனாகி வரலாறு படைத்தது மே.தீவுகள்




காா்ட்டி - போல் இணை வீழ்த்தப்படாத 6ஆவது விக்கெட்டுக்காக பகிர்ந்த பெறுமதிவாய்ந்த 69 ஓட்ட இணைப்பாட்டம் கைகொடுக்க 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கிண்ண கிரிக்கெட் இறுதிப் போட்டியில் இந்திய அணியை வீழ்த்தி முதன்முதலாக சம்பியனாகி வரலாறு படைத்தது மேற்கிந்தியத் தீவுகள்.

முதலில் ஆடுகளத்தை சரியாகக் கணித்து இந்திய அணியை முதலில் துடுப்பாட்டம் செய்ய அழைத்து துல்லியமாக பந்துவீசி இந்திய அணியை 145 ஓட்டங்களுக்குச் சுருட்டிய பிறகு, வெற்றியிலக்கை விரட்டும்போது இந்திய அணி கொடுத்த கடும் நெருக்கடியை மன உறுதியுடன் எதிர்கொணடு கடைசி ஓவரின் 3ஆவது பந்தில் (146/5) வெற்றி பெற்று 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கிண்ண கிரிக்கெட்டில் முதன் முதலாக உலக சம்பியன்களாகி வரலாறு படைத்தது மேற்கிந்தியத் தீவுகள்.

67/2 என்று நிதானமாக வெற்றியை நோக்கிச் சென்று கொண்டிருந்த மேற்கிந்தியத் தீவுகள் அணியை இந்திய இடது கை ஸ்பின்னர் டாகர் 3 விக்கெட்டுக்களை அடுத்தடுத்து வீழ்த்தி கடும் சிக்கலுக்குள்ளாக்கினார்.

அவர் (டாகர்) முதலில் அணித் தலைவர் ஹெட்மயரை 23 ஓட்டங்களில் வீழ்த்தினார். பிறகு ஸ்பிரிங்கர், கூலி ஆகியோரையும் வீழ்த்த 77/5 என்று தோல்வி முகம் கண்டது மேற்கிந்தியத் தீவுகள்.

ஆனால், அதன் பிறகு இந்திய அணியின் கடும் நெருக்குதலை நிதானத்துடனும், சாதுரியத்துடனும் எதிர்கொண்ட கார்ட்டி (ஆட்டமிழக்காமல் 52), போல் (ஆட்டமிழக்காமல் 40) இணை மேலதிக விக்கெட் இழப்பைத் தவிர்த்து தமக்கிடையில 69 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்து கடைசி ஓவர் வரை ஆட்டத்தை எடுத்துச் சென்று மிகவும் அழுத்தம் தரும் சூழ்நிலையில் கடைசி ஓவரில் வெற்றி பெற்று முதன்முதலாக சம்பியன்களாக்கியது.

இந்திய தரப்பில் திருப்புமுனை ஏற்படுத்திய டாகர் 10 ஓவர்களில் ஒரு மெய்டனுடன் 25 ஓட்டங்கள் கொடுத்து 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். அவேஷ் கான் வழக்கம்போல் அருமையாக வீசி 29 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெடடை யும் அகமது ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக மேற்கிந்தியத் தீவுகளின் கார்டரும் போட்டித் தொடரின் சிறப்பாட்டக்காரராக பங்களாதேஷின் மொஹிடி ஹசன் மிரஷ் தெரிவாகினா்.

தொடர் வெற்றிகளை சந்தித்து வந்த இந்திய அணி கடைசியில் போராடி தோல்வி தழுவியது, ஆனாலும் குறைந்த இலக்கை வைத்துக் கொண்டு கடைசி ஓவர் வரை ஆட்டத்தை இழுக்கும் திறமையை, இந்த அணியினரி டத்தில் ஒரு கடினமான போராட்ட மனநிலையை ஏற்படுத்திய விதத்தில் பயிற்சியாளர் ராகுல் டிராவிட்டுக்கு இது ஒரு திருப்திகரமான தொடரே.

பசுந்தரை ஆடுகளத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணித் தலைவர் ஹெட்மயர் முதலில் இந்திய அணியை துடுப்பாட்டம் செய்ய அழைததார். வேகப்பந்து வீச்சாளர் கள் ஜோசப் மற்றும் ஹோல்டர் வெறியுடன் பந்துவீசினர். பந்தின் தையல் பகுதியை தரையில் படுமாறு வீசி எழும்பச் செய்து இந்திய துடுப்பாட்ட வீரர்களை திணறச் செய்தனர்.

தொடர்ந்து ஷோர்ட் பிட்ச் பந்து வீச்சு உத்தியை அவர்கள் கடைப்பிடித்தனர். சர்பராஸ் கான் மட்டுமே சிறப்பாக ஆடி இந்த உலகக் கிண்ணப் போட்டிகளில் தனது 7ஆவது அரைச்சதத்தை எடுத்தார். அவர் 89 பந்துகளில் 5 பவுண்டரிகள் ஒரு சிக்ஸருடன் 51 ஓட்டங்கள் எடுத்து ஒரு முனையில் போராடி 8ஆவது விக்கெட்டாக ஜோன் பந்தில் எல்பிடபிள்யூ ஆனார். லோம்ரோர் 19, ஆர். ஆர். பாதம் 21 ஓட்டங்கள் எடுக்க,

இந்திய அணி 45.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 145 ஓட்டங்கள் எடுத்து சுருண்டது.

பந்துவீச்சில் மேற்கிந்திய அணி சார்பில் ஜோசப் 39 ஓட்டங்களுக்கு 3, ஜோன் 38 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினா்.

காலிறுதி, அரையிறுதிகளில் கடினமான சூழலில் வெற்றியிலக்கைத் துரத்தி வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள், இறுதிப் போட்டியில் இந்திய அணி நிர்ணயித்த வெற்றியிலக்கை இலகு வாக எட்ட முடியவில்லை, கார்ட்டி, போல் ஆகிய வீரர்கள் 77/5 என்ற நிலையிலிருந்து 19 வயதுக்குட்பட்ட வீரர்களிடத்தில் மிக அரிதாகவே காணப்படும் மனஉறுதியையும் நல்ல உத் தியையும் பொறுமையையும் கொண்டு வெற்றி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு ஆடி உலக சம்பியன்களாக்கியது சரிவுறும் மே.தீவுகள் கிரிக்கெட்டுக்கு ஒரு புதிய உத்வேகத்தை நிச்சயமாக அளிக்கும்.

## தொடர் தென்னாபிரிக்க வசம்



அணித் தலைவர் டி வில்லியர்ஸின் பொறுப்பான சதம் கைகொடுக்க இங்கிலாந்து அணிக்கு எதிரான இறுதி ஒரு நாள் போட்டியை 5 விக்கெட்டுக்களால் வெற்றி கொண்ட தென்னாபிரிக்க அணி 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரை 3:2 என்ற கணக்கில் கைப்பற்றியது.

தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி அங்கு 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்குபற்றியது.

முதல்நான்கு போட்டிகள் முடிவில் தொடர் 2:2 என்ற கணக்கில் சமனிலையில் இருந்த நிலையில், 5ஆவதும் இறுதியுமான ஒருநாள் போட்டி கேப் டவுனில் நேற்று நடைபெற்றது.

போட்டியின் நாணயச்சுழற்சியில வென்ற தெனனாபிரிக்க அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி அலெக்ஸ் ஹேல்ஸின் அபார சதத்தின்12) உதவியுடன் 45 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 236 ஓட்டங்களை எடுத்தது.

237 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி அணித் தலைவர் டி வில்லியர்ஸின் அபார சதத்தின் உதவியுடன 44 ஓவர்களில் 5 விக்கெட் டுக் களை மட்டுமே இழந்து வெற்றி யிலக்கை (237) அடைந்தது.

துடுப்பாட்டத்தில் டி வில்லியர்ஸ் ஆட்டமிழக்காமல் 101, அம்லா 59 ஓட்டங்கள் எடுத்தனா்.

போட்டியின் ஆட்டநாயகனாக தென்னாபிரிக்காவின் டி வில்லியர்சும் தொடரின் நாயகனாக இங்கிலாந்து அணியின் ஹேல்சும் தெரிவாகினா்.

அஷ்வின் சூறாவளியில் சறுக்கியது இலங்கை

# தொடரை வென்றது இந்தியா




ரவிச்சந்திரன் அஷ்வினின் மிரடடலான சுழல்பந்து (4/8) கைகொடுக்க இலங்கை அணிக்கு எதிரான மூன்றாவது இருபது-20 போட்டியில் 9 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற இந்திய அணி, 3 போட்டிகள் கொண்ட இருபது இருபது-20 தொடரை 2:1 என்ற கணக்கில் கைப்பற்றி அசத்தியது.

இந்தியவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி அங்கு 3 போட்டிகள் கொண்ட இருபது-20தொடரில் பங்கேற்றது.

முதல் இரு போட்டி முடிவில் இரு அணிகளும் தலா ஒரு வெற்றி பெற தொடர் 1-1 என்ற கணக்கில் சமனிலையில்இருந்தது. இந்நிலையில் மூன்றாவது மற்றும் கடைசி போட்டி போட்டி நேற்று விசாகப் பட்டினத்தில் நடந்தது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணித் தலைவா் தோனி முதலில் பந்துவீச்சைத் தேர்வு செய்தார்.

### அஷ்வின் மிரட்டல்

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இலங்கை அணியின் டிக்வெல்ல (1), தில்ஷன் (1), அணித் தலைவா் சண்டிமல் (8) அஷ்வின் சுழலில் சிக்கினர். குணரத்ன, சிறிவர்தன தலா 4 ஓட்டங்கள் எடுத்தனர். ஷானகா 19 ஓட்டங்கள் எடுத்தாா். பின் வந்தவர்களும் விரைவில் வெளி யேற இலங்கை அணி 18 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 82 ஓட்டங்களை எடுத்தது.

பந்துவீச்சில் இந்திய அணி சார்பில் அசத்திய ரவிச்சந்திரன் அஷ்வின 4 ஓவாகளில் ஒரு மெய்ட னுடன் 8 ஓட்டங்களை கொடுத்து 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினாா்.

மிகச்சுலப இலக்கை விரட்டிய இந்திய அணிக்கு ஆரம்ப வீரர் ரோஹித் சர்மா (13) ஏமாற்றினார். பின் தவானுடன் இணைந்த ரஹானே பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். ஒரு முனையில் ரஹானே நல்ல கம்பெனி கொடுக்க, எதிர்முனையில் தவான், சேனநாயக்க பந்தில் இரண்டு பவுண்டரிகள் அடித்தார். தொடர்ந்து பொறுமையான ஆட்டத்தை வெளிப்படுத்திய இந்த ஜோடி ஒரிரு ஓட்டங்களாக சேர்த்தது. பின் குணரத்ன பந்தில், தவான் தலா ஒரு சிக்ஸர், ஒரு பவுண்டரி அடிக்க, இந்திய அணி 13.5 ஓவா்களில் ஒரு விக்கெட்டை இழந்து வெற்றியிலக்கை (84 ஓட்டங்கள்) 9 விக்கெட்டுக்களால் அடைந்தது.

இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரை இந்திய அணி 2:1 என்ற கணக்கில் கைப்பற்றியது .

போட்டியின் ஆட்ட நாயகனாகவும் போட்டித் தொடரின் நாயகனாகவும் இந்திய அணியின் ரவிச்சந்திரன் அஷ்வின் தெரிவானாா்.

## ஜெமினி அரேபியன்ஸ் சம்பியன்



ஓய்வுபெற்ற கிரிக்கெட் நட்சத்திரங்களுக்கிடையிலான எம்.சி.எல் தொடரில் வீரேந்தர் ஷேவாக்கை தலைவராகக் கொண்ட ஜெமினி அரேபியன்ஸ் அணி சம்பியனாகியது.

டுபாயில் நேற்று முன்தினம் நடந்த இறுதிப் போட்டியில் லாரா தலைமையிலான லியோ லயன்ஸ் அணியை 16 ஓட்டங்களால் வீழ்த்தியே சம்பியன் பட்டத்தை சூடிக் கொண்டது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற லியோ லயன்ஸ், முதலில் துடுப்பெடுத்தாட ஜெமினி அரேபியன்ஸ் அணியை பணித்தது.

இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய ஜெமினி அரேபியன்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரகள் நிறைவில் 7 விக்கெட் இழந்து 130 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது.

துடுப்பாட்டத்தில் ஜஸ்ரின் கெம்ப 31, சங்கக்கார 31, லேவி 21 ஓட்டங்களை தமது அணி சார்பில் அதிகபட்ச ஓட்டங்களாக எடுத்தனா்.

பந்துவீச்சில் லயன்ஸ் அணி சார்பில் எட்வேர்ட்ஸ், ஸ்டைரிஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினா்.

131 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலெடுத்தாடிய லியோ லயன்ஸ் 19.3 ஓவா்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 114 ஓட்டங்களை மட்டுமே எடுத்து 16 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பில் ஆரம்ப வீரர் மார்ஷல் 46, அணித் தலைவர் லாரா 25 பந்துகளில் 28 ஓட்டங்களை அதிகபட்ச ஓட்டங்களாக எடுத்தனா்.

ஜெமினி அரேபியன்ஸ் சார்பில் பந்துவீச்சில் அசத்திய ராணா நவீட் அல் ஹசன் 4, மில்ஸ் இரண்டு விக்கெட்டுக்களை கைப்பற்றினா்.

போட்டியின் ஆட்டநாயகனாக நவீட் அல் ஹசன் (ஜெமினி அரேபியன்ஸ்), போட்டித் தொடரின் நாயகனாக சங்கக்கார (ஜெமினி அரேபியன்ஸ்) தெரிவாகினா்.

## அநீதிகளின் அதி உச்சத்திலேயேதான்...

உரையாற்றிய போதே, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தனதுரையில் குறிப்பிடுகையில், இலங்கையில் கடந்த 30 ஆண்டு காலமாக கொடிய யுத்தம் இடம்பெற்றிருந்தது.

நான் நாடாளுமன்ற உறுப்பினராக 26 ஆண்டுகளுக்கு முன்பாக தெரிவு செய்யப்பட்ட நேரத்தில் காணப்பட்ட பிரச்சினைகள் தற்போதும் தீர்க்கப்படாமலேயே உள்ளன. மக்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் உயிர் வாழும் உரிமை பாதுகாக்கப்படாமை வருத்தம் அளிக்கின்றது.

நாம் 26 ஆண்டுகளுக்கும் அதிக மான காலப்பகுதியில் யுத்தத்திற்கு முகம்கொடுத்து வந்துள்ளோம்.

ஏன் அந்த நிலை தோன்றியது? ஏன் வடக்கின் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தினர்? என்பதை முறையாகக் கண்டறிய வேண்டியது காலத தின் கட்டாயம்.

அவர்களுக்கு இடம்பெற்ற எல்லையில்லா அநீதிகளுக்கு முகம் கொடுக்க முடியாத கட்டத்திலேயே அவர்கள் ஆயுதம் ஏந்தினர். வடக்கிலும், தெற்கிலும் வாழும் சகலருக்கும் நீதியான சமூகம் ஒன்றே தேவைப்படுகிறது. அதற்காக சக வாழ்வையும் ஒற்றுமையையும் நாட்டில் உருவாக்க வேண்டும்.

அன்று தெரிவு செய்யப்பட்ட சில மாவட்டங்களில் மட்டுமே உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டன.

அந்த நிலைப்பாட்டில் எமது அரசாங்கம் தனது நடவடிக்கைகளை எடுக்காது. அபிவிருத்தியின் பயனை சகலரும் அனுபவிக்கும் வகையில் நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் சம அளவிலான அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படும்.

நாட்டில் வறுமை மிகப்பெரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது அதிலிருந்து மக்களை மீட்டெடுத்து அவர்களை பொருளாதார மட்டத்தில் மேம்படுத்தும் நோக்கத்திலேயே எமது அரசாங்கம் செயற்படுகின்றது என ஜனாதிபதி உரையில் தெரிவித்தார். (செ-12)

## பஷிலின் மற்று...

வினால் மேற்கொள்ளப்பட்ட மற்றுமொரு ஊழல் மோசடி சம்பவமொன்று வெளிக்கொண்டு வரப்பட்டுள்ளது.

ஊவா மாகாணசபைத் தேர்தல்களின் போது அப்போதைய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஷில் ராஜபக்ஷவின் உத்தரவிற்கு அமைய இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை 5.22 மில்லியன் ரூபாய் பெறுமதியான 8 ஆயிரம் ரீசேட்கள் தைக்கப்பட்டுள்ளன.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்கு பிரசாரம் தேடும் நோக்கில் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை இந்த பணத்தை செலவிட்டுள்ளது.

2014-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27-ம் திகதி உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு இந்த ரீசேட்கள் தைக்கப்பட்டுள்ளன.

ஊவா மாகாணசபைத் தேர்தல் களின் போது பிரசார நோக்கங்களுக்காக இலத் திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களுக்காக 25.29 மில்லியன் ரூபாய் செல விடப்பட்டுள்ளது.

இந் நிலையில் இந்த சம்பவம் குறிதத விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (செ-12)

## சர்வதேச நாணய நிதியத்...

இவர்கள் கொழும்புக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

கடந்த ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதி இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக இந்த 250 பில்லியன் டொலர்கள் பெறுமதியான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

ஆயினும், இந்த வேலைத்திட்டங்கள் தொடர்பிலான அனுமதியை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அப்போதைய அரசாங்கம் திறைசேரி மற்றும் உரிய கட்டமைப்பிலிருந்து பெறவில்லை எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், இது தொடர்பில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் சட்ட ஆய்வு மற்றும் கணக்கீட்டு அதிகாரிகள் கொண்ட குழு ஆராய்ந்து தமது அறிக்கையை இலங்கை அரசாங்கத்துக்கு கையளக்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதேவேளை, இலங்கையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற நிதிமோசடிகள் தொடர்பான வசாரணைகளுக்கு உதவி வழங்க அமெரிக்கா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளும் முன்வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-12)


17 ஆம் ஆண்டு
நினைவஞ்சலி



தோற்றம் 1922 - 01 - 01
மறைவு 1999 - 02 - 23
ஸ்ரீமான்
சின்னையா நல்லையா
(6-ம் வட்டாரம், மண்டைதீவு)
ஐயா! உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
(திதி : மாசிமாதத்து பூர்வபட்ச அட்டமி)
21/3A, இந்து மகளிர் ஒழுங்கை,
கந்தர்மடம்.
- குடும்பத்தினர் -


## ஆங்கிலேயர் சிங்களவரிடம்...

படுத்தப்பட்டு, ஒதுக்கப்பட்டிருந்தது.

போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் நியாயமான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று ஜெனிவாவில் இணக்கப்பாடு கண்டதன் அடிப்படையில் தற்போது இலங்கை மீண்டும் சர்வதேச கௌரவத்தை பெற்றுள்ளது.

எனவே இது தொடர்பாக அனைவரும் ஏற்றுக்கொள்ளத்தக்கதான நியாயமான விசாரணை நடத்தப்படுவதன் ஊடாக மட்டுமே இலங்கை தனது கௌரவத்தை தொடர்ந்தும் தக்க வைத்துக்கொள்ள முடியும்.

நாம் அனைவரும் இலங்கையர் என்பதில் கருத்து வேறுபாடு இல்லை. ஆனால் இனத்துவ ரீதியில் தனித்துவமானவர்கள்.

அதன் காரணமாக தமிழர்களுக்கு தனியான பிரதேச சுயாட்சி வேண்டும். அதற்கு ஈடான அதிகாரத்தை ஏனைய சிங்களப் பகுதிகளுக்கும் வழங்குவதில் தவறில்லை.

அந்நியர் இந்நாட்டை ஆக்கிரமிக்க முன்னர் இந்நாட்டு கண்டி ராஜ்ஜியம், கரையோர ராஜ்ஜியம், தமிழர் ராஜ்ஜியம் என மூன்று தேசங்களாக ஆளப்பட்டிருந்தது. 1833-ம் ஆண்டு ஆங்கிலேயர் ஒட்டுமொத்த நாட்டையும் ஒரே தேசமாக மாற்றி அமைத்தனர்.

அதன் பின்னர் இலங்கைக்கு சுதந்திரம் வழங்கப்படும் போது தமிழரின் நாடும் சிங்களவரின் கையில் கையளிக்கப்பட்டு விட்டது. அதனையே இப்போது நாங்கள் திருப்பிக் கேட்கின்றோம்.

சமஷ்டி அடிப்படையிலான தீர்வின் மூலமாக நாங்கள் தொடர்ந்தும் சிங்களவருடன் சேர்ந்து வாழவே விரும்புகின்றோம் என்றும் சம்பந்தன் தனது நேர்காணலில் தொடர்நதும் தெரிவித்துள்ளார். (செ-12)


மணிவிழா வாழ்த்து



“பொன்மனச் செம்மல்”
“மனிதநேய ஈகையாளன்”
“கல்விக் காருண்யன்”
என்னும்
கௌரவப் பட்டங்களைப்
பெற்ற
உயர்திரு.
E.S.P. நாகரத்தினம்
அவர்களின்
மணிவிழா சிறக்க எமது வாழ்த்துக்களைத்
தெரிவித்துக் கொள்வதில் மகிழ்வடைகின்றோம்.
வாழ்த்துவோர்:
பழைய மாணவர் சங்கம்
இணுவில் இந்துக் கல்லூரி
(C-3752)



அன்பு வாசகர்களே!
உங்களுக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்
நீங்கள் அறிந்த
❖ செய்திகள்
❖ புகைப்படங்கள்
❖ நிகழ்வுகள்
❖ பேசும் படங்கள்
Viber



போன்றவற்றை வலம்புரியில் வெளிவரச்
செய்வதற்கு உங்கள் கைத்தொலைபேசியில்
உள்ள VIBER செயலி மூலம் தகவல்களை
இலகுவாக பரிமாறிக் கொள்ளுங்கள்.
VIBER செயலி இல.
076 636 3378



VACANCY IN MALAYSIA
ரெஸ்ரோறன்டில் ஆண்களுக்கான உடனடி
வேலைவாய்ப்பு. (50 ஊழியர்கள் தேவை)
சம்பளம் - RM 1000 (1RM=35 RUPEE)
யாழ்ப்பாணம் 0722269873 0722270117
அடிப்படை நிபந்தனைகள்
- 3 வருடகால ஒப்பந்தம்
- தங்குமிடம் வழங்கப்படும்
- மருத்துவ செலவு.போக்குவரத்து செலவு வழங்கப்படும்.
- ஒப்பந்த காலம் முடிந்தபின் திரும்ப வருவதற்கான பயணச்சீட்டு வழங்கப்படும்.
- 2 நேர சாப்பாடு வாழங்கப்படும்.
- வேலை நேரம் கிழமைக்கு 48 மணித்தியாலங்கள் (ஒரு நாளுக்கு 8 மணித்தியாலங்கள்)
- வயது எல்லை 21-35.
- ஏனைய அனைத்தும் மலேசிய தொழில் சட்டத்தின் கீழ் அமையும்.
- மேலதிக வேலை நேரத்திற்கு மாதத்திற்கு RM562 வழங்கப்படும்.

Licence No-1216 Job order no- AL/1216/32/16 SLBFE Approved Charged Rs - 90,000/-
SIO INTERNATIONAL
RECRUITMENT AGENCY
NO-77, FIRST FLOOR, PEOPLE'S PARK SHOPPING COMPLEX, GAS WORKS STREET, COLOMBO-11, SRI LANKA.
Hot Line – 0727977977, 0722222377, 0722269876
(3598)



சிகரம் மூலம் விண்ணப்பித்தவர்
கனேடிய Lambton College
அனுமதி பெற்றார்!
Student Visa தொடக்கம் PR வரையில் பெற்றுக்கொள்ள
வாசல் திறக்கிறது
CANADA
அனுபவம் வாய்ந்த கனேடிய குடிவரவு முகவர்கள் ஊடாக...
Student Visa
Express Entry Visa
O/L or A/L உடன் Diploma / Degree கற்கைநெறி நிறைவில்
தொழில் வாய்ப்புடன் குடியுரிமை (PR)
Degree / Diploma உடன் 1 வருட தொழில் அனுபவம் உள்ளவர்கள்
கனேடிய No.1 பல்கலைக்கழகங்களான
UNIVERSITY OF TORONTO
YORK UNIVERSITÉ UNIVERSITY
மற்றும்
George Brown College - Toronto, Niagara College - Ontario
(C-3753)
SIKARAM VISA SOLUTIONS
மேலதிக விபரங்களையும் ஏற்கனவே விண்ணப்பித்து பயனடைந்தவர்கள் பற்றியும் அறிந்துகொள்ள
EXPERIENCE 7 YEARS EXPERIENCE
www.sikaram.lk
Tel: 0777 32 4004 , 021 222 00 11
இல.275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்தில் இருந்து 100m


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.02.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.